

# கலை இலக்கியப் பெருவிழா

# சிறப்பு மலர்

2006

வெளியீடு

கலாசாரப் பேரவை

வேலணை பிரதேச செயலகம்

யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலை இலக்கிய பெருவிழா

# சிறப்பு மலர்

**வெளியீடு:**

கலாசாரப் பேரவை,
வேலணை பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்

2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலரின் இதழ்களாக.......


01) அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி 01

02) வடக்குகிழக்கு மாகாண பிரதம செயலரின் வாழ்த்து 03

03) மேலதிக அரசாங்க அதிபரின் வாழ்த்து 04

04) வடகிழக்கு மாகாண பிரதி பிரதம செயலரின் வாழ்த்து 05

05) தீவகம் தெற்கு பிரதேச செயலரின் வாழ்த்து 06

06) இதழாசிரியரின் இதயத்திலிருந்து...... 07

07) தீவுப்பகுதி தெற்கின் இடஞ்சார்பு அபிவிருத்தித் திறமுறைகள் 08

08) புங்குடுதீவு சமயமும் பண்பாடும் - சில குறிப்புகள் 39

09) குடிநீர் தேடும் தீவகம் 46

10) வேலணைச் சாட்டிக் கிராமத்தின் பூர்வீக மக்களும் பண்பாடும்
- சில தொல்லியற் சான்றுகள் 51

11) பொன்கொடு தீவின் நீர் வளம் மேம்பட..... 62

12) பண்டிதர் கா.பொ.இரத்தினம் அவர்கள் பற்றி..... 66

13) கலை விருது பெறுவோர் 68

அ) பேராசிரியர் பொன்னுத்துரை பாலசுந்தரம்பிள்ளை

ஆ) பேராசிரியர் இலக்கியக் கலாநிதி விநாயகமூர்த்தி சிவசாமி

இ) திருமதி.ஸ்ரீரங்கராணி இராமச்சந்திரன்

ஈ) திரு.சுப்பிரமணியம் வில்வரத்தினம்

உ) கலாநிதி செல்லையா திருநாவுக்கரசு

ஊ) திரு.மருதன் கந்தையா

எ) பசிக்கவி சிவகுரு பரராசசிங்கம்

ஏ) திரு.சிவப்பிரகாசம் இரத்தினசபாபதி

14) உளமார்ந்த நன்றிகள் 79



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



மக்கள் சேவையே மகேசன் சேவை என்பர். பொதுமக்களுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு அவர்களது துயரில் பங்கெடுத்து, தேவைகளை உணர்ந்து, நிறைவு செய்து பிரதேச மக்கள் நன்னிலையடைவதனால் செயல்திறன் பெறுவன பிரதேச செயலகங்கள். இவ்வகையில் மக்களோடு மக்களாக வாழ்ந்து அவர்களது உணர்வுகளை வெளிக்கொணரும் கலை இலக்கியப் படைப்புக்களை ஊக்குவிக்கவும், கலைஞர்களை அடையாளம் கண்டு கௌரவிக்கவும் வேலணைப் பிரதேசசெயலகம் முன்னின்று செயற்படுவது பாராட்டிற்குரியது.

எமது பண்பாடு, கலாசாரம் அடுத்த சந்ததிக்கு கையளிக்கப் படுவதை உறுதி செய்வதும் ஒவ்வொருவரும் தங்களிடமுள்ள திறமை களைத் தாமே அடையாளம் காணவும், வெளிக்கொணரவும் வகை செய்து பிரதேச அபிவிருத்திக்குப் பெரும்பங்காற்ற வகைசெய்வன இவ்வாறான விழாக்கள்.

கணிசமான தொகையினரின் ஆற்றல்கள் மேம்படுத்தப்பட்டு கலைஞர்களாக அங்கீகரிக்கப்படுவதோடு பிரதேச மக்கள் அனைவரையுமே மகிழ்ச்சிப்படுத்தி செயல் முனைவு அதிகரிக்க இவ்விழா துணைபுரியும்.

அரசாங்க சேவையில் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பட்டதாரிகளில் பலர் பல்வேறு துறைகளில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களாக நியமனம் பெற்றுள்ளனர். இவர்கள் ஒவ்வொருவரும் வினைத்திறனுடனும், செயலார்வத்துடனும் துறைசார் நிகழ்ச்சித் திட்டங்களை அடையாளம் காணவும், நடைமுறைப்படுத்தவும் ஊக்கத்துடன் செயற்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சித்திட்டங்கள் கருத்திட்டங்களாக நிலையான அபிவிருத்தித் திட்டங்களுக்கு அடித்தளம் அமைப்பனவாக அமைய வேண்டும்.

அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட நிர்வாகச் செயற்பாட்டிற்கு எடுத்துக் காட்டாக கலை கலாசாரச் செயற்பாடுகள் உட்பட அனைத்துத் துறையிலும் வேலணை பிரதேச செயலர் பிரிவு முன்னேற வாழ்த்துகிறேன். கடலால் சூழப்பட்ட இப்பிரதேச செயலர் பிரிவில் கடல் வளத்தால் பொருள் வளம் பெருகவும், கடலட்டை உட்பட கடலுணவு வகைகள் ஏற்றுமதி செய்யப்படவும், நவீன தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தி சந்தை வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்வதோடு யாழ் மாவட்ட மக்களின் போசணை மட்டத்தை உயர்த்துவதில் இப்பிரதேசம் பங்காற்ற முடியும்.

உல்லாசப் பயணிகளின் கவனத்தைக் கவரவும் இப்பிரதேசத்தில் வாழும் ஒவ்வொரு சகலு துறைகளிலும் தன்னிறைவு அடையவும் சாட்டிமாதாவும், நயினை நாகபூஷணியும் அருள் செய்வர்.

தேசிய மட்டப் போட்டிகளில் முதன்மைபெறும் வகையிலும் பிர்தேச செயலகத்தின் வினைத்திறன் விதந்து போற்றப்படும் வகையிலும் ஒவ்வொருவரும் ஊக்கத்துடன் உழைக்கவும், திரைகடலோடித் திரவியம் தேடும் இம்மக்களது மெல்லுணர்வுகளை வெளிக்கொணரும் வகையில் கலாசார நிகழ்வுகள் மேன்மையுறவும் வாழ்த்துகிறேன்.

**க.கணேஷ்,**
**அரசாங்க அதிபர்,**
**மாவட்டச் செயலர்,**
**மாவட்ட கலாசார பேரவை தலைவர்,**
**யாழ். மாவட்டம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி



தீவகம் தெற்குப் பிரதேச செயலகம் ஏற்பாடு செய்து நடாத்தும் 2006ஆம் ஆண்டு கலாசார விழவிற்கு இவ்வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழர் கலாசாரத்தை பரம்பரை பரம்பரையாகப் பேணி பக்குவமாகப் பாது காத்து வருவதில் பலர் தம்மை முழுமையாக அர்ப்பணித்து வருகின்றனர். காலத்தால் அழியாத காவியங்களாக, கண்கள் மூலம் கருத்தைக் கவரும் ஓவியங்களாக ஆவணப்படுத்தியும், இயல், இசை, நடனம், நாடகம், நாட்டுக்கூத்து ஆகிய கலை நிகழ்ச்சிகள் மூலம் நமது கலாசாரத்திற்கு உயிரூட்டிக்கொண்டிருப்பவர்கள் கலைஞர்கள் தான். இவர்களுடைய ஆக்கப் பணிகளால் தான் தமிழர் கலாசாரம் வாழ்கிறது, வளர்கிறது. இத்தகைய கலைஞர்களையும், வித்தகர்களையும் அவர்கள் வாழும்போதே கௌரவித்து ஊக்குவிக்கும் செயல் இந்த விழாவில் இடம்பெறுவது பாராட்டிற்குரியது.

இந்த விழா சிறப்பாகவும், பயனுள்ளதாகவும் அமைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

திரு.சி.ரங்கராஜா,
வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளர்,
தலைமைச் செயலாளரின் செயலகம்,
வடக்கு - கிழக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலதிக அரசாங்க அதிபரின்

# வாழ்த்துச் செய்தி



தீவகம் தெற்கு பிரதேச செயலகத்தால் 08.04.2006 சனிக்கிழமை அன்று கலாசார விழா நடாத்தப்படுவதையிட்டு எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது கலைகள், கலாசாரப் பாரம்பரியங்களை சமூகம் பேணுமாறு ஊக்குவித்தல் வேண்டும். இளம் சந்ததியினரையும் அதற்குத் தயார் செய்தல் வேண்டும். இவ்வகையில் சென்ற வருடம் ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாண மாவட்ட கலை கலாசார பேரவை கலைத் தொண்டாற்றிய கலைஞர்களை அடையாளம் காண்பதையும் அவர்களைப் பற்றிய விபரங்களைத் திரட்டி ஆவணப்படுத்துவதையும் முக்கியமான தொரு பணியாக உணர்ந்து செயற்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. இப்பேரவையுடன் இணைந்து செயற்படும் பிரதேச கலாசார பேரவை களும் இத்தகைய பணிகளில் ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. தீவகம் தெற்கு பிரதேச கலாசார பேரவையும் இத்தகைய நற்பணிகளைச் செய்து வருவதுடன் கலைஞர்களைக் கௌரவிக்க இருப்பதையும் மனதாரப் பாராட்டி இந்நிகழ்வு சிறக்க வாழ்த்துகிறேன்.

ஆ.சிவசுவாமி,
மேலதிக அரசாங்க அதிபர்,
கலாசார பேரவை பிரதித்தலைவர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடகிழக்கு மாகாண பிரதி பிரதம செயலர் (நிதி) திட்டமிடல் பணிப்பாளரின்

# வாழ்த்துச் செய்தி



பல்வேறு இடர்ப்பாடுகள் சூழ்ந்த இந்தக் காலத்தில் தெற்கு தீவக பிரதேச மக்களின் உள, உடல், ஆரோக்கியத்தைப் பேணும் வகையில் இக்கலை இலக்கியப் பெருவிழாவானது இவ்வாண்டின் முதல் விழாவாக அமையப் பெறுவது சிறப்பானதாகும். அந்த வகையில் தீவக மக்கள் ஒவ்வொரு பிரஜையினதும் கலாசார, பண்பாட்டு அம்சங்களும் சுய தேசிய வுணர்வும் மேம்படும் என்பதில் ஐயம் இல்லை.

மேலும் மனிதனை மனிதனாக வாழவழி சமைப்பது கலைகள் என்றால் மிகையாகாது. கலைகளே மனிதனை பூரணப்படுத்துகின்றன, பண்படுத்துகின்றன. அந்த வகையில், பொது மக்களுடன் மிக நெருங்கிய உறவு கொண்டு அவர்களை வழிநடத்தி செல்வதிலும், அவர்களது தேவைகளை நிறைவேற்றுவதும் பிரதேச செயலகர்களின் கடமையாகின்றன. இக்கடமையை செவ்வனே செய்து வருகின்ற வேலணை பிரதேச செயலகமானது, கலை இலக்கியப் பெருவிழா, மற்றும் இச்சிறப்பு மலர் வெளியீடு செய்வதும் சாலச் சிறந்ததே. அந்த வகையில் இப்பிரதேச செயலக அலுவலர்களுக்கும், தெற்கு தீவக மக்களுக்கும் மற்றும் கலைஞர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு.K.மகாலிங்கம்,<br>
பிரதி பிரதம செயலர் (நிதி),<br>
நீர் திட்டப் பணிப்பாளர்,<br>
வடகிழக்கு மாகாணசபை,<br>
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவகம் தெற்கு பிரதேச செயலரின்

# வாழ்த்துச் செய்தி



தீவகம் தெற்கு பிரதேச செயலகம் முன்னெடுக்கும் 2006 ஆம் ஆண்டின் கலை, கலாசாரப் பெருவிழாவின் போது வெளிவரும் இம்மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதனை முன்னிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மண்டைதீவு தொடங்கி நயினாதீவு ஈறாக பல்வேறு தீவுக்கூட்டங்களை சேர்ந்த மக்கள் மத்தியில் பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களின் சான்றாக நின்று ஒளிரும் கலை, கலாசாரத்தினை பேணி வளர்க்கவென கொண்டாடப்படும் இவ்விழாவில் இம்மலர் ஓர் ஆவணமாக திகழும் என்பதில் ஐயமில்லை.

உலகம் தோன்றிய காலம் தொடக்கம் நாகரிகங்களும், பேரரசுகளும் தோன்றி மறைந்தாலும் கூட அந்தந்த கால மக்களின் வாழ்வியற் சின்னங்களாக அமையும் கலைகளும், கலாசாரமும் மறைவதுமில்லை மடிவதுமில்லை. அழியாத் தன்மை கொண்ட கலைகள் காலத்தின் மாற்றத்திற்கேற்ப புதுப்புது வடிவங்களை பெறுகின்றனவே ஒழிய புதிதாய் தோன்றுவதில்லை.

பண்டைய காலத்தில் கலைகள் மக்களை ஒன்று சேர்க்கும் கருவிகளாகத் திகழ்ந்திருந்தன. கிராம மக்கள் மத்தியில் பள்ளிகளும், பாடங்களும் இடம்பிடிக்காத காலகட்டத்தில் நிலவி வந்த கலைகளும் இலக்கியங்களும் இன்று நாம் கண்டு வியக்கத்தக்கதாய் உள்ளன. உணர்ச்சிகளை தூண்டி புலன்களை நுண்ணுணர்வுடன் வளர்க்கும் தன்மை கொண்ட கலைகள் மனதை பண்படுத்தவும் வல்லன. அது மனித வாழ்வை செம்மைப்படுத்தும் பெரும் பொறுப்பைச் சுமந்துள்ளது.

கலைகளின் ஆற்றலும் ஆளுமையும் போற்றப்பட வேண்டியதன் அவசியம் கருதியே இக்கலைகலாசார விழா கொண்டாடப்படுகிறது. அத்தினத்தில் பிரசவிக்கும் இம் மலரையும் வாழ்த்தி அமைக்கின்றேன்.

மு.நந்தகோபாலன்,
பிரதேச செயலர், பிரதேச கலாசார பேரவைத் தலைவர்,
பிரதேச செயலகம், வேலணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பிரதேச செயலர்



திரு. மு. நந்தகோபாலன் *(S.L.A.S)*



மலர்க் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க் குழு

**இடமிருந்து வலம்**

1. திரு. இ.பரமேஸ்வரன்
2. திரு.கா.ஐங்கரவேல்
3. திரு. கா. சிவஞானம்
4. திரு.அ.சிவஞானசீலன்
5. திரு. கு. அற்புதராஜா
6. திரு. சி. சிறிதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர் இதயத்திலிருந்து.......



வேலணைப் பிரதேசத்தின் பண்பாட்டம்சங்களையும் சிறப்புக்களையும் பதிவு செய்து வெளிப்படுத்துகின்ற முயற்சியின் ஓர் அங்கமாக, அமைந்த "கலை இலக்கியப் பெருவிழா - 2006" எனும் நிகழ்ச்சியிலே சிறப்புமலர் ஒன்றினை வெளிக்கொணர்வதென்பது தவிர்க்க முடியாத ஒரு தேவையாக இனங்காணப்பட்ட பொழுது; அதற்கு உருக் கொடுத்து உணர்வூட்டியவர்கள் பலர். இவர்களுக்கு சிரம் தாழ்த்தி வணக்கம் செலுத்துகின்றோம்.

எந்தவொரு விடயத்தை எடுத்துக் கொண்டாலும் முதலில் தேவைப்படுவது அல்லது தேடப்படுவது வரலாறே ஆகும். அந்த வகையில் கலை இலக்கியப் பெருவிழா - 2006 இனது வரலாறாகவும் இப்பிரதேசத்தின் வாழ்வியலம்சங்கள் சிலவற்றை பதிவு செய்துள்ள ஆவணமாகவும் விளங்குகின்ற இச்சிறப்பு மலர் இங்கு ஒரு முக்கியமான அம்சமாக விளங்குகின்றது.

பொதுவாக பண்பாடு என்பது ஒருவருக்கு அல்லது குறித்த ஒரு பிரதேசத்திற்கு என்று தூய தனித்துவமுடைய ஒரு விடயமாக இருப்பதில்லை என்றும், அது மனித குலங்களுக்கிடையில் பரிமாற்றம் பண்ணப்பட்டுப் "புடம்' போடப்பட்டு வருகின்ற ஒரு சொத்து என்றும் கூறப்படுகின்ற போதிலும்; எமது பண்பாட்டின் அடையாளங்கள் என்று சொல்லப்படக்கூடிய இன்னோரன்ன அம்சங்களையும் இப்பிரதேசத் திற்குத் தனித்துவமாக உரியதென இனங்காணப் படக்கூடிய வேறு சில அம்சங்களையும் வெளிக்கொணர்வதில் இம்மலரும் தன்னளவிலான பங்களிப்பை நல்கி நிற்கின்றது. அதாவது இச் சிறப்பு மலர் சுமந்து வருகின்ற விடயங்களிற்குரிய விமர்சனம் என்பது இந்த வெளியீட்டின் வெற்றிக்கான குறிகாட்டிகளாகவே கருதப்படுகின்றது.

நிறைவாக, மிகமிகக் குறுகிய காலத்தில் விழாவினையும் மலரினையும் முன்னெடுப்பதற்கு அயராது உழைத்த எமது பிரதேச செயலருக்கும், அவரது கோரிக்கைகளை ஏற்று வழங்கிய நன்கொடையாளர்க்கும், செய்திகளையும் கட்டுரைகளையும் வழங்கியுதவிய பெரியார்களுக்கும், எம்தோளோடு தோள் நின்று சிறப்புற உழைத்த சக உத்தியோகத்தர்களுக்கும், அச்சகத்தினருக்கும், இவ்வாறே தொடர்புபட்ட அத்தனை பேருக்கும் மலர்க்குழுவினரின் இதயம் நிறைந்த நன்றிகள்.

வே. அ. சிவஞானசீலன் M.A.(Culture)
பண்பாட்டலுவலர், பிரதேச செயலகம்,
வேலணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீவுப்பகுதி தெற்கின் இடஞ்சார்பு அபிவிருத்தித் திறமுறைகள்

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
சிரேஸ்ர புவியியற் பேராசிரியர்
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணக் குடாநாடு தனித்த ஒரு புவியியற் பிரதேசமாகக் காணப் படினும் நுணுக்கமாக நோக்கின் தீவுப் பகுதி, வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், பெரிய யாழ்ப்பாணம் ஆகிய குடா நாட்டுப் பிரிவுகள் தமக்கேயுரிய புவியி யற் பண்புகளையும், அபிவிருத்தியில் பிரச்சினைகளையும் கொண்டு காணப் படுகின்றன. ஒரு பிரதேசத்தின் அபிவி ருத்தியில் எவ்வாறு துறைசார் அபிவி ருத்தி முக்கியமோ அவ்வாறே அப்பிரதே சத்தின் இடஞ்சார் அபிவிருத்தியும் முக்கியமானதாகும். இருதுறைகளுக்கு மிடையே நெருங்கிய தொடர்பற்ற அபிவிருத்தித் திட்டம் வெற்றிதராது. மேலும் தரமான, சரியான இடஞ்சார்பு அபிவிருத்தியுடன், பௌதிக அபிவிருத் தித்திட்டமும் சேரும்பொழுது தான் குறிப்பாக அவ்வப் பிரதேசங்களில் காணப்படும் இயற்கை வளங்கள் நல்ல முறையில் பயன் பாட்டுக்கு உதவும்.

தீவுப்பகுதி சமூக பொருளாதார ரீதியில் நீண்டகாலமாகப் பின்தங்கி நின்று, யாழ்ப்பாண நகருக்கும், தீவுப்பகுதிக்கும் இடையே 1961 ஆம் ஆண்டு வீதி அமைக்கப்பட்ட பின்னரே ஓரளவு அபிவிருத்தியடையத் தொடங் கியது. தீவுப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்ட அபிவிருத்திக்கு ஏற்ப பிரதேசம் வளர்ச்சியடையவில்லை. இதனால் அபிவிருத்தியில் ஓர் இடை வெளி ஏற்பட்டுள்ளது. இந்நிலை காரணமாக சமூக பொருளாதார ரீதியில் குறிப்பாகக் கல்வியில், வர்த்தகத்தில் முன்னேறிய குடும்பங்கள் யாழ்ப்பாண நகருக்கு இடம் பெயர்ந்து சென்றன. குடாநாட்டுக்குள் எவ்வாறு தீவுப்பகுதி தனிப்புவியியல் பண்பைக் கொண்டு விளங்குகின்றதோ அவ்வாறே தீவுகள் ஒவ்வொன்றிலும் அபிவிருத்திப் பிரச்சி னைகள் தனித்தன்மை கொண்டன வாகக் காணப்படுகின்றன.

தீவுகளின் பொருளாதாரம் 1960 களுக்கு முன்னர் விவசாயம், மீன்பிடி குடிசைக்கைத்தொழில்களை அடிப் படையாகக் கொண்டிருந்தது. இன்று முதனிலைத் தொழில்களில் கிடைக்கும் வருமானத்தின் முக்கியத்துவம் குறை வடைந்து வர்த்தகமும், பிற நாடுகளி லிருந்து அனுப்பும் பணமும், அரச சேவைகளிலிருந்து கிடைக்கும் வருமான மும் முக்கியமடைந்துள்ளன. விவசாய மும் மீன்பிடியும் இன்றும் பிரதான தொழில்களாக இருப்பினும் விவசாய நடவடிக்கை குறைவடைந்து நிச்சயமற்ற தன்மைக்குச் செல்வதையும் காணமுடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. விவசாயத்தில் புதிய நுட்பங்கள், புதுப்பயிர்கள், கைக் கொள்ளப்பட்டு நிலம் துண்டாடப் படுவது நிறுத்தப்பட்டு அவற்றினை இணைக்கும் முயற்சிகள் மேற் கொள்ளப்படாவிடின் தீவுப்பகுதி யின் விவசாய நடவடிக்கை வருங் காலத் தில் வீழ்ச்சியுறலாம். ஆயினும் விவசா யத்தில் தங்கியிருப்போரின் எண் ணிக்கை குறைந்து வருவது நல்ல தொரு போக்கெனலாம். ஏற்கனவே நயினாதீவு, எழுவைதீவு, நெடுந்தீவு போன்ற இடங் களில் விவசாய நடவடிக்கை மிகவும் குறைவுற்று மக்கள் வர்த்தக, சேவைத் தொழில்களில் ஈடுபடுகின்றனர். வேலணைத்தீவு மண்டைதீவு ஆகிய வற்றில் இன்றும் விவசாயம் ஓரளவு முக்கியம் பெற்றுள்ள தெனலாம்.

தீவுப்பகுதியில் பாரம்பரிய மீன் பிடிக் குடியிருப்புக்களே காணப்படு கின்றன. இத்தகைய மீன்பிடிக் குடியி ருப்புக்கள் குடா நாட்டில் அராலி, கொழும்புத்துறை, பெருநிலத்தில் பூநகரியிலும் காணப்படுகின்றன. தீவுப் பகுதி மீனவர்கள் பொருளாதார ரீதியில் மிகவும் பின் தங்கியவர்களாகவும், மிகவும் பழைய தொழில் நுட்பங்களைக் கையாளுபவர் களாகவும் இருக்கின்றனர். பண்ணைப்பாலம் அமைக்கப்பட்ட பின்னர் குடாநட்டைச் சேர்ந்த மீனவர் கள் குறிப்பாக நாவாந்துறை, கரையூர் மீனவர்கள், மண்டைதீவு அல்லைப்பிட் டிக்கு இடம் பெயர்ந்த மீனவர்கள் குறிப்பாக நாவாந்துறை, கரையூர் மீனவர்கள், மண்டைதீவு அல்லைப் பிட்டிக்கு இடம் பெயர்ந்து மீன்பிடியில் ஈடுபவடுவதுடன் குறிப்பிடத்தக்க தொகையினர் அங்கு நிரந்தரமாக வாழ்ந்தும் வருகின்றனர். புங்குடுதீவு, நெடுந்தீவு பகுதிகளுக்கு பருவகால மீனவ இடப்பெயர்வுகள் இடம்பெறுகின்றன. யாழப்பாணம், நவாலி மற்றும் வலிகாமம் மேற்குப் பிரிவைச் சேர்ந்த இறால் தொழிலாளர் கள் பண்ணை, புங்குடுதீவு கடற்பரப்புக் களில் தொழில் செய்கின் றனர்.

தீவுப்பகுதியின் குடிசன இயக் கத்தில் குடிவெளியேற்றம் முக்கியமான அங்கமாகவுள்ளது. 1450-1960க்கு இடைப்பட்ட ஆண்டுகளில் புங்குடுதீவு களில் இருந்து குறிப்பாக வருமானம் குறைந்த விவசாய குடும்பத்தினர் பெரு நிலப்பகுதி குடியேற்றத் திட்டங்களுக்கு இடம்பெயர்ந்தனர். இதேகாலத்தில் நயினாதீவு, புங்குடுதீவு வேலணையைச் சேர்ந்த மத்திய தரக் குடும்பங்களும், சேவைத்தொழிலில் ஈடுபட்டபிரிவி னரும், பெரிய யாழ்ப்பாணப் பகுதிக்கு இடம்பெயர்ந்து கொண்டிருப்பது குறிப் பிடத்தக்க அம்சமாகவுள்ளது. ஆரம்ப காலத்தில் தீவுப்பகுதியின் பொருளா தாரப் பின்னடைவே இடப்பெயர் வுக்குக் காரணமாகவுள்ளது. ஆனால் இப்பொழுது இக்குடும்பங்களே குடி வெளியேற்றத்தில் முக்கிய பங்கு வகிக் கின்றனர். பொருளாதார ரீதியில் முன் னேறிய குடும்பங்கள் தீவுப் பகுதியை அடிப்படையாகக் கொண்டு முன்னே றாது வெளிப்பொருளாதாரத்தின் மூலமே முன்னேறியவர்களாக உள்ள னர். இதனால் சமூக பொருளாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்திக்கு ஏற்ப உள்ளூர் அபிவிருத்தி ஏற்படாத காரணத்தால் இவர்கள் பின் தங்கிய கிராமிய வாழ்க்கையிலிருந்து விலகிநகர வாழ்வை நாடுகின்றனர்.

எல்லாத் தீவுகளுக்கும் பொதுவானதொரு திட்டத்திற்குள் ஒவ்வொரு தீவுக்குமுரிய தனிப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் முறையில் திட்டம் தயாரிப்பதுடன், நெடுந்தீவின் தனிமைத் தன்மையை நீக்குவதற்கான ஏற்பாடுகளையும் முக்கியமாகக் கருத்திற் கொள்ள வேண்டும்.

இப்பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்தியில் விவசாயம் எதிர் காலத்தில் அதிகளவு பங்கை வகிக்கக் கூடியதாக இல்லை. இதனால் சேவைத் தொழில் வருமானத்தை அடிப்படையாகக் கொண்ட விவசாயச் சார்பற்ற, கிராமக் குடியிருப்புக்களை அல்லது நகரக் குடியிருப்புக்களை விருத்தி செய்ய வேண்டியதாகவுள்ளது. நிலப் பயன் பாட்டில் வாழிட அபிவிருத்தியும் அத்துடன் தொடர்புடைய மெய்யான அபிவிருத்தியும் முக்கிய இடத்தைப் பெறவேண்டும்.

தீவுப்பகுதியின் இடஞ்சார்பு அபிவிருத்தியில் பின்வரும் திறமுறைகள் முக்கிய இடம் பெறல் வேண்டும்.

1. தீவுகளில் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு தீவுகளுக்கும் - குடா நாட்டிற்கும் இடையே போக்கு வரத்துத் துறையில் அபிவிருத்தி காணப்பட வேண்டும்.
2. தீவுகளுக்குள் பொதுவாக இருந்து வரும் சமூக பொருளாதார உறவினை மேலும் வலுப்படுத்த தீவுகளுக்கிடையிலான கடல்வழி, தரை வழிப்போக்குவரத்து அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.
3. தீவுப்பகுதிகளில் இடஞ்சார் அபிவிருத்தியைத் துரிதப்படுத்த குடிசன மீள் பரம்பல் நடவடிக்கை மேற் கொள் ளப்பட வேண்டும்.
4. தீவுப்பகுதிகள் எல்லாவற்றிற்கும் பொதுவானதொரு சேவை நிலையம் விருத்தி செய்யப்பட வேண்டும்.
5. ஒவ்வொரு தீவின் குடிசனத்தொகை, பொருளாதாரப் பண்பிற்கு ஏற்ப தனித்தனி சேவை நிலையங்களும் விருத்தி செய்யப்பட வேண்டும்.
6. வேலணைத்தீவின் கிழக்குக்கரைப் பகுதியில் புதிய குடியிருப்புக்களும் நகர்களும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.
7. புதிய குடியிருப்புக்களை அபிவிருத்தி செய்வதற்கும் போக்குவரத்து, மின்சாரம், குடிநீர் விநியோகம் போன்றவற்றின் வளர்ச்சிக்கும் புதிய பல பாதைகள் திறக்கப்பட வேண்டும்.
8. தீவுப்பகுதியில் காணப்படும் குறித்த சில நிலப்பரப்புக்களை குறிப்பிட்ட தேவைகளுக்கு ஒதுக்கும் நிலப்பயன் பாட்டுக் கொள்கை கடைப்பிடிக்கப் பட வேண்டும்.
9. சூழல் பாதுகாப்பிற்கும், இயற்கை வனப்பிற்கும் இடஞ்சார் அபிவிருத்தியில் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவுப்பகுதி சமூகப்பொருளாதார ரீதியில் நீண்டகாலமாகப் பின்னின்ற தற்குக் காரணம், இது பெருநிலப் பரப்புடன் போக்குவரத்துத் துறையில் கொண்டிருந்த நிலையாகும். தீவுப் பகுதி யின் அபிவிருத்திக்கு இதனைக் குடா நாட்டுடன் தொடர்புபடுத்தும் போக்கு வரத்துப் பாதையின் எண்ணிக் கையை அதிகரிக்கக நடவடிக்கை எடுக்க வேண் டும். இதில் வேலணைத் தீவிற்கும், குடாநாட்டுன் அராலித்துறை வழியாகப் பாதை நிர்மாணிக்கப்படவேண்டும். 1950 ஆம் ஆண்டுக்கு முன்னர் வேலணை க்கும் குடாநாட்டிற்கும் இடையேயான போக்கு வரத்தில் இப்பாதை முக்கியத்து வம் பெற்றிருந்தது. பண்ணைப்பால அமைப்பின் பின்னர் இதன் முக்கியத் துவம் குறைவடைந்தது. 1986, 1987 ஆம் ஆண்டுகளில் பண்ணைப்பாலம் தீவுப் பகுதிகளின் போக்குவரத்துக்கு மூடப் பட்ட போது தீவுப்பகுதி மக்கள் அராலித் துறை வழியாகவே யாழ்ப்பாணப் போக்குவரத்தை மேற்கொண்டர். இக் காலப் பகுதியில் அராலியில் இருந்து 300 அடி தூரமும், வேலணைப்பகுதியில் இருந்து 100 அடி தூரமும் கொண்ட பாதைகள் அரசாலும், வேலணையில் இருநது 750 அடி தூரமும் கொண்ட பாதைகள் பொதுமக்களாலும் அமைக் கப்பட்டன. 1987ஆம் ஆண்டு யூலைக்குப் பின்னர் இப்பாதை வேலை நிறுத்தப் பட்டு, இன்று கைவிடப்பட்ட நிலையிலி ருப்பதுடன் அமைக்கப்பட்ட பாதை களும் முழுமையாக நிறை வேற்றப்படா மையால் வானிலையினால் தாக்குண் டும், சமூக விரோதிகளால் பொருட்கள் அகற்றப்பட்ட நிலையிலும் காணப்படு கின்றன இப்பாதை அமைப்பில் தீவுகள் அபிவிருத்திக் கழகம் எடுத்த முயற்சிகள் வரவேற் கத்தக்கன.

இப்பாதை அமைக்கப்படுமாயின் தீவுகளுக்குப் பல நன்மைகள் கிட்டும். இது பண்ணைப்பாதைக்கு மாற்றுப் பாதையாக வருவதுடன், தீவுப்பகுதி களை வலிகாமம் மேற்கு நகரங்களான சங்கானை, மானிப்பாய், பண்டத்தரிப்பு ஆகியவற்றுடன் நெருங்கிய சமூகப் பொருளாதாரத் தொடர்புகளை வளர்க் கக்கூடியதான வாய்ப்புக்களை ஏற்படுத் தும். அராலிப்பாதை வழியாக வேலணை யிலிருந்து பண்டத்தரிப்பு 16கிலோமீற்றர் தொலைவாக இருக்க, வேலணையி லிருந்து யாழ்ப்பாணம் வழியாகப் பண்டத்தரிப்பின் தூரம் 27 கிலோ மீற்றராக உள்ளது. ஆகவே இப்பாதை அமைக்கப்படுமிடத்து வலிகாமம் பகுதித்தொழிலாளர் தீவுப்பகுதிக்குச் சென்று வரும் நிலை தோன்றுவதுடன் மற்றும் நயினாதீவுக்குப் போகும் யாத்திரி கர்களின் எண்ணிக்கையும் பல மடங் காக அதிகரிக்கலாம்.

வேலணைத்தீவையும் அராலியையும் பிரிக்கும் கடற்பரப்பு ஒருமைலுக்குச் சற்று மேலாக இருப்பதுடன் ஆழமற்ற ஒரு பரவைக்கடலாகவும் உள்ளது. இப்பாதை அமைப்பால் அராலிக் கடற்பகுதியில் மீன்வளம் குறையலாம் எனும் கருத்தை அராலி மீனவர்கள் முன்வைத்துள்ளனர் என்பது குறிப்பி டத்தக்கது. எனினும் மீனவ சமூக நலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணக்கூடிய முறையில் இப்பாதை அமைக்கப்பட வேண்டும். இவ்வாறு அமைப்பதும் சிரமமன்று.

தீவுகளுக்கு இடையேயான கடல்வழி, தரைவழிப் போக்குவரத்துக் களின் விருத்தியில்தான் தீவுகளின் ஒருமைப்பாடு பெருமளவில் தங்கியுள் ளது. இவ்வளர்ச்சியின் மூலம் ஏற்கனவே இருந்துவரும் சமூகப் பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவதுடன் மேலும் நிலைப்படுத்தலாம். இதற்குப் பின்வரும் பாதைகள், இறங்குதுறைகள் அமைப்பதில் கவனம் எடுக்கப்பட வேண்டும்.

1. மண்டைதீவு - அல்லைப்பிட்டிப் பாதை:- இப்பாதை தற்போது அபிவிருத்தியடையாத நிலையி லுள்ளது. எல்லாப் பருவகாலங்களி லும் பெரிய வாகனங்கள் போக்கு வரத்துச் செய்யக்கூடிய பெரிய பாதையாக இதனை அமைக்க வேண் டும். இப்பாதை திருத்தியமைக் கப்படின் இது வேலணைத்தீவையும் மண்டைதீவையும் இணைக்கவும், இவைகளுக்கூடாகப் போக்குவரத்து நடக்கவும்வழிவகுக்கும். தற்போது வேலணைக்கும் மண்டைதீவுக்கு மிடையே போக்குவரத்து வசதிகளி ன்மை குறிப்பிடத்தக்கது.
2. காரைதீவு நாரந்தனைப் பாதை: வேலணைத்தீவையும் காரைநகரை யும் தம்பாட்டி - தோப்புக்காடு ஆகிய இரு இடங்களையும் இணைப்பதன் மூலம் இப்பாதையை உருவாக்கலாம். இந்நீரிணை சற்று ஆழமாக இருப் பினும் மிக ஒடுக்கமாக இருப்பதால் இப்பாதை அமைப்பது சிரமமன்று. இப்பாதை அமைக்கப்படின் இவ்விருதீவுகளுக்குமிடையேயான போக்குவரத்து ஏற்படுவதுடன், ஊர்காவற்றுறை நகரை வலிகாமம் பகுதிகளுடன் நேரடியான வீதிப் போக்குவரத்தால் இணைக்க முடி யும். இதன் மூலம் நலிவுற்றிருக்கும் ஊர்காவற்றுறை நகருக்குப் புத்துயிர் கொடுக்க முடியும். மேலும் காரை நகர் மக்களையும் மீண்டும் தீவுப் பகுதியின் செல்வாக்கின் கீழ் கொண்டு வரலாம்.
3. எழுவைதீவு:- உறுண்டமுனைப் பாதை: உறுண்டிமுனையில் இறங்கு துறை அமைக்கப்பட்டு எழுவை தீவுக்கும் உறுண்டி முனையில் இறங் குதுறை அமைக்கப்பட்டு எழுவை தீவுக்கும் உறுண்டி முனைக்கும் இடையே கடற் போக்குவரத்து வசதி விருத்தியாக் கப்பட்டால் எழுவைதீவு மக்கள் கூடிய பலனைப் பெறுவர்.
4. அனலைதீவு:- கண்ணகியம்மன் இறங்குதுறை அமைக்கப்படின் அனலைதீவுக்கும் வேலணைத் தீவிற்குமிடையிலுள்ள போக்குவர த்து அதிகரிக்கும். இதனால் இத்தீவின் தனிமைத் தன்மை குறை வடையலாம்.
5. குறிக்கட்டுவான் நயினாதீவுப் பாதை: இவ்விரு இறங்குதுறைகளுக்கு மிடையே வாகனங்களை எடுத்துச் செல்லக்கூடிய பாதைச் சேவைகளை மேற்கொள்ளப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் மூலம் நயினாதீவுக்கு யாத்திரிகர்கள் நேரடியாகப் போக்கு வரத்துச் செய்யும் வாய்ப்புக்கிட்டும். இதன் மூலம் இத்தீவின் பொருளா தாரம் மேம்படலாம்.

தீவுகளின் இடஞ்சார்பு அபிவிருத்தியில் குடிசன மீள்பரம்பல் எவ்வளவு முக்கியமானது என வினாவுமிடத்து, வேலணைத்தீவில் மாத்திரம் குறிப்பிடத்தக்க மீள்பரம்பல் நடவடிக்கை மேற்கொள்வதற்கேற்ற சூழ்நிலை காணப்படுகிறது. ஏனைய தீவுகள் பரப்பில் மிகச்சிறியனவாக இருப்பதனாலும், நெடுந்தீவு மிகத்தொலைவிலும் குடிசனப்பிரச்சினையின்றி இருப்பதனாலும் குடிசன மீள்நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியநிலை ஏற்படாது. வேலணைத்தீவின் கிழக்கு கரைப் பகுதியில் குடிசனமீள் நடவடிக்கை மூலம் காணி அபிவிருத்தி நடவடிக்கைகளுடன் வாழிடத் தேவைக்கான விருத்தியாக்கக் கூடிய நிலப்பரப்புக்கள் நன்னீர் வசதியுடன் காணப்படுவதால் குடியிருப்பு விருத்திக்கு இவற்றைப் பயன்படுத்தலாம் வேலணைத்தீவில் குறிப்பாகத் தெற்குப் பகுதி குடி நெருக்கம் மிக்கதாகவும் சமூகப் பொருளாதார ரீதியில் நலிந்தோர் பிரிவினரைக் கூடுதலாகக் கொண்ட தாகவும் உள்ளது. இதனால் தீவின் தெற்கு மேற்குப் பகுதியில் இருந்து கிழக்குப் பகுதிக்கு இடம்பெயர் நடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டும். சாட்டி, மணியங்காடு, மண்கும்பான், அல்லைப் பிட்டி ஆகிய இடங்களில் புதிய குடியிருப்புக்களை அமைக்கக் கூடிய இடப்பரப்புக்கள் காணப்படுகின்றன. ஆயினும் மணல் அகற்றுதல் காரணமாக இவ்வசதியுள்ள பரப்புக்கள் மீள்பரம்பலுக்குப் பொருத்த மற்றதாகலாம்.

தீவுப்பகுதி தெற்கில் இன்றைய குடிசனத் தொகை 50000 க்கு மேற்பட்டுள்ளது. இந்நூற்றாண்டின் இறுதியில் 100 000 மக்கள் வாழும் பிரதேசமாக இருக்கும். இப்பிரதேச மக்களின் பல்வேறு சமூக பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதொரு சேவை நிலையமாக வேலணை, வங்களாவடி விருத்தியாக்கப்படல் வேண்டும். யாழ்ப்பாணத்தில் நிர்வாக மாவட்டத்தில் யாழ்ப்பாணம், கொடிகாமத்துக்கு அடுத்து வேணை மூன்றாவது முக்கிய நிர்வாகமையமாக வளர இது வழிவகுக்கும்.

தீவுப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டு வரும் சமூகப் பொருளாதார வளர்ச்சி காரணமாக நகராக்கப் பண்புகள் வளர்ந்து வருவதால் இதற்கேற்ப வேலணை, வங்களா வடிப்பகுதியை ஒரு நகராக விருத்தி செய்தல் வேண்டும். தற்போதைய நகரமையம், புதிய முறையில் விருத்தி செய்யப்படுவதுடன், வீதியமைப்பு முறையிலும் பல முன்னேற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இச்சேவை நிலையம் தீவுகள் முழுவதற்கும் பொறுப்பான காரியாலயங்கள், உயர்மட்டவர்த்தக நிறுவனங்கள், வங்கிகள் போன்ற பல பொருட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும், சேவைகளையும் வளங்குமிடமாக இருக்கவேண்டும். தீவுப்பகுதியில் முன்னணிக் கல்வி நிலையமாக வேலணை சேர்.வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகா வித்தியாலயம் விளங்குகின்றது. இக்கல்லூரியைச் சார்ந்து தீவுப்பகுதிக்குரிய தொழில் நுட்பக் கல்லூரி அமைக்கப்பட வேண்டும். யாழ்ப்பாண மாவட்டத்தின் அடுத்த தொழில்நுட்பக் கல்லூரி தீவுப்பகுதியிலேயே இடவமைவு பெறவேண்டும். மேற்படி கல்லூரியில் கவனிப்பாரற்று இருக்கும் விடுதிக் கட்டடங்கள் இதனை ஆரம்பிப் பதற்குப் பொருத்தமானவை.

ஒவ்வொரு தீவின் குடிசனத் தொகைப் பண்பு, பொருளாதாரப் பண்புகளுக்கு ஏற்பசேவை நிலையங்கள் விருத்தியாக்கப்பட வேண்டும். வேலணைத்தீவும், புங்குடுதீவும் குடிசனத்தொகை கூடுதலாக இருப்பதால் அவை ஒன்றுக்கு மேற்பட்ட சேவை நிலையங்களையும், ஏனைய தீவுகள் ஒவ்வொரு சேவை நிலையத்தையும் கொண்டிருக்கலாம். புங்குடுதீவில் பெருங்காட்டுச் சந்தியும், நயினாதீவில் நயினாதீவு மத்தியும், மண்டைதீவில் மண்டைதீவு மத்தியும் முக்கிய சேவை நிலையங்களாக விருத்திசெய்யப்பட வேண்டும். இந்நிலையங்களில் முக்கிய காரியாலயங்கள், தபாற்கந்தோர், பாடசாலை, கூட்டுறவுச்சங்கக்கடை, கிராமிய வங்கி மற்றும் வர்த்தக நிறுவனங்கள் இடம்பெறலாம். புங்குடுதீவில் இறுபிட்டி, கிழக்கூர் பகுதிகளிலும் மற்றும் வேலணையிலும் சிறிய சேவை நிலையங்கள் விருத்தி செய்யப்பட முடியும்.

புங்குடுதீவு 15000 க்கு மேற்பட்ட மக்களையும் 28.9 சதுரகிலோ மீற்றர் பரப்பையும் கொண்டது. இத்தீவிலிருந்து குடிசன வெளிஇடப்பெயர்வு முக்கியமாக இருப்பினும் குடிசனத் தொகை இங்கு அதிகரித்து வருவதைக் காணலாம். மேலும் இடம்பெயர்ந்து சென்றவர்கள் தங்கள் கிராமத்துடன் உள்ள தொடர்பைத் துண்டிக்காத வர்களாக இருக்கின்றார்கள். இக்கிராமத்தினது பொருளாதாரம் வெளிப்பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன் இது விவசாயம் சாராத கிராமியக் குடியிருப்பாகவுள்ளது. மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வாக இருப்பதால் சிறந்ததொரு சேவை நிலையம் இங்கு தேவைப்படுகின்றது. ஏற்கனவே பெருங்காட்டுச்சந்தி ஒரு சேவை நிலையமாக வளர்ச்சி பெற்றுள்ளது. இங்கு மகாவித்தியாலயம், தபாற் காட்டுச்சந்தி, ஒரு சேவை நிலையமாக வளர்ச்சி பெற்றுள்ளது. இங்கு மகாவித்தியாலயம், தபாற்கந்தோர், வங்கி, ஆஸ்பத்திரி, கூட்டுறவுச்சங்கம், விவசாய விஸ்தரிப்புக் காரியாலயம் மற்றும் வர்த்தக நிறுவனங்கள், காணப்படுகின்றன. புங்குடுதீவு, நயினாதீவு, ஆகிய தீவுகளை உட்படுத்திய ஒரு உதவி அரசாங்க அதிபர் பிரிவும், பிரதேச சபையும் அமைக்கப்பட்டு இவற்றில் தலைமைக்காரியாலயம் பெருங்காட்டில் அமைய வேண்டும். இத்தீவுன் ஏனைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களுக்கும் இந்நிலையத்திற்கு மிடையே போக்குவரத்து வசதி ஏற்படு மிடத்து இந் நிலையத்தின் வளர்ச்சி அதிகரிக்கும்.

நெடுந்தீவு 6000 மக்களையும் 47.8 சதுர கிலோ மீற்றர் பரப்பையும் உடையது. இத்தீவின் குடிசனத்தொகை ஏறக்குறைய இவ்வளவிலேயே தொடர்ந்து இருக்கலாமெனக் கருதலாம். இதனது இடவமைவு காரணமாக ஏற்கனவே இது பல அரசசெயற்பாடு களைப் பெற்றுள்ளது. உதவி அரசாங்க அதிபர் பிரிவு, பிரதேச அபிவிருத்திக் காரியாலயம், ஆஸ்பத்திரி மற்றும் பல காரியாலயங்கள் இங்கு விருத்தி பெற்றுள்ளன. வர்த்தக நிறுவனங்களும் காணப்படுகின்றன. இங்கு வேலை செய்யும் ஊழியர்கள் கூடியளவில் பிற பகுதிகளைச் சேர்ந்தவர்களாக இருப்ப தாலும் இது ஒரு கஷ்டப் பிரதேசமாக இருப்பதாலும் சிறந்த சேவையைப் பெறுவது கடினமாக இருக்கிறது. மேலும், இத்தீவின் வளர்ச்சிக்கு குடிநீர், மின்சாரம், போக்குவரத்து விருத்திகள் தேவையாக உள்ளன. நெடுந்தீவுக்கு வருடத்தில் ஓரிருமுறை வந்து போகக் கூடிய சூழ்நிலைகளை உருவாக்கு வதுடன் சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

நயினாதீவு 4000க்கு மேற்பட்ட மக்களையும் 5.7 கிலோ மீற்றர் பரப்பை யும் உடையது. இது இந்து, பௌத்த யாத்திரிகர்கள் பெருமளவில் வந்து போகுமிடமாக இருந்து வருகின்றது. இதனால் யாத்திரிகர்கள் தங்கும் விடுதி கள் வளர்ச்சிக்கு இடமுண்டு. தீவின் இறங்குதுறைகள் நாகபூசனி அம்மன் ஆலயத்திற்கு அருகிலும், வங்களாவடி யிலும், அண்மைக்காலத்தில் பௌத்த விகாரைக்கு அருகிலும் அமைந்துள்ளன. கிராமத்தின் முக்கிய சேவை நிலையம் தீவின் மத்தியில் காணப்படுகிறது. இங்கு காணப்படும் மகாவித்தியாலயம், தபாற் கந்தோர், மற்றும் அரச காரியாலய ங்கள் வர்த்தக நிறுவனங்கள் மேலும் விருத்தி செய்யப்படவேண்டும்.

எழுவைதீவு 400 க்கு மேற்பட்ட மக்களையும், 2 சதுர கிலோ மீற்றர் பரப்பையும் கொண்டுள்ளது. இங்கு இந்து, கத்தோலிக்க மக்கள் சமமான எண்ணிக்கையில் வாழ்கின்றனர். இது சிறிய தீவாக இருப்பது மாத்திரமல்லாமல் இரண்டு சமூகமும் சரிசமனாக வாழ் வதால் இரு பகுதியினரது தேவை களையும் பூர்த்தி செய்ய வேண்டும். மீன்பிடி, பனையோலை வேலைகள், கோழிவளர்ப்பு இங்கு முக்கிய தொழில் களாக இருக்கின்றன. தீவின் சனத் தொகை குறைவாக இருப்பதால் பல சேவைகளை உருவாக்கக்கூடிய ஆதார சனத்தொகை இல்லை. மக்களின் பல தேவைகளைப் பூர்த்தி செய்யப் பல பகுதி நேரக் காரியாலயங்கள் அமைக் கப்பட வேண்டும். இக்காரியாலயங் களை ஊர்காவற்றுறை அல்லது அனலைதீவிலிருந்து செயற்படுத்தலாம்.

வேலணைத்தீவில் புளியங்கூடல் சந்தி ஒரு முக்கிய சேவை நிலையமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது. இக்கிராமத்து மக்கள் புதிய தொழில் நுட்பங்களை அறிமுகம் செய்வதில் திறன்மிக்கவர்கள். தீவுப்பகுதி பஸ் கொம்பனியை நடத்தியவர்களுள் இக்கிராமத்தைச் சேர்ந்தவர்களே கூடுதலாக உள்ளனர். மின்சார உற்பத்தி யந்திரம், ஒலிபெருக்கி, நீர்இறைக்கும் யந்திரம், உழவுயந்திரம், தூள் அரைக்கும் ஆலை, அச்சுயந்திரம் போன்றன புளியங்கூடற் சந்தியிலேயே முதன்முதல் வளர்ச்சி பெற்றன. மேலும் கூட்டுறவு அபிவிருத்தி முயற்சிகளிலும் இளைஞர், மாதர்சங்க நடவடிக்கைகளிலும் இக் கிராமத்தின் பங்களிப்பு பெருமைக்குரியது. இதனால் இச்சந்தி கைத்தொழில் தொழில்நுட்பம் தொடர்பானசேவை நிலையமாக வளரவாய்ப்புண்டு.

அல்லைப்பிட்டி, மண்கும்பான், செட்டிபுலம், சரவணை, நாரந்தனை, செருக்கண், கரம்பன் ஆகிய இடங்களில் கீழ்மட்ட சேவை நிலையங்கள் விருத்தியாக்கப்பட வேண்டும். மக்களின் அன்றாடத் தேவைகள் பலவற்றைப் பூர்த்தி செய்யும் வர்த்த சேவை நிறுவனங்கள் இடம்பெறவேண்டும். வேலணைத் தீவின் கிழக்கு அரைப் பகுதியில் புதிய குடியிருப்புக்களை விருத்தியாக்கவும் அல்லைப்பிட்டிச் சந்தியைச் சூழவுள்ள பிரதேசத்தில் ஒரு சிறு நகர் வளரவும் வாய்ப்புகள் உண்டு. அல்லைப்பிட்டி யாழ்ப்பாண நகருக்கு அண்மித்திருப்பதாலும், ஓரளவு வெற்று நிலம் இருப்பதாலும் கிட்டிய தூரத்தில் நன்னீர் இருப்பதாலும் இதனை யாழ்ப்பாண நகரத்தில் ஒரு உபநகரமாக விருத்தி செய்யலாம். இதன் மூலம் யாழ்ப்பாண நகரில் வாழும் தீவுப்பகுதி மக்கள் இந் நகரில் குடியேறி யாழப்பாண நகர்களுக்குச் சென்றுவரக்கூடிய நிலைமை எற்படலாம். ஏற்கனவே இச் சந்தியைச் சூழ பல வீடுகள் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

அனலைதீவு 4000 க்குப் மேற்பட்ட மக்களையும் 6.7 சதுர கிலோ மீற்றர் பரப்பையும் கொண்டுள்ளது. இத்தீவில் குறிப்பிடத்தக்க விவசாய நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன. இத்தீவின் மத்தியில் காணப்படும் சேவை நிலையத்தைச் சார்ந்து ஆஸ்பத்திரி, உயர்தரப்பாடசாலை, உபதபாற் கந்தோர், கிராமசபைக் காரியாலயம், சங்கக்கடை மற்றும் சில வர்த்தக நிறுவனங்கள் காணப்படுகின்றன. இத்தீவின் பரப்பில் சிறியதாக இருப்பினும் மக்கள் அடர்த்தி உயர்வாக இருப்பதாலும் இக்கிராமத்தைச் சேர்ந்தவர்கள் பலர் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வாழவதாலும் இங்குள்ள மக்கள் ஓரளவு உயர்ந்த வாழக்கைத் தரத்தை அனுபவிக்கின்றனர். போதிய ஆசிரியர்கள் மற்றும் அரச ஊழியர்கள் பற்றாக்குறையால் இங்கு கிடைக்கும் சேவைகள் தரம் குறைந்தனவாக உள்ளன. இதனால் அனலைதீவு மத்தியில் விருத்தி பெற்றுள்ள சேவை நிலையத்தின் தரம் சேவையாலும், பௌதிக வசதிகளாலும் உயர்த்தப்பட வேண்டும்.

மண்டைதீவு 4000 க்கு மேற்பட்ட மக்களையும் 10.1 சதுரகிலோ மீற்றர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரப்பையும் கொண்டுள்ளது. இத்தீவு சிறப்பான நிலப்பயன்பாட்டு ஒழுங்கைக் கொண்டுள்ளது. இத்தீவின் தென் கிழக்குப்பகுதி தோட்ட நிலங் களையும், மேற்கு, வடக்குக் கரையோரப் பகுதி சதுப்பு நிலங்களையும் இதற்கு அடுத்த உட்பகுதி தரவை நிலங்களையும் அடுத்து நெல்வயல்களையும் கொண்டுள்ளன. தீவின் நடுப்பகுதியில் குடியிருப்பு காணப்படுகின்றது. குடியிருப்புப் பகுதியின் நடுவில் மண்டைதீவின் சேவை நிறுவனங்களாக மகா வித்தியாலயம், உபதபாற்கந்தோர், அபிவிருத்திச் சபைக் கிளைக் காரியாலயம், கிராம சேவகர் பிரிவுக் காரியாலயம், கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடைகள், தனியார் சிறு பல சரக்குக் கடைகள் ஆகியன காணப்படுகின்றன. இங்குள்ள அரச நிறுவனங்களால் வழங்கப்படும் சேவைகள் தரக்குறைவாக இருப்பது இத்தீவின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கின்றது. இதனால் இத்தீவின் சேவைநிலையத்தின் தரம் சேவைகளாலும், பௌதிக வசதிகளாலும் உயர்த்தப்பட வேண்டும். இவ் உபநகரின் வளர்ச்சிக்கு ஏற்ற வீடமைப்புத்திட்டத்துடன் இந்நகரும் திறம்பட இயங்குவதற்குத் தேவையான பல நிறுவனங்கள் இங்கு இட அமைவு பெறவேண்டும். 5000 க்குக் மேற்பட்ட மக்கள் வாழக்கூடிய நகரமா விருத்தி செய்யக்கூடிய உள்ளார்ந்த நிலவளத்தை இத்தீவு பெற்றுள்ளது. இப்பிரதேச உவர்நிலமாக இருப்பதால் விவசாயச் செய்கைக்கு உட்படுத்த முடியாது.

மண் கும்பான் பிள்ளையார் கோவிலடியைச் சூழவுள்ள பிரதேசத்தை விருத்தி செய்வதன் மூலம் இங்கு ஒரு விவசாயச் சார்பற்ற கிராமியக் குடியிருப்பை விருத்தி செய்யலாம். இக்கிராமமும் யாழ்ப்பாண நகருடன் நெருங்கிய பொருளாதாரத் தொடர்பு கொண்டதாக அமையும். இக்கிராம மக்கள் நகரப் பொருளாதார நடவடிக்கைகளுடன் இணைந்தவர்களாக இருக்கலாம். பிள்ளையார் கோவிலுக்கு வடக்கிலிருக்கின்ற உயரமான பனைவளவுப்பகுதி மற்றும் கோயிலுக்குத் தெற்கு கிழக்குப் பகுதிகள் குடியிருப்புக்கு ஏற்ற பகுதிகளாக இருக்கின்றன. ஏற்கனவே கோயிற்பகுதியில் நிரந்தரக்கடைகள் சில காணப்படுகின்றன. மண்கும்பான் பாடசாலை, உபதபாற்கந்தோர் ஆகிய குறிப்பிடப்படும் குடியிருப்புக்குத் தூரத்தில் இல்லை. இதற்கு நன்னீர் மண்கும்பான் கிராமத்திலிருந்து பெறவேண்டும்.

வேலணை கிழக்கில் குறிப்பாக இடிவிழுந்த குண்டுக்குத் தெற்காக அமைந்துள்ள மணியங்காட்டுப்பகுதி பெரிய குடியேற்றத்திட்டம் அமைக்கக்கூடிய நிலநீர் வளங்களைக் கொண்டுள்ளது. இப்பகுதி ஊர்காவற்றுறை யாழ்ப்பாண வீதிக்கு அண்மித்ததாக இருப்பதும் இங்கு குடியிருப்புக்கள் இல்லாத பெரியளவு காணிகள் காணப்படுவதும் வாழிடக்குடியேற்றத்துக்கு ஏதுவாக இருக்கின்றன. இத்திட்டத்தில் வேலணையில் நிலமில்லாத குடும்பங்களுக்கு வீடமைப்புத்திட்டம் உருவாக்கப்பட வேண்டும். இத்திட்டம் விவசாயச் சார்பற்ற கிராமியக் குடியிருப்பாகவே அமையும். இத்திட்ட விருத்திக்கு பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைகள் விருத்தி செய்யப்பட வேண்டும். பிரதான வீதியிலிருந்து வெட்டுக்குளம் வரை வீதி அமைக்கப்பட்டால் இக்குடியேற்றம் வேலணை தெற்குப் பகுதிகளுடன் நேரடியான போக்கு வரத்துத் தொடர்பைப் பெறும்.

ஊர்காவற்றுறை இன்று 3500 மக்களைக் கொண்ட சிறிய நகராக இருக்கின்றது. 1960களுக்கு முன்னர் இந்நகர் பல துறைகளில் தீவுப்பகுதியின் முன்னணி நகராக இருந்தது. இதன் துறைமுகச்செயற்பாட்டு வீழ்ச்சியும், பண்ணைப்பாலம் திறக்கப்பட்டதால் இதனது முக்கியத்துவம் குறைவடைந்ததும் யாழ்ப்பாணம் தீவுப்பகுதி மக்களின் பிரதான நகராக மாற வழி வகுத்தன.

இந்நகரின் எதிர்காலம் இங்கு அமைந்துள்ள துறைமுக விருத்தியிலேயே தங்கியுள்ளது. இதனை வட இலங்கையின் முக்கிய மீன் பிடித்துறை முகங்களுள் ஒன்றாக விருத்தி செய்யலாம். கப்பல் திருத்துதல் மற்றும் உல்லாசப்படகோட்டம், விளையாட்டுத்துறை ஆகிய விருத்தி செய்ய வேண்டும். மேலும் இந்நகரை கைத்தொழில் சுற்றுலாத்துறை நகரமாக விருத்தி செய்வதன் மூலமே இதற்குப் புனர்வாழ்வு கொடுக்க முடியும். தீவுப்பகுதியில் உள்ளூர்ப் போக்குவரத்துக்கு ஏற்ற போதிய தெருக்கள் அமைப்பதன் மூலம் பயன்படுத்தப்படாமலிருக்கும் தீவுப்பகுதிகளை வாழிடத்தேவைக்குக் கீழ்கொண்டு வரமுடியும். பின்வரும் பாதைகள் அமைப்பதற்கு முன்னுரிமை கொடுப்பது அவசியமாகின்றது.

1. சுருவில் - சாட்டிவீதி:- சுருவிலிருந்து தீவு தெற்குக்கரையோரமாகக் கெட்டில், திருக்கடலூர் கல்லுண்ட முனை, செட்டிபுலம் வழியாகச் சாட்டி வரை இப்பாதை அமைக்கப் படவேண்டும். இப்பாதை அமைப் பின்மூலம் தீவுப் பகுதியில் காணப் படும் காட்டுப் பகுதிகளை விருத்தி செய்யக் கூடியதாக இருக்கும். இவ்வீதி பிரதானமாகப் பின்தங்கிய குடியிருப்புக்களுக்கூடாக அமைக் கப்படவிருப்பதால் இக் குடியிருப்பு க்களின் அபிவிருத்திக்கு இது வழிவகுக்கும். சுருவில் - செட்டில் ஊடாக வேலணைத்துறை வீதிவரை அமைக்கப்பட்ட வீதி சிறப்பான எடுத்துக்காட்டு.

2. செட்டிபுலம்:- இடிவிழுந்த குண்டு வீதி:- இப்பாதை செட்டிபுலம் வெட்டுக்குளம் சந்தியிலிருந்து சாட்டி, உப்புக்குளி, மணியங்காடு, சோனகன்காடு வழியாக யாழ்ப் பாணம் ஊர்காவற்றுறை வீதியை இடிவிழுந்த குண்டடியில் சந்திக்கும். இப்பாதை அமைக்கப்படின் வேலணை கிழக்கில் காணப்படும் பெருமளவு நிலப்பரப்புக்குப் பாதை முகப்புக் கிடைக்கும். இப்பாதை செல்லும் வழி நன்னீர் பிரதேசத்தைச் சார்ந்திருப்பதால் வாழிட நில அபிவி ருத்திக்குக் கூடிய வாய்ப்புண்டு.

3. அல்லைப்பிட்டி:- நாரந்தனைவீதி: அல்லைப்பிட்டி மண்கும்பான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமங்களூடாகக் கிழக்கு மேற்காகச் செல்லும் பாதை மண்கும்பான் சந்தியிலிருந்து மேற்கு நோக்கி அண்ணமார்கோயில் சாவலடிப்புரம், ஆரவியல்பிட்டி, பள்ளம்புலம் சரவணை வழியாக நாரந்தனை சென்மேரிஸ் தேவாலயம் வரை விஸ்தரிக்கப்பட்டு ஊர்காவற்றுறைப் பாதையுடன் இணைக்கப்பட வேண்டும். இப்பாதை அமைக்கப்படின் அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை ஆகிய கிராமங்களின் பெரும்பகுதிக்குப் போக்குவரத்து வசதி கிட்டுவதுடன் இடஞ்சார் அபிவிருத்திக்கு வழி வகுக்கும். இப்பாதை செல்லும் இடம் நன்னீர்ப் பிரதேசமாக விளங்குவது முக்கியமானதாகும்.

4. புங்குடுதீவுச் சுற்றுப்பாதை:- புங்குடுதீவின் தற்போதைய பாதையமைப்பு இதன் கரையோரப் பகுதிகளை நன்கு பயன்படுத்த முடியாதுள்ளது. இத்தீவைச் சுற்றிப் பாதை அமைப்பதால் இத்தீவிலுள்ள குடியிருப்புக்களான மடத்துவெளி, வல்லன், மாவுதடை, குறிகட்டுவான், கழுதைப்பிட்டி, ஊரதீவு, பல்லதீவு ஆகியனவற்றை இணைக்கக் கூடியதாக இருப்பதுடன் கரையோர நிலப்பரப்புக்களையும், நன்கு பயன்படுத்த முடியும்.

5. ஊர்காவற்றுறை - சரவணைக் கரையோரப்பாதை :- இப்பாதை வேலணைத் தீவின் வட கரையோரமாக ஊர்காவற்றுரையிலிருந்து விருட்டி முனை, வடக்கு நாரந்தனை வழியாக சரவணை 8ஆம் கட்டை வரை அமைக்கப்பட வேண்டும்.

6. சரவணைச்சந்தி - அராலி இறங்கு துறை:- இப்பாதை சரவணைச் சந்தியிலிருந்து ஏற்கனவேயுள்ள அணைக்கட்டு வழியாக அராலித் துறை வரை அமைக்கப்பட வேண்டும். அராலிப்பாதை அமைக்கப்படின் இப்பாதை அமைப்பு முக்கியமானதாகும்.

தீவுப்பகுதியில் 25% க்கு மேற்பட்ட நிலப்பரப்பு தரவை நிலங்களாகவும் சதுப்பு நீர்ப்பரப்புக்களாகவும் இருக்கின்றன. வேலணைத்தீவு, புங்குடுதீவு, வேலணைத்தீவில் யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை வடக்கு வீதியில் வீதிக்கு வடக்கேயுள்ள பகுதி தரவை நிலமாகவுள்ளது. புங்குடுதீவின் வடபகுதியும், மண்டைதீவின் மேற்குப்பகுதியும் தரவை நிலங்களாகவுள்ளன. இந்நிலப் பரப்புக்களில் மாரியில் வெள்ளம்நின்று, பங்குனி, சித்திரை மாதங்களில் சோளகக்காற்றின் தாக்கத்தால் புழுதி எழுப்பப்படுகின்றது. இத்தரவை நிலங்களில் புற்செருக்கல், மண் அகழ்தல், சிப்பி எடுத்தல் ஆகியவற்றால் உயிர்ச்சூழல் பெரிதும் மாசுபடுகின்றது. இக்காணிகள் அரச காணியாக இருப்பதுவும் குறிப்பிடத்தக்கது. இந்நிலங்களின் சூழல் நல்ல முறையில் பேணப்படுவதுடன், மந்தை மேய்ச்சலுக்குரிய நல்ல தரவை நிலங்களாக மாற்றப்பட வேண்டும்.

மண்டைதீவு அல்லைப்பிட்டி பண்ணைக்கு இடைப்பட்ட முக்கோண கடற் சதுப்புக் கண்ணாக்காட்டுப் பகுதியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை ஒதுக்குப் பகுதியாக மாற்ற வேண்டும்.

மேற்குறிப்பிட்ட ஆலோசனைகள் முன்னெடுக்கப்படுமாயின் தீவுப்பகுதியின் அபிவிருத்தியைக் குறுகிய காலத்தில் காணலாம்.

**தீவுகள் தெற்குப் பிரிவின் அபிவிருத்தியும் பிரச்சினைகளும்**

1991 ஆம் ஆண்டு தீவுப்பகுதிக்கு மிகவும் துக்ககரமான ஆண்டாக அமைந்தது. அவ்வாண்டில் நடந்த யுத்தத்தினால் இப்பிரதேச மக்கள் கட்டாய பாரிய இடப்பெயர்வுக்குட்பட்டனர். வேலணைத்தீவு, காரைநகர், புங்குடுதீவு, மண்டைதீவு மக்களற்ற பிரதேசங்களாக மாறின. தீவுகள் தெற்குப் பிரதேச செயலகப் பகுதியில் நயினாதீவு தவிர்ந்த ஏனைய பகுதிகள் எல்லாவற்றிலும் ஆயிரத்துக்குக் குறைவான மக்களே இடப்பெயர்வுக்குட்படாமல் 1996 வரை இங்கு இருந்தனர். இப்பகுதியில் இடப்பெயர்வுக்குட்படாதவர்கள் கூட தத்தம் வீடுகளில் இராமல் ஒரு சில இடங்களில் கூட்டாக வாழவிடப்பட்டனர். (வேலணை அம்மன் கோவிலடி, துறையூர் பெருங்காடு) நயினாதீவு மக்கள் பாரிய இடப்பெயர்வுக்குட்படாத பொழுதும் சிறுதொகையினர் இடம் பெயர்ந்திருந்தனர். தீவுகள் தெற்குப்பிரிவு மக்கள் போக்குவரத்திலும், நாளாந்த வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களையும், சேவைகளையும் பெறுவதிலும் மிகக் கடினமான பிரச்சினைகளை எதிர்நோக்கினர். உயர்மட்ட மருத்துவ சேவைகளைப் பெறுவதற்கும் மற்றும் கொழும்பு செல்வதற்கும் திருகோணமலை செல்லவேண்டியிருந்தது. வேலணை, புங்குடுதீவு, மக்கள் பொருட்களையும் சேவைகளையும் பெறுவதற்கு நயினாதீவு சென்று வர வேண்டியிருந்தனர்.

1991 ஆம் ஆண்டு பாரிய இடப்பெயர்வினால் இப்பிரிவைச் சேர்ந்த கிராமங்கள் பாரிய சமூக, பொருளாதாரப் பின்னடைவுகளை அடைந்தன. 1991 இல் இப் பகுதியிலிருந்து ஒட்டுமொத்தமாக வெளியேறிய மக்கள் யாழப்பாண நகரிலும், அதன் அயல் கிராமங்களிலும் பல்வேறு இன்னல்கள் மத்தியில் குடியேறி வாழ்ந்தனர். இவ்விடப் பெயர்வினால் அவர்களிடமிருந்த சமூக இணைப்புகள் அறுந்து இடம் பெயர்ந்த அகதி வாழ்வுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களானார்கள். இடப்யெர்வு சடுதியாகவும், ஒழுங்கற்றதாகவும் இடம்பெற்றதால் அவர்கள் தங்களுடைய பொருட்களைக் கொண்டு வரமுடியவில்லை. இடம்பெயர்ந்த மக்களில் மிகப் பெரும்பான்மையானவர்கள் வீட்டுப் பிரச்சினை, தொழில் பிரச்சினைக்கு முகம் கொடுக்க முடியாத பல கஷ்டங்கள் மத்தியில் அரசாங்க நிவாரணத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழவேண்டியதாயிற்று. ஏலவே யாழ்ப்பாண நகரிலும் அதன் அயற் கிராமங்களிலும் மிகவும் கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்த மக்கள் 1995 ஆம் ஆண்டில் மீண்டும் பாரிய இடப் பெயர்வுக்குட்பட வேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்ப்பாக்கிய நிலைக்குட்பட்டனர். இவ் விடப்பெயர்வினால் குடும்பங்கள் மேலும் சிதறுண்டன. வாழ்க்கையில் நம்பிக்கை இழந்து பல திக்குகளுக்குச் செல்லத் தொடங்கினர். தென்மராட்சி, கிளிநொச்சி, வன்னி, வவுனியா மற்றும் மாவட்டங்களுக்கும் சென்றனர். கிளிநொச்சி, வன்னிப்பகுதி குடியேற்றத் திட்டங்களில் தீவுப்பகுதி மக்கள் முன்னரே குடியேறியிருந்ததால் அவர்களின் தொடர்பு காரணமாக குறிப்பிடத்தக்க எண்ணிக்கையினர் கிளிநொச்சிக்குச் சென்றனர்.

இப்பிரதேச மக்கள் 1980களிலிருந்து தென்னிலங்கை இனக்கலவரங்களால் பெரிதும் பாதிக்கப்பட்டு வந்ததால் வெளிநாடுகளுக்கு இடம்பெயரும் போக்கு மக்களிடையே அதிகரிக்கத் தொடங்கின.

1980களில் ஏற்பட்ட இனக் கலவரங்களும், வடக்குப் பகுதியில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தமும் அரசின் திறந்த பொருளாதாரக் கொள்கையும், வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்பும் முகவர்களின் வளர்ச்சியும் இப்பிரதேச மக்களின் வெளிநாட்டு இடப்பெயர்வை ஊக்குவித்தன. 1980களிலிருந்து குறிப்பிடத்தக்க தொகையினர் சர்வதேச இடப்பெயர்வுக்கு உட்பட்டனர். இப்போக்கு 1991க்குப் பின்னர் வேகமாக அதிகரித்தது. இன்று தீவுகள் தெற்கைச் சேர்ந்த மக்கள், அவர்களின் வழித் தோன்றல்கள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் சுவிஸ், கனடா, பிரான்ஸ், இங்கிலாந்து மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் வாழ்கின்றனர். துன்பமான இடப்பெயர்வுக்குட்பட்ட போதும் புதிய வாழ்வைத் தேடி கடினமுயற்சிகள் மேற்கொண்டதினால் முன்னைய சமூக பொருளாதார நிலையிலும் பார்க்க இடப்பெயர்வுக்குட்பட்ட பிரிவு மக்களில் ஒரு பகுதியினர் நல்வாழ்வைத் தேடியிருக்கின்றார்கள் என்றும் சொல்லலாம். இன்னுமொரு பகுதியினர் துன்பமான இடப் பெயர்வுக்கு உட்பட்டு உயிர்இழப்பு, பொருள் இழப்புடன் மீளமுடியாத பிரச்சினைகளுடன் வாழ்கின்றார்கள்.

1991-1995க்கு இடைப்பட்ட காலத்திலும் அதற்குப் பின்னரும் வேலணை, சரவணை, அல்லைப்பிட்டி, மண்கும்பான், மண்டைதீவு, புங்குடுதீவு ஆகிய கிராமங்களின் பொருளாதார வளம் பெரும் சேதத்துக்குட்பட்டது. யுத்தத்தினால் பெருமளவு வீடுகள், அசையும் சொத்துக்கள், பனை, தென்னை ஆகியன அழிவுக்குள்ளாகின. மக்கள் இடப்பெயர்வினாலும், நீண்ட காலமாக மக்கள் வீடுகளில் வாழாத காரணத்தாலும் பராமரிக்கப்படாததாலும் இயற்கையால் பெரும் அழிவுக்குட்பட்டன. குடியிருப்புப் பகுதிகளில் வீடுகள் மாத்திரமல்ல விவசாயத்துடன் தொடர்புடைய புகையிலைப் போறணைகள், மால்கள் மற்றும் பல தற்காலிக கொட்டில்கள் யாவும் அழிந்துபோயின. குடியிருப்புப் பகுதிகள் பற்றைக் காடுகளாக மாறின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத் தீவுகளின் பொருளா தாரத்தில் நீண்டகாலமாக விவசாயம், மீன்பிடி, சிறுகைத் தொழில்கள் முக்கிய இடம் பெற்றிருந்தன. பின்னர் படிப்படி யாக இப்பிரதேசத்தின் பொருளாதாரத் தில் வெளியிடங்களிலிருந்து கிடைக்கும் உழைப்பு முக்கியம் பெறத்தொடங்கியது. புங்குடுதீவு, நயினாதீவு ஆகியவற்றின் பொருளாதாரச் செயற்பாட்டில் வெளியி லிருந்து கிடைத்த வருமானம் மிகமுக்கிய விடத்தைப் பெற்றிருந்தது. வேலணை, சரவணை, மண்டைதீவு, அல்லைப் பிட்டி, மண்கும்பான் ஆகிய கிராமங் களின் பொருளாதாரத்தில் விவசாயம், மீன்பிடி, சிறுகைத் தொழில்களே தொடர்ந்தும் குறிப்பிடத்தக்க பங்கை வகித்து வந்தன.

1954இல் புங்குடுதீவுக்கும் வேல ணைக்கும் இடையே பாதை அமைக்கப் பட்டது. 1961 இல் அமைக்கப்பட்ட பண்ணைப் பாதையால் யாழ்ப்பாண நகருக்கும் வேலணைத் தீவுக்கும் தரைவழிப் போக்குவரத்து கிட்டியது . இதனைத் தொடர்ந்து 1960 களின் முற்பகுதியில் குறிகாட்டுவான் இறங்கு துறை அமைக்கப்பட்டது. நெடுந்தீவு, நயினாதீவு மக்கள் ஊர்காவற்துறை வழியாக யாழ்ப்பாணம் செல்லாமல் குறிகட்டுவானிலிருந்து நேரடியாக யாழ்ப்பாண நகருக்கு மிகக்குறுகிய நேரத்தில் செல்லக்கூடிய வாய்ப்பேற் பட்டது. போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட இப்பாரிய முன்னே ற்றத்தால் தீவுப்பகுதியில், குறிப்பாக வேலணை யிலும், புங்குடுதீவிலும் பாரிய சமூக பொருளாதார மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. இவ்விருதீவுகளும் யாழ்ப் பாண நகருடன் நெருக்கமாகப் பிணைக் கப்பட்டன. இப்பகுதியில் வாழும் மக்கள் தொழிலுக்காகவும் பொருட்கள் சேவைகள் பெறுவதற்காகவும் யாழ்ப் பாண நகரத்துக்குச் செல்லும் வழக்கம் அதிகரிக்கத் தொடங்கியது. வெளிப் பொருளாதாரச் செல்வாக்கால் தீவு களின் சமூக பொருளாதாரம் 1960களில் துரிதமாக அபிவிருத்தி காணத் தொடங்கியது. மேலும் 1970களில் இப்பிரதேசத்தில் மேற் கொள்ளப்பட்ட மிளகாய்ச் செய்கை மூலம் விவசாயிகள் குறுகிய காலத்தில் குறிப்பிடத்தக்க செல்வத்தை ஈட்டினார்கள். மிளகாய்ச் செய்கையால் கிடைத்த வருமானத்தால் விவசாயிகள் கல்வீடுகள் கட்டினார்கள். 1970களில் இருப்பிட வசதிகளை மேம் படுத்துவதில் இப்பகுதிகள் குறிபிடத் தக்க முன்னேற்றம் கண்டன. 1970களில் தீவுகள் உதவி அரசாங்க அதிபர் பிரிவு வேலணையில் அமைக்கப்பட்டதும், அதனைத்தொடர்ந்து சமநல சேவை நிலையம், மிருக வைத்திய நிலையம் கல்விக்கந்தோர், மின்சாரசபை, உபகாரி யாலயம், நீர்வழங்கல் காரியாலயம், வங்கி ஆகிய பல நிறுவனங்கள் வங்களா வடியில் நிறுவப்பட்டன. இதன் காரண மாக வேலணை வங்களாவடி ஒரு முக்கிய சேவை நிலையமாக வளர்ச்சி பெற்றது. தீவுகள் தெற்குப் பிரிவில் ஒட்டு மொத்தமாக சேவை வசதிகள் வளர்ச்சி பெற்றதால் மக்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பல நன்மைகளைப் பெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1960களில் பண்ணைப்பாதை அமைக்கப்பட்டதால் மண்கும்பான், அல்லைப்பிட்டி ஆகிய கிராமங்களில் இருந்த மணலுக்கு யாழ்ப்பாண நகரத்திலும், நகர அயல் பகுதிகளிலும் பெரும் கிராக்கி ஏற்பட்டது. இப்பகுதியில் கிடைத்த இயற்கை வளத்தை அல்லைப்பிட்டி, மண்கும்பான் மக்கள் விற்று தங்களது பொருளாதார நிலையை மேம்படுத்தினர். இவர்கள் குறிப்பாக யாழ்ப்பாண நகரப்பகுதியில் நகைக்கடை வியாபாரத்தில் ஈடுபட்டு இத்தொழிலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டனர். மேலும் யாழ்ப்பாண நகரப்பகுதி மெய்யாதனத்தில் குறிப்பிடத்தக்க முதலீடு செய்துள்ளனர். விவசாயத்திலிருந்து மிகவும் குறைந்த வருமானத்தைப் பெற்றுவந்த மண்கும்பான், அல்லைப் பிட்டி மக்களின் பொருளாதார முன்னேற்றத்துக்கு மணல் விற்பனை பெரும் பங்களித்தது எனலாம்.

1996 மீள் குடியேற்றத்திற்குப் பின்னர், விவசாயம், மீன்பிடி, பனைசார் தொழில்கள் ஓரளவு மீளவும் விருத்தி பெற்று வந்தாலும் வர்த்தக சமூகத்தின் பங்களிப்பு மிகவும் குறைந்து காணப்பட்டது. இப்பிரதேசத்தைச் சார்ந்த தென்னிலங்கை வர்த்தக சமூகம் இப்பொழுது மிகவும் குறுகிவிட்டது. மேற்படி சமூகத்தினர் யாழ்ப்பாணம், கொழும்பு நகர மக்களுடன் தங்களை முழுமையாக இணைத்துக் கொண்டனர். மாற்றாக வெளிநாடகளிலிருந்து சிறிதளவு பணம் கிடைத்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. இப்பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சி இன்னும் சில காலத்துக்கு விவசாயம், மீன்பிடி, பனைசார் தொழில்களின் முன்னேற்றத்திலேயே தங்கியிருக்கும் எனக்கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்டதொரு சமூக பொருளாதாரப் பின்னணியிலேயே தீவுப்பகுதியின் அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டியுள்ளது. 1996ஆம் ஆண்டிலிருந்து மீளக்குடியமர்வு, மீள அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் யாழ்ப்பாண மாவட்ட த்தில் ஏனைய பிரிவுகள் எதிர்நோக்கிய பிரச்சினைகளிலும் பார்க்க, தீவுகள் தெற்குப்பிரிவு கூடுதலான பிரச்சினைகளை எதிர்நோக்கியது.
அவை வருமாறு.

1. இப்பிரிவு யாழ்ப்பாணத்திற்கு மேற்கே மூன்று தீவுகளைக் கொண்டதாகவும் நயினாதீவு கடலால் பிரிக்கப்பட்டும், மண்டைதீவு நீண்ட காலமாக இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியாகவும் இருந்து வருகின்றன.
2. தீவுப்பகுதிப் போக்குவரத்து இராணுவத்தால் மிகவும் கட்டுப் படுத்தப் பட்டு இருந்தது. பிரயாண நேரக்கட்டுப்பாடு, தங்கிநிற்பதில் கட்டுப்பாடு மற்றும் சோதனை நிலையங்களின் செயற்பாடு போன்றன ஆரம்ப காலங்களில் (1996-1998) மிகவும் கடுமையாக இருந்ததால் புனர்வாழ்வு நடவடிக்கைகள் தாமதமாகின. இப்பொழுது மேற்குறிப்பிட்ட விடயங்களில் முன்னேற்றங்கள் ஏற்பட்டா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் முழுமையான மாமூல் நிலை ஏற்படவில்லை.

3. மண்டைதீவின் ஒரு பகுதி, அராலி தரவைப்பகுதி, வேலணை மத்திய கல்லூரிச் சுற்றாடல் புங்குடுதீவில், மடத்துவெளி, குறிகாட்டுவான் ஆகியன இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியாக இருப்பதால் இப்பிர தேசங்களைப் பயன்படுத்துவதிலும், வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியால யத்தை அதனது சொந்த இடத்தில் இயங்கவைக்க நீண்ட காலமாக முயற்சி எடுக்க வேண்டியிருந்தது.

4. இப்பிரிவிலிருந்து இடம் பெயர்ந்த மக்களில் கணிசமான தொகையினர் சர்வதேச, தேசிய, பிராந்திய இடப் பெயர்வுக்கு உட்பட்டு புதிதாக வாழ் வையமைத்துக் கொண்ட பகுதிகளில் தொடர்ந்தும் வாழ விருப்பம் கொண் டவர்களாக இருந்து வருகின்றனர். இதனால் பழைய குடிசனத்தொகை யைப் பெறமுடியாதிருக்கின்றது. நலிந்த பிரிவினரே மீள்குடியமர் விற்கு உடன் முன்வந்தனர். வன்னிக் குச் சென்றவர்கள் அங்குள்ள குடி யேற்றத் திட்டங்களிலிருந்த தீவுப் பகுதி மக்களின் உதவியுடன் அங்கு வாழ்ந்து, நிலைமை சீரானதும் இங்கு வரலாம் என்ற எண்ணத்துடன் இருந்ததால் படிப்படியாகவே அவர் கள் தீவுப்பகுதிகளுக்கு மீள்குடியேறி வந்துள்ளனர்.

5. யாழ்ப்பாண நகருக்கு இடம்பெயர்ந்த தீவு மக்கள், தங்கள் கிராமங்களில் பற்றுக்கொண்டவர்களாக இருந்த போதும் பிள்ளைகளின் கல்வி, தொழில் வாய்ப்பு, வாழ்க்கை வசதிகள், சமூக அந்தஸ்து ஆகியன வற்றைக் கருத்திற் கொண்டு, குடும் பத்தை நகரில் வைத்துக் கொண்டு, தங்களது நிலபுலங்களைக் கவனித்து வருகின்ற போக்கு மீள்குடியேற்றம், புனர்வாழ்வு நடவடிக்கைகளை வேகப்படுத்த வில்லை.

6. நெற்காணி, தோட்டக்காணி, பனம் காணி, மற்றும் வீடுவளவுக் காணி களின் சொந்தக்காரர்கள் நகரத்தில் வாழ்ந்து கொண்டு தம் நிலங்களைப் பயிர் செய்வதிலும் அபிவிருத்தி செய்வதிலும் பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளனர்.

7. இப்பிரதேசம் பின்தங்கியதாக இருப் பதால் இப்பிரதேசத்தில் கடமை யாற்ற போதிய அரச, அரசசார்பற்ற ஊழியர்களை உள்ளூரில் பெறுவது கடினமாக இருக்கின்றது. இங்கு கடமையாற்றும் ஊழியர்களில் மிகக் கூடிய விகிதத்தினர் இங்கு நிரந்தர மாக வாழாது யாழ்ப்பாணநகரிலி ருந்து தினசரி கடமைக்கு வந்துபோவ தால் அவர்கள் தம் பணியைச் சிறப் புறச் செய்வதில் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். மேலும் அவர்களின் வருமானம் மற்றும் சமூகத்தில் கொண்டுள்ள செல்வாக் கும் இப்பிரதேச மக்களுக்குச் சென்றடைவதில்லை.

8. இப்பிரதேசத்தின் பொருளா தாரத்தில் மீன்பிடி முக்கியமாக இருந்தாலும் மீன்பிடித்துறையின் வளர்ச்சியினை முன்னெடுப்பதில் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. கடற்படைக் கட்டுப்பாடுகள், இந்திய மீனவர்களின் ஊடுருவல் போன்றன பெரும் பிரச்சினைகளை உருவாக்கியுள்ளன.

மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளின் பின்னணியில் தீவுகள் தெற்குப் பிரதேசத்தை எவ்வாறு அபிவிருத்தி செய்யலாம் என நோக்குவோம்.

இப்பிரிவு 96 சதுர கிலோ மீற்றர் பரப்பளவையும் இன்று ஏறத்தாழ 20,000 மக்களையும் கொண்டு, விளங்குகின்றது. 1981இல் இப்பிரிவு 38,500 மக்களைக் கொண்டிருந்தது. ஆகவே 1981இல் இருந்த மக்கள் தொகையை மீளப்பெற பலவாண்டுகள் செல்லலாம். இடம் பெயர்ந்து பின் மீளக்குடியமரக்கூடிய மக்களின் பெரும் பாலானோர் மீளக் குடியேறிவிட்டனர். இப்பிரதேசம் மேலும் வளர்ச்சியுறும் பொழுது சிறு தொகையினர் மீளக் குடியமர வரலாம். மக்கள் தொகை இடப் பெயர்வால் குறைவடைந்தது. இயற்கை வளத்தில் தாக்கத்தைக் குறைத்தாலும் அது இப்பிரதேசத்தின் எதிர்கால வளர்ச்சியைப் பாதித்துள்ளது எனலாம்.

இப்பிரதேசத்தின் எதிர்காலப் பொருளாதார வளர்ச்சி விவசாயம், மீன்பிடி, விலங்கு வேளாண்மை, பனைசார் தொழில்களில் தங்கியுள்ளது. இதனால் இப்பிரதேசத்தின் நிலம், நீர், கடல், பனை/தென்னை வளங்களை நன்கு காத்து வளம்பெருக்க வேண்டும். இப்பிரதேசத்தில் ஏழு வகையான நிலங்கள் / நிலப்பயன்பாடுகள் காணப்படுகின்றன. அவையாவன.

1. நெற்காணிகள்
2. தோட்டக்காணிகள்
3. வீடும் / வீட்டுத்தோட்டமும்
4. பனை வளவுகள்
5. தரவை நிலம்
6. மணல் நிலம்
7. சதுப்பு நிலம்

**நெற்காணிகள்**

நெற்காணிகள் தாழ் நிலங்களாக இருப்பதுடன் வருடத்தில் ஒருமுறை பெரும்போகத்தில் பயிர் செய்யப் படுகின்றன. நெல் அறுவடை முடிந்ததும் வேறு பயிர் செய்வது மிகமிகக் குறைவு. கோடை காலத்தில் கிணற்று நீர் மிகக் குறைவாகவே இருப்பதால் கோடைப் பயிர்கள் யாதும் செய்ய முடியாதுள்ளது. மேலும் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையால் எள்ளு போன்ற பயிர்களும் செய்யப் படுவதில்லை. மண்டைதீவு, அல்லைப் பிட்டி, புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய பகுதிகளில் நெற்பிரதேசம் நிலப் பயன் பாட்டு மாற்றுக் குள்ளாகவில்லை. ஆனால் வேலணை, சரவணைப் பகுதிகளில் 1970, 1980களில் குறிப்பிடத்தக்க நெற்செய்கைப் பரப்புகள் கொட்டுமண் போட்டு தரையை உயர்த்தி தோட்ட நிலங்களாக மாற்றப்பட்டுள்ளன. இதனால் வயல் நிலங்களின் முக்கியத்துவம் வேலணை, சரவணைப் பகுதிகளில் குறைவடைந்துள்ளது. இப்பிரதேசம் முழுவதும் நெற் செய்கை ஒரு லாபகரமற்ற பயிர்ச்செய்கையாக இருந்துவருகின்றது. உற்பத்திச் செல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுக்கு ஈடுகொடுக்க முடியாததால் நெற்செய்கைப் பரப்புகளின் எல்லை நிலப் பரப்பு அதிகரித்துவருகின்றது. எதிர் காலத்தில் நெற்செய்கைப்பரப்பு முழுவதும் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப் படுவதுடன் கோடை காலத்தில் சிறு தானியங்கள் அல்லது எண்ணெய் வித்துக்கள் உற்பத்திக்குப் பயன்படுத்தப் படக்கூடிய மாதிரி விருத்தி செய்யப்பட வேண்டும். நெற்செய்கை லாபம் தரும் விவசாய நடவடிக்கையாக மாற்றப்பட வேண்டும்.

**தோட்டக்காணிகள்**

தோட்டக்காணிகளின் மிகக்கூடிய விகிதம் ஒரு போக புகையிலை பயிர்செய்யப்பயன்படுத்தப்படுகின்றது. வளம் குறைந்த தோட்டக்காணிகளை வெங்காயச் செய்கைக்கு பயன்படுத்தப் படுகின்றன. நீர் சிக்கன முறையில் புகையிலை, செய்கை இடம்பெறல் வேண்டும். இதற்குப் பொருத்தமான பயிர் அறிமுகம் செய்யப்படவேண்டும்.

**தரவை நிலங்கள்**

இப்பிரிவில் தரவைக்காணிகள் மிக முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. மாரிகாலத்தில் இத்தரவை நிலங்களில் நீர் தேங்கி நிற்கும். நீர் வற்றியதும் இவை புற்தரையாக இருக்கும். இப்பிரதேசங்களில் காணப்படும் ஆடு, மாடுகள் தரவைநிலத்தை மேச்சலுக்குப் பயன் படுத்தப்படுகின்றன எனினும் அண்மைக்காலத்தில் ஒழுங்கற்ற முறையில் மண் அகழ்வு செய்யப் பட்டதால் தரைத் தோற்றத்தில் குன்றுகளும் பள்ளங்களும் ஏற்பட்டுள்ளன. இதனால் தரவைப் பகுதிகள் ஒழுங்கான சமதரையாக மாற்றப்படின் இதன்மூலம் நல்ல பலன் பெறமுடியும். மேலும் இத்தரவை நிலங்களின் பௌதிக சூழலில் வளரக் கூடிய நல்லபுல் இனம் அறிமுகப் படுத்தப்பட்டால் இப்பிரதேசத்தில் விலங்கு வேளாண்மையைச் சிறப்பாக விருத்தி செய்யலாம். மேலும் சோளகக் காற்றுக் காலத்தில் பறக்கும் புழுதியைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும். இத்தரவை நிலங்களில் குறிப்பாக எல்லைப் பகுதிகளில் சமுதாயக்காடுகள் உருவாக்கப்படின், கிராமத்துக்குத் தேவையான விறகு மற்றும் தேவைகளைப் பெறக்கூடிய தாக இருப்பதுடன் இப்பிர தேசத்தைப் பசுமையாகவும் வைத்திருக்க முடியும். ஊர்காவற்றுறை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அல்லைப்பிட்டியிலிருந்து சரவணை 8ஆம் கட்டை வரைக்கும் றோட்டின் இருபக்கமும் மேலும் வடக்கே கடற்கரை வரையும் தரவை நிலம் காணப்படுகின்றது. இதுபோல புங்குடுதீவு, மண்டைதீவு, நயினாதீவிலும் தரவை நிலம் முக்கிய நிலப்பரப்பாக இருக்கின்றது.

**வீடுகளும் வீட்டுத்தோட்டங்களும்**

பெரிய இடப்பெயர்வுக்குப் பின்னர், ஆறு வருடங்கள் வரை மக்கள் இங்கு வாழாது விட்டால் இப்பிரதேசத்து வீடுகளும் வீட்டுத்தோட்டங்களும் பெரும் அழிவுக்குட்பட்டன. இப்பகுதியில் காணப்படும் வீடுகள் / வீட்டுத் தோட்டப் பகுதிகள் உயர்வான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலப்பகுதிகளில் காணப்படுகின்றன. மேலும் நீர், வயல் நிலங்களிலும், தோட்ட நிலங்களிலும் காணப்படும் நீரிலும் பார்க்க சவர்த்தன்மையைக் கூடுதலாகக் கொண்டுள்ளது. இதனால் குடிநீரைக்குழாய் மூலமோ வயல் வெளிகளில் உள்ள கிணறுகளில் இருந்தோ பெறவேண்டியுள்ளது. வீட்டுத் தோட்டங்களில் குறிப்பாக பனை, தென்னை, வேம்பு, முருங்கை காணப்படுகின்றன. வீட்டுத் தோட்டங்கள் பெரும் அழிவுக்குட் பட்டதால் வீட்டுத்தோட்ட வான் பயிர்கள் நடுகைக்கு முக்கியத்துவம் கொடுக்கப் படவேண்டும்.

**பனை வளவுகள்**

பனை வளவுகள் ஒப்பீட்டு ரீதியில் உயரமான பகுதிகளில் அமைந்திருப் பதுடன் இப்பரப்புகள் மிகவும் வளம் குறைந்த பகுதிகளாகக் காணப்படுகின் றன. மணல் பிரதேசங்களிலும் கூடுத லாக பனை / வடலிகள் நெருக்கமாகக் கணப்படுகின்றன. கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்தத்தினால் பெருமளவு பனை மரங்கள் வெட்டி யழிக்கப் பட்டன. இதனால் இப்பிர தேசத்தின் இயற்கை தாவரப் போர்வையை அதிகரிப்பதற்கும், பொருளாதாரக் காரணங்களுக்குமாக பனை நடுகை பெரும் எடுப்பில் மேற்கொள்ளப்பட வேண்டும். இப் பிரதேசத்தின் நில நீர் வளத்துக்கும், காலநிலைக்கும் மிகப் பொருத்தமான மரமாக பனை மற்றும் தென்னை காணப்படுகின்றன.

**மணல் பிரதேசம்**

மண்கும்பான், அல்லைப்பிட்டிக் கிராமங்களில் கடந்த காலங்களில் பெருமளவு மணல் கும்பிகள் இருந்தன. கட்டிடத் தேவைகளுக்குப் பெருமளவு மணல் எடுத்தால் பல இடங்களில் தரைமட்டம் கடல் மட்டத்திலும் பார்க் கக் குறைவாக இருப்பதைக் காணலாம். கட்டுப்பாடற்ற முறையில் மணல் எடுக்கப்பட்டதால் நிலம் பாழநிலமாக மாறியுள்ளது. முன்னர் இருந்த தாவரப் போர்வையை இழந்துள்ளது. சூழல் பேணும் வகையில் இம் மணல் பிர தேசத்து மணல் வளம் பயன்படுத் தப்படவேண்டும்.

**சதுப்புநிலம்**

இப்பிரிவிலுள்ள தீவுகளில் குறிப் பாக மண்டைதீவு, வேலணைத்தீவு, புங்குடுதீவு ஆகியவற்றின் வடகரை யோரப் பகுதிகள் சதுப்பு கரையோர மாகவும், சதுப்புத் தீவுகளையும் கொண்டு காணப்படுகின்றன. மண்டை தீவு, அல்லைப்பிட்டி, பண்ணைக்கு இடைப்பட்ட முக்கோணப்பகுதி ஒரு சதுப்பு நிலப் பகுதியாகவும் கடல்நீர் தாவரத்தைக் கொண்ட பரப்பாகவும் இருக்கின்றது. இப்பிரதேசத்தை பறவை சரணாலயமாக விருத்திசெய்ய வேண்டு மென்று பலமுறை சிபார்சு செய்யப் பட்டும் அது இன்னும் கைகூடவில்லை. யுத்தத்தின் காரணமாக இச்சதுப்பு நில கண்ணாக் காடுகள் பெருமளவு அழிக்கப்பட்டுள்ளன. கடற்கரையோரப் பகுதிகளில் மீன் விருத்திக்கு இச்சதுப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடுகளும், சதுப்பு நிலப் பிரதேசங்களின் இயற்கைச் சூழலும் பாதுகாக்கப்பட வேண்டும்.

**நீர்வளம்**

இப்பிரதேசம் சிறிய நிலப்பரப்புக்களைக் கொண்ட பல தீவுகள், அல்லது நிலத்திணிவுகளைக் கொண்டு இருப்பதால் நீர்வளம் மட்டுப் படுத்தப்பட்டு ஒரு சில இடங்கிளல்தான் நன்னீர்வளம் காணப்படுகிறது. மற்றும் வருடம் முழுவதும் நீர்வளம் பெறுவது கடினமாகவுள்ளது. குறிப்பாக யூலை, ஓகஸ்ட், செப்டெம்பர் மாதங்களில் நீர்நிலைகளில் நீர் முற்றாக வற்றிவிடுவதுண்டு. கிணறுகளில் நீர்மட்டம் கீழ் சென்றுவிடும். குடிநீருக்கு மக்கள் பொது விநியோகத்தை நம்பியிருக்க வேண்டியதாக இருக்கின்றது. இப்பிரதேசத்தில் சாட்டி பிரதேசத்தைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நீர்ப்பிரச்சினை வருடம் முழுவதுமோ அல்லது ஒரு காலப் பகுதியிலோ மக்கள் எதிர்நோக்குகின்றனர். இதனால் சாட்டியை அடிப்படையாகக் கொண்ட வேலணை குடிநீர்த் திட்டமும், அல்லைப்பிட்டியை அடிப்படையாகக் கொண்ட ஊர்காவற்றுறை குடிநீர்த் திட்டம் நல்ல முறையில் பேணப்பட வேண்டும். மிகையான நீர்ப்பாவனை காரணமாக இப்பிரதேசங்களில் காணப்படும் நீர் வளத்தை மக்கள் இழக்க வேண்டிவரும். நீர் வளத்தைப் பேண இப்பிரதேசங்களிலுள்ள குளங்களும், வாய்க்கால்களும் தூர் எடுத்து நல்ல முறையில் பேணப்பட வேண்டும். வேலணைப் பகுதியில் கல்லாண்ட முனைப் பகுதியிலிருந்து சரவணை நாய்க்குட்டிவாய்க்கால் வரையில் மாரிகாலத்தில் ஓடும் சிறு அருவியையும், அதன் வழியில் காணப்படும் குளங்களான பெருங்குளம், நவக்கை, முந்தாய் வெட்டுக்குளம், உப்புக்குளி, புதுக்குளம் போன்றன சிறந்தமுறையில் தூர் வாரி கூடியளவு நீரை வைத்திருக்கக் கூடியதாக மாற்றப்பட வேண்டும். இதேபோல் வேலணை மேற்கு, புங்குடுதீவு, நயினாதீவு, பகுதிகளில் காணப்படும் நன்னீர் நிலைகள் சிறந்த முறையில் விருத்தி செய்யப்பட வேண்டும். கடல்நீர் உள்வராது கட்டப்பட்ட தடுப்பணைகள் தற்பொழுது மீள அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதைக் காணலாம்.

அராலி, சரவணை, அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதிகளில் வடகரையோரப் பகுதிகளில் தடுப்பணைகள் சீர்செய்து புதுப்பிக்கப்பட வேண்டும். நாய்க்குட்டி வாய்க்காலில் அமைந்துள்ள பராஜ் திருத்தப்பட்டால் சரவணையில் கடல்நீர் உட்புகுவதை தடுக்கமுடியும். இதன் வழியாக உவர்நீராவதைக் குறைக்கவும், தரவை நிலங்களில் உவர்த்தன்மையைக் குறைக்கவும் வழிவகுக்கலாம்.

இப்பிரதேசத்து நன்னீர் பழுதுபடாமல் இருப்பதற்கு ஒழுங்குபடுத்தப்பட்ட நீர்ப் பாவணை முக்கியமாகும். தோட்டச் செய்கையை ஒக்டோபரில் தொடங்கி சித்திரை வருடப்பிறப்புக்கு முன்னர் முடிவுக்குக் கொண்டு வர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். 1970களில் மிளகாய்ச் செய்கை மிகவும் அதிகளவாகவும், உற்சாகமாகவும் நடைபெற்ற பொழுது இப்பயிர்ச் செய்கை ஆனி, ஆடி மாதங்கள் வரை நீடித்ததால் நீர் உவர்த்தன்மை அடைந்ததை மக்கள் அறிவார்.

தீவுப்பகுதியின் மிகக்குறைந்த வளமான நன்னீர் வளம் மிகவும் சிக்கன முறையில் நிலைத்துநிற்கும் பண்புடன் பயன்படுத்த வேண்டியதன் உண்மையை மக்கள் யாவரும் அறிந்திருக்கவும், நடைமுறையில் கடைப்பிடிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்பிரதேசத்தின் இயற்கைத் தாவரம் வறள்நிலவளரிப் பிரிவைச் சார்ந்தது. மனித நடவடிக்கை மூலம் பெருமளவு தாவரப்போர்வையை ஏற்படுத்துவது மிகவும் கடினமானதும், நீண்டகாலம் எடுக்கும் செயற்பாடாகவும் இருந்து வருகின்றது. அண்மையில் நடைபெற்ற யுத்தத்தினால் இப்பிரதேசத்தில் பெருமளவு பனை, தென்னை அழிவுக்குட்பட்டன. மேலும் மனித முயற்சியால் நடப்பட்ட வான் பயிர்களும் அழிவுக்குட்பட்டன. இதனால் இப்பிரதேசத்தின் தாவரப் போர்வையை மேம்படுத்த மரநடுகை இயக்கம் சிறப்பாக மேற்கொள்ளப் படவேண்டும்.

**மீன்பிடித்தொழில்**

இப்பிரதேசத்தில் மீன்பிடித்தொழில் மிக முக்கியத்துவம் பெறுகின்ற பொழுதும், இத்தொழிலும், தொழில் சார்ந்த சமூகமும் பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளன. மிகையான மீன்பிடியால் கடலில் மீன்வளம் குறைந்து போக வாய்ப்புண்டு. இந்திய மீனவர்கள் நெடுந்தீவு, கச்சதீவு கடற்பகுதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்கிரமிப்பதால் இப்பகுதி மீனவர்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகின்றனர். மேலும் இப்பிரிவில் மீன்பிடித்துறை முகங்களில் இறங்குதுறைகளோ, மீன்பிடித்துறை முகங்களோ இல்லாதிருப்பது பெரிய குறைபாடாகும். இதனால் வேலணை செட்டிபுலத்தில் மீன்பிடித்துறைமுகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். இக் கோரிக்கை நீண்ட காலமாக இருந்த வருவதுடன் 1959இல் தயாரிக்கப்பட்ட 10 ஆண்டுத் திட்டத்திலும் இவ்மீன் பிடித்துறை முகத்திட்டம் இனங்காணப்பட்டுள்ளது. மேலும் மீன்பிடித்தொழில் வளர்ச்சிக்கு கெட்டில், துறையூர், அல்லைப்பிட்டி, புங்குடுதீவு, நயினா தீவுகளில் இறங்குதுறைகள் அமைக்கப்படவேண்டும். வெளிச்ச வீடுகள் இல்லாதிருப்பதும் மீனவர் களுக்குப் பெரும் இடர் பாடாகவுள்ளது. ஆகவே மீன்பிடித் தொழிலையும் இதில் ஈடுபட்டுள்ள சமூகத்தையும் முன் னெடுக்க இரு முனைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படவேண்டும்.

பனைசார் தொழிகளில் பாய் பெட்டி, கடகம் இழைத்தல் போன்ற தொழில்கள் மீண்டும் விருத்தி செய்ய சாதகமான நிலை ஏற்படலாம். சுற்றுச் சூழல் பேணும் பிரிவினர் பிளாஸ்டிக் பை பாவனையால் ஏற்படும் பிரச்சினைகளை முன்னெடுப்பதால் சூழல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிநேகிதமான பனம் பொருட் பாவனைக்கு கிராக்கி ஏற்பட வாய்ப்புண்டாகும். இச்சூழ் நிலையைச் சரியானமுறையில் அணுகி பனைசார் தொழில்களை மேம்படுத்த வேண்டும். கள்ளு, கள்ளை அடிப்படையாக்கொண்ட மதுபாவனை வகைகள் உற்பத்தியைப் பெருக்க வாய்ப்புண்டு.

தொகுத்து நோக்குகையில் இப்பிரதேசத்து நிலம், நீர் கடல் மற்றும் பனை, தென்னை, வளங்களை நிலைத்து நிற்கக்கூடிய முறையில் அபிவிருத்தி செய்தால் இப்பிரதேசத்தின் பொருளாதாரத்தை முன்னெடுக்கலாம். இந்நிலையை அடைந்த பின்னர், இப்பிரதேசத்து இயற்கை வனப்புக்களை நல்ல முறையில் பயன்படுத்தி, சுற்றுலாத் துறையை வளர்க்கமுடியும். அல்லைப்பிட்டி, மண்கும்பான், வெள்ளைக் கடற்கரை, புங்குடுதீவு கண்ணகியம்மன் கடற்கரை மற்றும் பல சிறுதீவுகள், கடல்நீர் ஏரிகள் ஆகியன சுற்றுலாத் துறை வளர்ச்சிக்குப்பெரிதும் உதவியாக அமையும். நயினாதீவில் அமைந்துள்ள புகழ் பெற்ற நயினை நாகபூஷணியம்மன் கோயில், புத்தவிகாரை, தலயாத்திரை இடங்களாக விருத்தி செய்ய நிறைய வாய்ப்புண்டு. இவ் அபிவிருத்தி முயற்சிகளால் பெருமளவு வேலை வாய்ப்புகள் உருவாக வழியுண்டு. ஆகவே தீவுகளின் அபிவிருத்திக்குப் பல உள்ளார்ந்த இயற்கை வளங்கள் இருப்பினும், இவைகளைப் பயன்படுத்த சிறந்த போக்குவரத்து வசதிகளையும், உயர்வான மனித வளத்தையும் விருத்தி செய்தல் வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

**சரவணைக் கடல் நீரேரியும் வேலணைச் சிற்றருவியும்**

இன்று சர்வதேச ரீதியாக நுண்திட்டங்கள் பற்றிய ஆய்வு களிலும், அவற்றை விருத்தி செய்வதிலும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டப்பகுதி (UNDP), அரசுகள், சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் பல கூடிய கவனம் செலுத்துகின்றன. நுண் திட்டங்கள் மூலம் குறித்த பிரதேசத்து பௌதீக வளங்களையும், மக்களையும், தொடர்பு படுத்தி அபிவிருத்தி காணும் முயற்சிகள் மூலம் இன்று அபிவிருத்தியில் முன்னிலைப் படுத்தப்படுகின்ற கிராமிய அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு, பெண்கள் வலுவூட்டல், மனிதவள மேம்பாடு, சூழற் பாதுகாப்பு அடைந்து, நிலைத்து நிற்கக் கூடிய பொருளாதார அபிவிருத்தியைக் காணலாம். குறைந்த நிதியுடனும், மக்களை இலகுவாக அணிதிரட்டி, அவர்களின் கூடுதலான பங்களிப்புகளுடனும், நுண் திட்டங்களை மேற்கொள்ள முடியும். இத்திட்டங்களின் பயன்களையும், இதன் பயனாளிகளின் முன்னேற்றங்களையும் இலகுவாக இனங்காணவும், கண்காணிக்கவும் முடியும். இக்கருப்பொருளின் அடிப்படை யிலேயே இக்கட்டுரை அமைகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாடு 25க்கு மேற்பட்ட பெரிய, சிறிய, நுண்ணிய நிலத்திணிவுகளை உள்ளடக்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலத்திணிவுகள் கடல் நீரேரிகளால் பிரிக்கப்பட்டுள்ளன. குடாநாட்டில் ஆயிரத்துக்கு மேற்பட்ட குளங்களும், சிறுநீர்க் குட்டைகளும் காணப்படு கின்றன. குடாநாட்டில் சிறிய பல பருவ கால அருவிகள் உள. இவற்றுள் மிக முக்கியமானதும், நன்கு அறியப்பட்ட தும் வழுக்கையாறாகும். பல பருவகால அருவிகள் இருந்தபொழுதும் அவைகள் பற்றிய ஆய்வு இடம் பெற்றதும், எழுதப் பட்டதும் மிகக் குறைவாகும். பருவகால சிறு அருவிகளுள் சரவணைக் கடல் நீரேரியும், வேலணைச் சிற்றருவியும் அடங்கும். குடாநாட்டிற்கு மேற்கே பல தீவுகள் வெவ்வேறு பரப்புக்களில் அமைந்துள்ளன. அட்டவணை ஒன்றில் இத்தீவுகளும் இத்தீவுகளின் பரப்பளவு களும் தரப்பட்டுள்ளன.

இத்தீவுகளுள் மிகப்பெரியது வேலணைத் தீவாகும். இது 6401 ஹெக்டர் நிலப்பரப்பை உடையது. சரவணைக்கடல் நீரேரியும், சுருவில் குடாக்கடல் நீரேரியும் இத்தீவின் பெரும் பகுதித் தரைகீழ் நீரின் உவர் தன்மையைத் தீர்மானிப்பதில் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

அல்லைப்பிட்டி, மண்கும்பான், சாட்டி பகுதிகளிலேயே சிறந்த தரமான நீர் இருப்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பிட்ட நீரேரியும், அருவியும் வேலணைத் தீவின் நடுப்பகுதியில் உள்ளன. 7கிலோமீற்றர் நீளமான இவ்வருவி கார்த்திகை, மார்கழி, தை மாதங்களில் உயர் மழைவீழ்ச்சி பெறும் காலங்களில் கல்லாண்டு முணங்கில் உற்பத்தியாகி வேலணை கிழக்குக் கிராமங்களினூடாக ஓடிக் கண்ணா வோடையில் சரவணைக் கடல் நீருடன் இணைந்து (நாவாய் வெட்டிய வாய்க் கால்) நாய்க்குட்டி வாய்க்கால் பகுதியில் கடலுடன் சங்கமிக்கின்றது. இவ்வருவி வேலணை தெற்கு அம்மன் கோவிலடி, வங்களாவடி, கூழாதோட்டம், தாழி புலம், ஆலம்புலம், அச்சுவாலி, நாவல டிப்புலம், கண்ணாவோடை, சோழா வத்தை, பள்ளம்புலம், மயிலப்புலம், சரவணை ஆகிய கிராமங்களையும், அராலி தரவைப்பிரதேசம் முழுவதையும் உள்ளடக்கியதாக அமைகின்றது. இதன் வடிகால் அமைப்பின் மொத்த நிலப் பரப்பு 1500 ஹெக்டராகும்.

இவ்வடிகால் பிரதேசத்தின் வடிகால் பண்பை ஆராய்வதற்கு இப்பிர தேசத்தின் புவிச்சரிதவியல், நுண் பௌதீக நிலவுருவம், மழைவீழ்ச்சி ஆகியவற்றை நோக்குவது பொருத்த மாகும். புவிச்சரிதவியல் ரீதியில் இப்பிரதேசத்தை இரு பிரிவுகளாக நோக்கலாம்.

1. ஊர்காவற்றுறை - யாழ்ப்பாணம் வீதிக்குத் தெற்கேயுள்ள பிரிவு
2. இவ்வீதிக்கு வடக்கேயுள்ள பிரிவு

தென்பிரிவில் சுண்ண அடையற் பாறைகள் காணப்படினும் அவை வடக்குப் பாறைகளை விட வயதிற் கூடியவையாகவும், இறுக்கமான கற்பகுதிகளாகவும் உள்ளன. வடபகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைக்காலப் படிவுகளைக் கொண்டுள்ளன. இவை சிற்பி, சங்கு, ஊரி ஆகியன நிறைந்து விளங்கும் இளகிய உவர்மண் திடலாகக் காணப்படுகின்றன.

இச்சிற்றருவியின் வடிகால் பகுதியின் நுண் தரைத் தோற்றத்தை 3 பிரிவுகளாகப் பிரிக்கலாம். 1.சிற்றருவி ஆரம்பமாகும் நீரேந்தும் மேற்பகுதி, 2.நீரேந்தும் நடுப்பகுதி, 3.நீரேந்தும் கீழ்ப்பகுதி.

மேற்பகுதியின் சராசரி உயரம் 10அடிக்கு மேற்பட்டது. கல்லாண்டு முணங்குப் பகுதி கடல்மட்டத்திலிருந்து 13அடி உயரத்தில் அமைந்துள்ளது. இதுவே இத்தீவின் அதி உயரமான இடமாகும். இப்பகுதிக்குள் கள்ளக் கடவை, தென்காட்டுப் பகுதிகள் உள்ளடங்குகின்றன.

அருவியின் நடுப்பகுதி 5 அடிக்கும் 10அடிக்கும் இடைப்பட்ட உயரத்தை உடையது. பெருங்குளத்தின் தென்பகுதியிலிருந்து வடக்கே ஊர்காவற்றுறை - யாழ்ப்பாணம் வீதிக்குக் கிட்டிய தூரம் வரையில் இடைப்பட்ட பிரதேசம் அருவியின் நடுப்பகுதிக்குள் அடங்குகின்றது. இப்பகுதிக்குள் இயற்கையாக அமைந்த சிறு உயர வேறுபாடுகளைத் தவிர கடந்த 30 வருடங்களாக நெற்செய்கைப் பிரதேசங்களாக இருந்த தாழ்நிலங்கள் கொட்டுமண்மூலம் உயர்த்தப்பட்டுத் தோட்டநிலங்களாகவும் வாழ்விடங்களாகவும் மாறியுள்ளன. இம்மாற்றத்திற்கு உட்பட்ட நிலங்கள் சராசரியாக 2 - 3 அடியால் உயர்ந்துள்ளன. ஆகவே இப்பிரதேசத்தின் நுண் உயர மாற்றத்தில் மனித செயற்பாடு பெரும் பங்களிப்புச் செய்துள்ளது. இம்மாற்றத்தால் அருவியின் இயல்பான வடிகால் ஒழுங்கு பாதிப்புக்குள்ளாகி உள்ளது.

அருவியின் நீரேந்தும் கீழ்ப்பகுதி தரவை நிலங்களையும், சதுப்பு நிலங்களையும், சரவணைக் கடல் நீரேரிப் பகுதியையும், வெள்ளம் தேங்கும் பகுதியான அராலி வீதி 3ஆம் கட்டைப் பிரதேசங்களையும், உள்ளடக்கியது. இப்பிரதேசம் முழுவதும் கார்த்திகை, மார்கழி மாதங்களில் ஒரு சில மண்மேடுகளைத் தவிர ஏனைய பகுதிகள் யாவும் நீர் மேவி நிற்பதைக் காணலாம். மழை காலம் முடிய நீர் வற்றிச் சென்று ஆவணி, புரட்டாதி மாதங்களில் முழுப் பிரதேசமும் புழுதி நிறைந்த வரண்ட நிலங்களாகக் காணப்படும். இப் பகுதியில் கோடைகால நண்பகலில் கானல் நீர் ஓடுவதைப் பார்க்கலாம்.

வடிகால் பிரதேசத்தின் மழைவீழ்ச்சி யாழ்ப்பாணக் குடாநாட்டின் மழைவீழ்ச்சியின் பருவ ஒழுங்கை ஒத்திருந்த போதும் மழைவீழ்ச்சி அளவில் சற்றுக் குறைவாக உள்ளது. பல சந்தர்ப்பங்களில் யாழ்ப்பாணப் பகுதியில் மழை பெய்யும் போது மண்கும்பான் பிள்ளையார் கோவிலுக்கு அப்பால் மழை பெய்யாதிருந்தமை கட்டுரை ஆசிரியரால் அவதானிக்கப்பட்டது. யாழ்ப்பாணக்குடாநாடு இலங்கை விவசாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டவணை - 1**
**குறித்த தீவுகளும் அவற்றின் பரப்பளவுகளும்**

| பெயர் | (பரப்பு)ஹெக்டரில்) | பெயர் | (பரப்பு)ஹெக்டரில்) |
|---|---|---|---|
| துருத்துப்பிட்டி | 14 | மண்டைதீவு | 756 |
| காரைதீவு | 2295 | கண்ணாத்தீவு | 122 |
| எழுவைதீவு | 140 | ஊரதீவு | 1 |
| பருத்தித்தீவு | 38 | புங்குடுதீவு | 2256 |
| அனலைதீவு | 482 | கானாத்தீவு | 97 |
| புளியந்தீவு | 44 | பாலைதீவு | 16 |
| வேலணைத்தீவு | 6401 | கண்ணாபிட்டி | 1 |
| குறிஞ்சாத்தீவு | 5 | செருஞ்சாத்தீவு | 4 |
| சிறுத்தீவு | 28 | நடுவுத்துருத்தி | 88 |
| நெரியன்பிட்டித்தீவு | 2 | குறிகட்டுவான் | 38 |
| கண்ணாடித்தீவு | 19 | நயினாதீவு | 422 |
| | | நெடுந்தீவு | 4717 |
| | | கச்சதீவு | 68 |

சூழலியல் பாகுபாட்டில் DL3 பிரிவுக்குள் அடங்க, இவ்வடிகாற் பிரதேசம் DL4 பிரிவுக்குள் அடங்குகின்றது. DL4 பிரிவு DL3 பிரிவிலும் பார்க்க விவசாயச் சூழலியலில் வரட்சி உவர்த்தன்மை கூடியதாகும்.

வேலணை அருவி பாயும் வழியை நோக்கின் இது குளங்களையும், சிறிய ஒடுங்கிய வாய்க்கால்களையும், இணைத்ததாக உள்ளது. சில பகுதிகளில் அருவி பரவிப்பாய்கின்றது. இது கல்லாண்டு முனைப்பகுதியிலிருந்து ஆரம்பமாகி ஏறத்தாழ 1.5 கிலோமீற்றர் தூரம் வடக்காக ஓடி பெருங்குளத்தில் இணைகின்றது. மேலும் ஒரு கிளை பெரும்படை ஐயனார் கோயில் பகுதியிலிருந்து உருவாகி பெருங்குளத்தை அடைகின்றது. இக்குளம் அண்மைக் காலத்தில் விருத்தியாக்கப்பட்டு, குளக்கட்டு உயர்த்தப்பட்டு குளம் ஆழமாக்கப் பட்டிருப்பதால் குளத்தில் நீரின் கொள்ளளவு அதிகரித்துள்ளது. குளத்தில் நீர் நிறைந்து இருக்கும் போது செட்டிபுலக் கடற்கரையில் புல்லோடையில் சிறிய நன்னீர் ஊற்று ஒன்று தொடர்ச்சியாக ஓடிக்கடலை அடைவதைக் காணலாம். இது சுண்ணாம்புக் கற்பிரதேசங்களில் காணப்படும் பண்புகளில் ஒன்றாகும். கீரிமலை ஊற்றைப் போன்ற மிகச்சிறிய ஊற்று இது. பெருங்குளக் கரையில் பிரசித்தி பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலணை முத்துமாரி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது.

வேலணை அருவி பெருங்குளத்திலிருந்து சிறு வாய்க்கால் வழியாக கூழா தோட்டம் தாழிபுலம் ஊடாக வளைந்து வளைந்து ஓடிநவக்கைக் குளத்தை அடைகின்றது. இக்குளம் நீர் நிரம்பி நீர் கோடாலி வயல் வாய்க்கால் வழியாக ஆலம்புலம் நீரையும் சேர்த்துக் கொண்டு முந்தாய் குளத்தை அடைகின்றது. இக்குளம் அண்மையில் விருத்தியாக்கப்பட்டு இதன் நீரின் கொள்ளளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் வரட்சிக் காலங்களில் முன்னர் போல் நீர் முற்றாக வற்றுவதில்லை. இக்குளத்தின் தென்பகுதியில் கோடையில் நீர் வற்றி அதன் தளம் காய்ந்து பொருக்காக மாறும்போது விவசாயத் தேவைக்காகக் குளப்பொருக்கு பசளைத் தேவைக்கு அள்ளப்படுகின்றது. இக்குளத்தின் கிழக்குப் பகுதியில் கட்டுவயற் பகுதியும், வடமேற்குப் பகுதியில் அக்கவாலிக் கிராமமும், அமைந்துள்ளன. கடும் மழை காலங்களில் குளத்தில் நீர் நிரம்பி, கட்டுவயற் பகுதிக்குள்ளும், அக்கவாலிக் கிராமத்திற்குள்ளும் பரவுவது உண்டு. இச் சந்தர்ப்பங்களில் நீர் வடிந்தோடும் வரை பொறுமை காக்காது வெள்ளத் தாற் பாதிக்கப்படுவோர் கிழக்கு அணையை வெட்டி நீரைத் துரிதமாக வெளியேற்றிவிடுவர். இதனால் வெள்ளத்துடன் தேக்கி வைத்திருக்கக்கூடிய நீரின் ஒரு பகுதியும் வெளியேறிப் பயனற்றுப் போகின்றது. அணையும் அடிக்கடி சீர் செய்ய வேண்டியுள்ளது. இக்குளத்தின் கரையில் மிகப்பெரிய ஆலமரத்துடன் கூடிய கோபுரத்தடி வைரவர் ஆலயம் உள்ளது.

மூந்தாய்க் குளம் நீர்நிரம்பி அதன் வடக்கு, கிழக்குக் கால்வாய்கள் வழியாக வெளியேறும் வடக்கு வாய்க்காலின் முற்பகுதி தற்பொழுது தூர்ந்துள்ளதால் நீர் வெளியேற்றம் கிழக்கு வாய்க்கால் மூலமே நடைபெறுகின்றது. இங்கிருந்து வெளியேறும் நீர் மெலிஞ்சினா வெளித் தரவைப் பகுதியில் பரவி ஓடி, சோனகன் காட்டு தெற்குக் கால்வாய் வழியாகவும் மூந்தாய் வடக்குக் கால்வாய் பிற்பகுதி வழியாகவும் பாய்ந்து கண்ணாவோடைக் குளத்தை அடைகின்றது. இக்குளத்திலிருந்து யாழ்ப்பாணம் - புங்குடுதீவு வீதியில் அமைந்துள்ள கண்ணாவோடை மதகு வழியாக அருவி வீதியைக் கடந்து கண்ணாவோடை வாய்க்கால் வழியாக அதிசய வைரவர் கோவில் வரை சென்று சரவணைக்கடல் நீரேரிப் பகுதியில் சங்கமமாகி கடல் நீரேரியுடன் சேர்ந்து ஊர்காவற்றுறை - யாழ்பபாணம் வீதி 6வது கட்டை மதகுவழியாக வடக்கு நோக்கிப் பாய்ந்து நாய்க்குட்டி வாய்க்கால் நீர்த்தடுப்பைக் கடந்து கடலை அடைகின்றது. சரவணைக்கடல் நீரேரிப் பகுதிக்குள் வரும் இந்நீர் பரந்த பிரதேசத்தில் பரவிக் காணப்படுவதுடன் சரவணைச் சுடலைப் பகுதியில் இரண்டாகப் பிரிந்து பின் வடக்கில் ஒன்றாக இணைந்து காணப்படுகின்றது. சரவணைப் பகுதியில் நீர் முற்றாக வற்றும் போது, உப்பு விளைந்தும், சூரிய ஒளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கத்தால் பகலில் நிலம் பிரகாசமாகக் காட்சி தரும்.

வேலணைச் சிற்றருவிக்கும் பின்னர் சரவணை நீரேரிக்கும் மழைகாலத்தில் பல வாய்க்கால்கள் வழியாக நீர்வரவு காணப்படுகின்றது. பின்வரும் வாய்க் கால்கள் குறிப்பிடத்தக்கவை.

01. பெருங்குளத்திலிருந்து கிழக்கே உள்ள செல்வநாயகம் வீதி, இராச வீதிப் பகுதி நீர். இது வாய்க்கால் வழியாக மேற்கு நோக்கிச் சென்று பெருங்குளத்தை அடை கின்றது.
2. செட்டிபுலத்திலிருந்து மேலதிகமாக ஓடும்நீர் வெட்டுக் குளத்தை அடைந்து ஒடுக்கமான வாய்க்கால் வழியாக வடக்கு நோக்கிச் சென்று உப்புக் குழிக்குளத்தை அடைகின் றது. இக்குளத்திற்கு சாட்டிக்கு மேற் காகவுள்ள பகுதி நீரும் வந்து சேரு கின்றது. இக்குளத்திலிருந்த மேலதிக நீர் கிழக்குக் கட்டுவயல் தரவைப் பகுதி ஊடாகப் பரவிப் பாய்ந்து சண்டைக்காடு, புட்டிவளவு பகுதி நீரையும் சேர்த்து சோனகன் காட்டு வடக்கு வாய்க்காலை மெலிஞ்சினா வெளியூடாகப் பரவிப் பாய்ந்து சந்திக்கின்றது.
3. வேலணை மேற்கிலிருந்து நாலா வரையிலிருந்து கிழக்கு நோக்கி வாய்க்கால் வழியாக ஓடிவரும் நீர் பழைய பஸ் கம்பனிக்கு அண்மையில் பெருங்குளத்தை அடைகின்றது.
4. கொட்டப்பெட்டி மூலைக்குக் கிழக் காக ஆரம்பமாகும் ஒரு சிறு வாய்க் கால் நவக்கை சங்கக்கடைக்கு அண்மையாக அரசடி மதகு வழியாக நவக்கைக் குளத்தை அடைகின்றது.
5. இலந்தைக் காட்டுப் பகுதியிலிருந்து ஆரம்பமாகும் ஒரு சிறு வாய்க்கால் அப்பகுதி மேலதிக நீரை கிழக்கு நோக்கி எடுத்துச் சென்று கோடாரி வயல் ஊடாக முந்தாய்க் குளத்தை அடைகின்றது.
6. ஆரவயற்பிட்டியில் ஆரம்பமாகும் வாய்க்கால் இணுக்க வயல் ஐவந்தி டல் வயற்பகுதியில் வழியாகச் சென்று புதுக்குளத்தை அடைகின் றது. இக்குளத்திற்கும் பள்ளப் புலம் பகுதியிலிருந்தும் பிறிதொரு வாய்க் கால் மூலம் நீர் சேருகிறது. குளம் நிரம்பும் காலத்தில் அதனது வடக்கு வாய்க்கால் வழியாக நீர் கண்ணா வோடை மதகடியில் பிரதான அருவி யைச் சந்திக்கின்றது. இக்குளம் அருகே பிரசித்தி பெற்ற நாச்சிமார் கோவில் அமைந்துள்ளது.
7. சோழாவத்தை பள்ளம்புலம் பகுதியி லிருந்து ஆரம்பமாகும் வாய்க்கால் கள் சரவணைக் கடல் நீரேரியை அது ஆரம்பமாகும் இடத்தில் சந்திக் கின்றன.
8. சரவணை கிழக்கிலிருந்து சூளை வுண்டான் குளத்தை மையமாகக் கொண்ட வாய்க்கால் கிழக்கு வடக் காகச் சென்று யாழ் ஊர்காவற்றுறை வடக்கு வீதியில் 7ம் கட்டையில் சரவணைக் கடல் நீரேரியுடன் இணைகின்றது.
9. சரவணை மேற்கிலிருந்து ஆரம்ப மாகும் வாய்க்கால் தெங்கங்குளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நாச்சிமார் கோவிலடிக் குளம்) தெற்கில் வேலணை புளியங்கூடல் சந்தி வீதிக்கு தெற்காக உள்ள குளத்து நீரைப் பெற்று நிரம்பி வாய்க்கால் வழியாக கிழக்காகச் சென்று கட்டு வன் குளத்தை நிரப்பி சரவணை கிழக்கு கட்டுவன் ஐயனார் கோவிலுக்கு அண்மையாகச் சென்று வடக்கு வீதியைக் கடந்து சரவணைக் கடல் நீரேரியை சென்றடைகின்றது.

10. சரவணை கிழக்கு கெழுவுக்கேணி மேலதிக நீர் வாய்க்கால் சரவணை சுடலைக்கு அண்மையாக கடல் நீரேரியை சென்றடைகின்றது.

மேற்குறிப்பிட்ட வாய்க்கால்களைத் தவிரவுள்ள பகுதியின் பிரதான வீதிக்கு வடக்கேயுள்ள தரைப்பகுதி இடிவிழுந்த குண்டுக்கு மேற்காக நீர் முழுவதும் மேற்கு நோக்கி வடிந்து சரவணைக் கடல் சீர் ஏரியை அடைகின்றது.

சரவணைக்கடல் நீர் ஏரியானதும் வேலணைச் சிற்றருவியினதும் வடிகாற் பிரதேசத்தின் அபிவிருத்தியை நோக்கி இப்பிரதேசத்தில் உவர்நீர் குடியிருப்புப் பகுதிகளுக்குள் உட்புகாது தடுப்பதற்கு நீர் வெளியேற்றத்தை ஒழுங்கு படுத்துவதற்கும் 1950 களிலேயே இரு தடுப்பணைகளும், மேலதிக நீர் வெளியேற்றும் கதவுகளும் அமைக்கப்பட்டன. நீண்ட காலமாக சரவணை அணையும், நீர் வெளியேற்றும் கதவுகளும் சரியான முறையில் பராமரிக்கப்படாததால் இத்திட்டத்தால் எதிர்பார்க்கப்பட்ட பலனைப் பெறமுடியாது போய்விட்டது. தற்போது தடுப்பணையும் கதவுகளும் திருத்தப்பட்ட நிலையிலும் மண் கும்பான் அணை திட்டமிட்டபடி திருத்தப்படுமிடத்து எதிர்பார்க்கப்படும் பலன்களை அடைய முடியும். இதற்கு இப்பகுதி மக்களினது பங்களிப்பு பெருமளவிற்குத் தேவைப்படுகின்றது. சரவணைக்கு வடக்கே சுருவிலில் அமைக்கப்பட்டுள்ள குடாக்கடல் உவர் நீர்த்தடுப்பு அணையால் சுருவில், சின்னமடு, புளியங்கூடல், சரவணையின் வடமேற்குப் பகுதிகள் ஆகிய இடங்களின் நீர் வளம் குறிப்பாக உவர்த் தன்மை குறைந்துள்ளதென விவசாயிகள் தெரிவிக்கின்றனர். ஆகவே இதனைப் போன்ற மாற்றம் சரவணைக் கடல் நீரேரித் திட்டம் சரியான முறையில் முகாமைப்படுத்தப்பட்டு செயற்படுத்தப்படும் போது சரவணை கிழக்கு, மயிலப்புலம், சோழாவத்தை, பள்ளம் புலம், நாவலடிப்புலம் ஆகிய பகுதிகள் நீர் வளத்தில் நன்மை அடைய முடியும்.

வேலணைச் சிற்றருவியின் வடிகாற் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள குளங்களின் மண் அள்ளப்பட்டு வயல்களை மேட்டு நிலங்களாக மாற்றப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனால் இயற்கையான வடிகால் ஒழுங்கு முறை பாதிக்கப்பட்டுள்ளது. பெருவீதிக்கு வடக்காக உள்ள தரவை நிலங்களினது மண் அகழ்தலால் நிலம் குன்றும், குழியுமாகக் காணப்படுகின்றது. இதனால் வாய்க்கால்கள் பல இடங்களில் தடைப்பட்டும் தூர்ந்தும் உள்ளன. நீர் வடிதல் பாதிக்கப்படுவதால் நீர் தடைப்படும் இடங்களில் நீர் தேங்கி சதுப்புத்தன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுகின்றது. ஆகவே இப்பிரதேசத்தின் வடிகால் வலைப் பின்னலைச் சீர்செய்ய வேண்டியுள்ளது.

இப்பிரதேசத்தின் நீர் வளத்தையும் தரத்தையும் உயர்த்தும் போது, பிரதேசத்தின் பொருளாதாரம் மேம்பட பின்வரும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

01. வடிநிலப் பிரதேசத்திலுள்ள குளங்கள் தூர்வாரப்பட்டு, குளங்களின் நீர்கொள்ளளவு உயர்த்தப்பட்டு நீரின் தூய்மையும் பேணப்பட வேண்டும். இக் குளங்களை இணைக்கும் வாய்க்கால்கள் சீர் செய்யப்பட வேண்டும். இதனால் குளங்களை அண்டிய பிரதேசம் ஈரலிப்பான தாகவும், தரைகீழ் நீர் மீளவும் நிரம்பவும் வழி பிறக்கும். குள நீரை அடிப்படையாகக் கொண்டு ஏற்று நீர்ப்பாசனம் மூலம் விவசாயத்தை அதிகரிக்கலாம். ஏற்கனவே இக்குளங்களிலிருந்து ஏற்று நீர்ப்பாசனம் மூலம் பயிர்ச் செய்கைக்கு நீர் சிறியளவு பயன்படுத்தப்படுகிறது. மேலும் கிராமத்தவர் தம் தேவைக்கு இக் குளத்தைப் பயன்படுத்தலாம்.
02. நாய்க்குட்டி வாய்க்கால் சரவணை அணையிலிருந்து கண்ணாவோடை வரை பரந்திருக்கும் சரவணைக்கடல் நீரேரியின் உவர்த்தன்மையைக் குறைப்பதற்கும், குறைந்தது இந்நீர் இப்பிரதேசத்தில் காணப்படும் பெருமளவு எண்ணிக்கையான கால்நடைகளின் பாவனைக்கு ஏற்ற வகையில் உவர்நீரின் தரம் மேம்படுத்த வேண்டும். நீரின் தரம் மேம்படுத்த வடக்குத் தரவை நிலம் தரமான புற்களைக் கொண்ட இயற்கையான மேய்ச்சல் நிலமாக மாற வழி பிறக்கும்.
03. இப்பிரதேசத்தில் நிலப்பயன்பாடு, விவசாயம் ஆகியவற்றை இதனது இட அமைவு, மழை வீழ்ச்சி ஒழுங்கு ஆகியவற்றைச் சிறப்பாகக் கருத்திற் கொண்டு விஞ்ஞான ரீதியான முகாமைத்துவம் முன்னெடுக்கப்பட வேண்டும். இப்பிரதேசத்து நீர்வளம் உவர் நீராகக் கூடிய வாய்ப்பு இருப்பதால் தரைகீழ் நீர்ப்பாவனை மட்டுப்படுத்தப்பட்டதாக அமைய வேண்டும். ஆகவே இப்பிரதேசத்தில் பங்குனி, சித்திரைக்குப் பின்னர் பெருமளவு நீரைப் பயன்படுத்தும் பயிர்ச் செய்கைகள் தவிர்க்கப்பட்டு வரட்சியைத் தாங்கக்கூடிய, நீர்ப்பாசனம் அற்ற சிறு பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

வடிநிலப் பிரதேசத்தில் தாவரப் போர்வை மிகக் குறைவாக இருப்பது கடந்த இரு தசாப்தங்களாக பெருமளவு பனை, தென்னை அழிக்கப்பட்டிருப்பதால் இப்பிரதேசத்தின் தாவரப் போர்வையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். பெருவீதிக்கு வடக்கே உள்ள பிரதேசத்தில் வரட்சியைத் தாங்கக்கூடிய மரநடுகை பெருமளவில் மேற் கொள்ளப்பட வேண்டும்.

மரநடுகை மூலம் தாவரப் போர்வை அதிகரிக்க, இப்பிரதேசத்தின் சூழலியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகள் பெரியளவில் மாற்றத்திற்குள்ளாகும். கடும் சோளகத்தால் வரட்சியாக்கப்படுவதும், மண்புழுதி ஏற்படுவதும் தடுக்கப்பட்டு, காற்றின் வேகம் குறைக்கப்பட்டு, ஓரளவு பசுமையான தோற்றம் பிறக்க வழி வகுக்கலாம். 1991ஆம் ஆண்டு துன்பகரமான முழு இடப்பெயர்வுக்குப் பின் 10,000க்கு மேற்பட்ட மக்கள் இப்பகுதியில் வாழ்ந்தனர். இடப்பெயர்வு காரணமாக இப்பிரதேசத்தின் மக்கள் தொகை குறைந்தும், உட்கட்டு மானங்கள் அழிக்கப்பட்டும் வாழ்வியல் வாய்ப்புக்கள் குறைக்கப்பட்டும் உள்ளன. இந்நிலையில் இப்பிர தேசத்தில் மீள் குடியேற்றம், புனர்வாழ்வு புனருத்தாரண நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளன. ஆகவே இந்நடவடிக்கைகளில் சரவணைக்கடல் நீரேரியினதும் வேலணைச் சிற்றருவி வடிநிலத்தினதும் அபிவிருத்தி முக்கிய இடம் பெறவேண்டும். ஆகவே இவ்வடி நிலத்தில் கிடைக்கும் நீரைச் சரியான முறையில் தரைமேல் நீராகவும், தரைக்கீழ் நீராகவும் தேக்கிசிக்கனமாகப் பயன்படுத்தி இவ்வடிநிலத்தை உச்ச வினைத்திறன் மிக்க நிலப்பயன் பாட்டிற்கு கொண்டு வருவதுடன் பல தேவைகளுக்கு ஏற்ற நீரையும் பெறமுடியும். இதனால் குடிநீருக்காக சாட்டி நீரில் தங்கியிருக்கும் நிலையைக் குறைக்க முடிவதுடன் சாட்டி நீர்வளம் குறைந்து போவதையும் காக்க முடியும்.

(இக்கட்டுரை இப்பிரதேசம் பற்றிய நீண்ட கால அனுபவ அடிப்படையில் எழுதப்பட்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அலுவலக உத்தியோகத்தர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முதலாவது படத்தில் முன்வரிசையில் இருப்பவர்கள் இடமிருந்து வலம்**

1. திருமதி.பொ.சண்முகலிங்கம் - பிரதம எழுதுனர் (நிர்வாகம்)
2. செல்வி.த.சறோஜினிதேவி - நிர்வாக உதவியாளர்
3. திருமதி.மீ.திசநாயகம்பிள்ளை - உதவித்திட்டமிடற்பணிப்பாளர்
4. திரு.மு.நந்தகோபாலன் - பிரதேச செயலர்
5. திரு.வே.வேல்நிதி - கணக்காளர்
6. திரு.ப.லோகநாதன் - நிர்வாக அலுவலர்
7. திரு.செ.சிவலோகநாதன் - பிரதம எழுதுனர் (திட்டமிடல்)

**பின்வரிசையில் நிற்பவர்கள் இடமிருந்து வலம்**

1. செல்வி.க.வசந்தி
2. செல்வி.து.கமலாசினி
3. செல்வி.ச.சண்முகப்பிரியா
4. செல்வி.இ.ரேணுகா
5. செல்வி.பூ.கிருபாலினி
6. திருமதி.க.சுதர்சினி
7. செல்வி. இ.தேவிகா
8. திரு.பொ.தில்லைநாதன்
9. திரு.செ.யேசுராசா
10. திரு.பு.இராஜகுமாரன்
11. திரு.க.சிறிஸ்கந்தகுமார்
12. திரு.க. சண்முகநாதன்
13. திரு.ஐ.சிவகுமாரர்
14. திரு.பொ.குணபாலசிங்கம்
15. திரு.ப.அம்பிகைபாலன்
16. திரு.த.செல்வக்குமார்
17. திரு.நா.குகேந்திரராசா

**இரண்டாவது படத்தில் முன்வரிசையில் இருப்பவர்கள் இடமிருந்து வலம்**

1. திருமதி.பொ.சண்முகலிங்கம் - பிரதம எழுதுனர் (நிர்வாகம்)
2. செல்வி.த.சறோஜினிதேவி - நிர்வாக உதவியாளர்
3. திருமதி.மீ.திசநாயகம்பிள்ளை - உதவித்திட்டமிடற்பணிப்பாளர்
4. திரு.மு.நந்தகோபாலன் - பிரதேச செயலர்
5. திரு.வே.வேல்நிதி - கணக்காளர்
6. திரு.ப.லோகநாதன் - நிர்வாக அலுவலர்
7. திரு.செ.சிவலோகநாதன் - பிரதம எழுதுனர் (திட்டமிடல்)

**முதலாம் வரிசையில் நிற்பவர்கள் இடமிருந்து வலம்**

1. செல்வி பொ.துஷ்யந்தி
2. திருமதி.ஜெ.கொலஸ்ரீனா
3. செல்வி.க.கண்மணி
4. செல்வி.ப.வனிதா
5. செல்வி.தி.கணேஸ்வரி
6. செல்வி.ந.வானதி
7. செல்வி.சே.அனிற்றா சுபாசினி
8. செல்வி.பு.லதாமங்கேஸ்கார்
9. திருமதி.சி.சிவசுகந்தினி
10. செல்வி.ம.கேமமாலினி
11. செல்வி.த.தயாநந்தி

**பின்வரிசையில் நிற்பவர்கள் இடமிருந்து வலம்**

1. திரு.வே.யூட்ராஜ்
2. திரு.கு.அற்புதராஜா
3. திரு.மு.பிரதீபன்
4. திரு.சி.சிறீதரன்
5. திரு.செ.ஐங்கரன்
6. திரு.அ.பிரகலாதன்
7. திரு.க.சிறீதரன்
8. திரு.ந.செல்வச்சந்திரன்
9. திரு.ச.லோகேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிராம அலுவலர்கள்



வெளிக்கள உத்தியோகத்தர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முதலாவது படத்தில் முன்வரிசையில் இருப்பவர்கள் இடமிருந்து வலம்**

1. திரு.யே.பிராண்சிஸ்.சேவியர் - கிராம அலுவலர்
2. திரு.கு.சந்திரா - கிராம அலுவலர்
3. திருமதி.மீரா.திசநாயகம்பிள்ளை - உதவி திட்டமிடற் பணிப்பாளர்
4. திரு.மு.நந்தகோபாலன் - பிரதேச செயலாளர்
5. திரு.வே.வேல்நிதி - கணக்காளர்
6. திரு.ப.லோகநாதன் - நிர்வாக அலுவலர்
7. திரு.கா.சிவஞானம் - கிராம அலுவலர்
8. திரு.க.பரமேஸ்வரன் - கிராம அலுவலர்

**பின்வரிசையில் நிற்பவர்கள் இடமிருந்து வலம்**

1. திரு.எவ்.ஏ.மரியதாஸ் - கிராம அலுவலர்
2. திரு.சி.இரத்தினேஸ்வரன் - கிராம அலுவலர்
3. திரு.கா.பொ.இ.குலசிங்கம் - கிராம அலுவலர்
4. திரு.செ.சிவா - கிராம அலுவலர்
5. திரு.ப.விநாயகமூர்த்தி - கிராம அலுவலர்
6. திரு.நா.கந்தசாமி - கிராம அலுவலர்
7. திரு.இ.யோகேஸ்வரன் - கிராம அலுவலர்
8. திரு.இ.ரமேஸ் - கிராம அலுவலர்

**இரண்டாவது படத்தில் முன்வரிசையில் இருப்பவர்கள் இடமிருந்து வலம்**

1. திருமதி.மீ.திசநாயகம்பிள்ளை - உதவித்திட்டமிடற் பணிப்பாளர்
2. திரு.மு.நந்தகோபலன் - பிரதேச செயலாளர்
3. திரு.வே.வேல்நிதி - கணக்காளர்
4. திரு.ப.லோகநாதன் - நிர்வாக உத்தியோகத்தர்.

**பின்வரிசையில் நிற்பவர்கள் இடமிருந்து வலம்**

1. திரு.கா.ஐங்கரவேல் - கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்
2. திரு.த.நித்தியநாயகம் - விளையாட்டு உத்தியோகத்தர்
3. திரு. ந.கருணாகரன் - படவரைஞர்
4. திரு.வ.செல்வம் - சமூக சேவை உத்தியோகத்தர்
5. திரு.வே.அ.சிவஞானசீலன் - கலாசார உத்தியோகத்தர்
6. திரு.ப.ஞானபண்டிதன் - தொழில் நுட்ப உத்தியோகத்தர்
7. திரு.இ.வெஸ்லி.வதனோஜன் - காணி போதனாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமுர்த்தி உத்தியோகத்தர்கள், வேலணை வலயம்



சமுர்த்தி உத்தியோகத்தர்கள், புங்குடுதீவு வலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முதலாவது படத்தில் இருப்பவர்கள் இடமிருந்து வலம்**

1. திரு.கு.கருணாநிதி - சமுர்த்தி முகாமையாளர்
2. செல்வி. நா. நகுலராணி - சமுர்த்தி முகாமையாளர்
3. திரு.மு.நந்தகோபாலன் - பிரதேச செயலர்
4. திரு.வே.வேல்நிதி - கணக்காளர்
5. திரு.ப.லோகநாதன் - நிர்வாக உத்தியோகத்தர்

**நிற்பவர்கள் இடமிருந்து வலம் முதலாம் வரிசை**

1. திருமதி. சூ.சாரதாதேவி - ச.அ.உ
2. திருமதி. கோ. பிரியதர்சினி - ச.அ.உ
3. செல்வி.உ.சசிதரா - ச.அ.உ
4. திருமதி.ற.அமுதினி - ச.அ.உ
5. திருமதி.க.பிரமிளாதேவி - ச.அ.உ
6. திருமதி.கு.சூரியகலா - ச.அ.உ
7. திருமதி.சு.மலர்விழி - ச.அ.உ
8. திருமதி.வெ.எட்வீசா - ச.அ.உ
9. செல்வி.ஜெ.கலையரசி - ச.அ.உ
10. திருமதி.ம.பிறேமாவதி - ச.அ.உ

**நிற்பவர்கள் இடமிருந்து வலம்**

**இரண்டாம் வரிசை**

1. திரு.க.விஜயேந்திரன் - ச.அ.உ
2. திரு.க.பிரபாகரன் - ச.அ.உ
3. திரு.தே.தவநாயகம் - ச.அ.உ
4. திரு.அ.வேதநாயகம் - ச.அ.உ

**இரண்டாவது படத்தில் இருப்பவர்கள் இடமிருந்து வலம்**

1. திரு.சி.ஜெயசீலன் - சமுர்த்தி முகாமையாளர்
2. திரு.R.தவமோகன் - சமுர்த்தி முகாமையாளர்
3. திரு.மு.நந்தகோபாலன் - பிரதேச செயலர்
4. திரு.வே.வேல்நிதி - கணக்காளர்
5. திரு.ப.லோகநாதன் - நிர்வாக உத்தியோகத்தர்
6. திரு.கு.கருணாநிதி - சமுர்த்தி முகாமையாளர்

**நிற்பவர்கள் இடமிருந்து வலம் முதலாம் வரிசை**

1. திரு.வ.ஜெயகாந்தன் - ச. அ. உ
2. திருமதி. ஜெ.சுபாசினி - ச. அ. உ
3. செல்வி.கி.மல்லிகாதேவி - ச. அ. உ
4. செல்வி.பி.மரியகசில்டா - ச. அ. உ
5. திருமதி. ப.பங்கயற்செல்வி - ச. அ. உ
6. செல்வி.இ.அன்பரசி - ச. அ. உ
7. திருமதி.கே.வராகினி - ச. அ. உ
8. திரு.இ.இரத்தினபாலன் - ச. அ. உ
9. திரு.வை.பகீரதன் - ச. அ. உ

**நிற்பவர்கள் இடமிருந்து வலம்**

**இரண்டாம் வரிசை**

1. திரு.க.பஞ்சலிங்கம் - ச. அ. உ
2. திரு.ந.சாந்தரூபன் - ச. அ. உ
3. திரு.ஓ.கஜேந்திரன் - ச. அ. உ
4. திரு.க.அஜந்தன் - ச. அ. உ
5. திரு.அ.காண்டீபன் - ச.அ. உ
6. திரு.வ.கிரிதரன் - ச.அ . உ
7. திரு.வை.சுதாகர் - ச. அ. உ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புங்குடுதீவு சமயமும் பண்பாடும் – சில குறிப்புகள்

பேராசிரியர் வி.சிவசாமி,
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.

இலங்கையின் வடபால் உள்ள யாழ்ப்பாணக் குடாநாடு போன்று, இதனையடுத்துள்ள பல தீவுகளும் நீண்டகால சுமார் 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாறு கொண்டுள்ளன என்பது இலக்கிய நூல்கள். தொல் பொருளியற் சின்னங்கள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது., இத்தீவுகள் இன் றைய காலத்திலும் பார்க்க முன்னர் கூடுதலான நிலவளம், நீர்வளம், இயற்கை வனப்புக் கொண்டிருந்தன. இதனாலே தான் மக்கள் இவற்றிலே நீண்டகாலமாக வாழ்ந்து வந்துள்ளனர். இருபது ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்போர்ச்சூழ்நிலை, அமைதியின்மை காரணமாக இவை இன்று நன்கு பொலிவிழந்து காணப்படினும் இவற்றின் முன்னாள் சிறப்புகளை நினைவு கூருதல் நன்று.

இத்தீவுகளில் ஒரு முக்கிய தீவாக வேலணைத்தீவு (லைடன் தீவு)க்கும் நயினாதீவுக்கும் இடையிலே புங்குடுதீவு உள்ளது. இஃது இரண்டு தீவுகளுக் கிடையில் இருப்பதால் ஒல்லாந்தர் இதனை "மிடில் போர்க்" என அழைத்தனர். புங்கு எனும் மரம் அல்லது பிரியங்கு எனும் கொடி இங்கு காணப்பட்டமையால் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இது 11.2 சதுரமைல் பரப்புக் கொண்ட "ப" கரவடிவிலானது. இங்குள்ள மண் பொதுவாகச் சரம்பல் நிறமுடையதாகும். சில இடங்களிலே குறிப்பாக வடக்கு, கிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு கரையோரமாக மணலும் காணப்படுகின்றது. இத்தீவின் பல இடங்களில் சிறிய, பெரிய குளங்கள் உள்ளன. இக்குளங்கள் முன்னர் நன்கு பராமரிக்கப்பட்டு வந்தன. இதனால் நீர்வளம் - குறிப்பாக நன்னீர் வளம் குறிப்பிட்ட அளவு பேணப்பட்டது. ஆனால் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலிவை படிப்படியாகக் கவனிக்கப்பட்டில. இப்போக்கும், பொதுவாக மழைவீழ்ச்சிக்குறைவும், வேறு சில காரணங்களும் நன்னீர் வளத்தினை நன்கு பாதித்துள்ளன. பொதுவாக மழைக்காலத்திலே நன்னீர் பல இடங்களிலும் கிடைக்கும். இதைப் பயன்படுத்தி அங்குமிங்கும் உள்ள தோட்டங்களிலே கத்தரி, மிளகாய், பாகல், புடோல், மரவள்ளி, புகையிலை முதலியன குறிப்பாக 1970கள் வரை பயிரிடப்பட்டு வந்தன. அதேவேளையிலே வயல்களிலே நெல்லும், மேட்டு நிலங்களிலே வரகு, எள்ளு, பயறு, உழுந்து முதலியனவும் பயிரிடப்பட்டன. குறிப்பிட்ட சில இடங்களைத் தவிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய நிலங்களிலிவை பச்சைப்பசேல் எனக் காண்பதற்கு அழகாக இருக்கும். அறுவடை காலத்திலே பல இடங் களிலே நெல், வரகு சூடுகளைக் காண லாம். இந்தக் காட்சி இன்றைய தலை முறை யினருக்கு புதினமாக மட்டுமன்றி நம்பமுடியாத ஒன்றாகவும் இருக்கலாம். எனினும் இவை உண்மையே. இதற்கான காரணங்கள் இக்கட்டுரை யில் ஆராயப்படமாட்டா. எனினும் இக்கட்டுரையிலே கூறப்படவுள்ள சமய, பண்பாட்டம்சங்கள் பற்றிக் குறிப்பிடு தற்கு இது ஒரு முன்னுரையாகவே இங்கு சிறிது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்விடம் ஒரு புண்ணிய பூமியெனலாம். பார்க்குமிடமெல்லாம் ஏதோ ஒரு பெரிய கோயிலோ, சிறிய கோயிலோ, குறிப்பிட்ட மரத்தின் கீழே சூலம் போன்ற புனித சின்னத்தையோ காணலாம். அதேவேளையிலே பெரும் பாலும் சமய அனுஷ்டானங்களுடன் நாடோறும் குறிப்பாக வெள்ளிக்கிழமை போன்ற தினங்களிலே இவற்றிலே வழிபடுவோர் பலரைக் காணலாம். இப்படியான போக்கு 1991இல் ஏற்பட்ட புலப்பெயர்ச்சிக்கு முன் காணப்பட்டது. இன்றோ இக்காட்சி மிக அரிதாகும்.

இங்கு வாழும் மக்கள் தமிழர் கள். பெரும்பாலும் சைவசமயத்தைச் சேர்ந்தவர்கள். குறிப்பிட்டதொகை கத்தோலிக்க கிறித்தவர்களும், புரட்டஸ் தாந்து கிறித்தவர்களும் உள்ளனர். முற்காலத்திலே இங்கு இந்துக்கள் மட்டுமன்றிப் பௌத்தர்களும் வாழ்ந்தனர் எனக் கூறப்படுகின்றது.

இந்து, பௌத்த சமய மரபு களின்படி இவ்விடயம் ஆன்மீக ஞானத் திற்குப் பேர்போன ஓரிடமாகும். புராதன இலங்கை வரலாற்றைக் கூறும் மகாவம் சத்தின்படி இங்கு புத்த சமயத்திலே மிக உயர்ந்த நிலையிலுள்ள "அர்ஹந்தஸ்" எனும் ஞானிகள் இருந்தனர் என அறியப்படுகின்றது. இந்து சமய வரலாற் றைக் கூறும் பழைய ஆவணங்களோ, நூல்களோ நன்கு பேணப்படாமையால் அக்கால இந்துசமய ஞானிகள் பற்றிக் கூறுவது எளிதன்று. எனினும் 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் இங்கு வாழ்ந்த இந்துசமய ஞானிகள் சிலரைப் பற்றிக் குறிப்பிடலாம். 19ஆம் நூற்றாண்டிலே வாழ்ந்த விதானையார் ம.சந்திர சேகரத்தின் சகோதரர், சரவணமுத்து சுவாமிகள், சுப்பிரமணிய சுவாமிகள், ம.நமச்சிவாயதேசிகர் முதலியோரைக் குறிப்பிடலாம். இவர்களைவிடச் சைவசமய சைவசித்தாந்த புலமையாளர் கள், வேதங்கள், ஆகமங்களிலும் சைவசமயக் கிரியைகளிலும் விற்பன்ன ரான சிவாச்சாரியார்கள் பலர் இங்கு வாழ்ந்துள்ளனர். இன்றும் சிலர் உள்ளனர். இவர்கள் பற்றிப் பின்னர் கூறப்படும்.

புரட்டஸ்தாந்து சமயத்தவர் இங்கு மிக குறைவாக இருந்தபோதிலும் ஒரு சிலர் அச்சமய ஆயராகவோ, பிராந்தியத் தலைவரோ இருந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டுகளாக தென்னிந்திய திருச் சபை யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயராகவிளங்கிய அதிவண.டி.ஜே. அம்பலவாணர், அங்கிலிக்கன் திருச்சபை யின் வடபிராந்திய முன்னாள் திருச் சபையின் வடபிராந்திய முன்னாள் தலைவர் போன்றோர் குறிப்பிடற்பாலர்.

எனவே ஆதிகாலம் தொட்டு இங்கு ஓர் ஆன்மீக பாரம்பரியம் தொடர்ந்து நிலவிவருவது குறிப்பிடற் பாலது. இத்தகைய பாரம்பரியம் ஏனைய தீவுகள் சிலவற்றிலாவது நிலவு கின்றது. மதங்கள் வேறுபடினும் வழிபடுவோன் நாடும் இறைவன் ஒருவனே; ஆன்மீகமும் ஒன்றே.

கோவிலே இந்துப் பண் பாட்டின் நிலைக்களம். வேற்று நாட்ட வரின் (போர்த்துக்கீசர், ஒல்லாந்தர்) ஆதிக்கத்தாலும், மக்கள் சமய மரபுகளை நன்கு பேணாமையாலும் பிரித்தானியர் ஆட்சிக்கு (கி.பி.19ஆம் நூற்றாண்டு) முற்பட்ட காலங்கள் பற்றி நன்கு அறிய முடியாதுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பல கோவில்கள் போல இங்குள்ள பல கோவில்கள் குறிப்பாக பிரபல்யமான கோவில்கள் 1800-1860க்குமிடையில் அமைக்கப் பட்டன என்பது 1890ஆம் ஆண்டில் அரசாங்க ஆதரவில் எழுதப்பட்ட யாழ்ப் பாணக் கோவில்களின் பதிவேட்டின் மூலம் அறியப்படுகின்றது. இதன்படி புங்குடுதீவு கிழக்கிலே 12 ஆலயங்களும் மேற்கிலே 8 ஆலயங்களும் அறியப்படு கின்றன. இவற்றிலே பெரும்பாலும் ஒரே நேரப்பூசை நடைபெற்றது. சில கோவில்களிலே நவராத்திரி விழா, மஹோற்சவம், புராணபடனம் முதலி யன இடம் பெற்றன. சில மண்ணி னாலும், வேறு சில கல்லினாலும் அமைக்கப்பட்டிருந்தன.

கோவில் பற்றிய விபரங்களிலே பொதுவாக அதனை நிறுவியவர் பெயர், நடத்துபவர்(மனேஜர்) பெயர், நிறுவப் பட்ட ஆண்டு, பூசை, திருவிழா (நடை பெற்றால்) அதற்குச் சமூகமளித்தோர் தொகை முதலியன ஓரளவாவது இடம் பெற்றுள்ளன. எடுத்துக்காட்டுகளாகப் பெருங்காடு கந்தசுவாமி கோவில் (1805) அமைத்தவர் முருகர் காசிநாதர், மனேச்சர் விசுவநாதர் நாகநாதன், கல்கட்டடம், ஒருநேரப்பூசை, 500 மக்கள் (தேரோட் டத்தின்போது) பங்கு பற்றினர். கண்ணகை அம்மன் கோவில் (1800) அமைத்தவர்கள் நரசிம்ம முதலியார் முத்துக்குமாருவும் மற்றை யோருமாவர். கல்கட்டடம் ஒருநேர பூசை, தேரோட் டத்திற்கு 800 மக்கள் பங்கு பற்றினர். போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இப்பதிவேட்டில் இடம் பெறாத சில கோவில்களும் இருந்துள்ளன. இக்காலப்பகுதியிலே (1800-1860) பல கோவில்கள் அமைக்கப்பட்டமையை நோக்கும்போது நாவலர் பெருமான் காலத்திலும், அவருக்குச் சற்று முன்பும் ஏற்பட்ட இந்து சமய விழிப்புணர்வின் தன்மையை அறியலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19ஆம் நூற்றாண்டிலமைக்கப் பட்ட கோவில்கள் பெரும்பாலும் சிறிய னவாக இருந்தன. அக்காலப் பொருளா தார நிலையிலே பாரிய கட்டடங்கள் கொண்ட கோவில்களை அமைக்க முடியாது. ஆனால் 20ஆம் நூற்றாண் டின் முற்பகுதியில் ஒருசாரார் தென்னி லங்கையிலே குறிப்பாக வர்த்தகத்தில் ஈடுபடத் தொடங்கி விட்டனர். மேலும் ஒருசாரார் மலேசியாவிற்கும் சென்றனர். பெரும்பாலும் இவர்களின் குறிப்பாக வர்த்தகர்களின் ஆதரவிலே பெரிய கோயில்கள் அமைக்கப்படலாயின. இந்தப்போக்கு அந்நூற்றாண்டின் பிற்பகுதியிலே 1991வரை இடப்பெயர்வு ஏற்படும் வரை காணப்பட்டது.

1891-1990 வரையுள்ள காலப்பகுதியிலே மேற்குறிப்பிட்டவாறு பெரிய கோவில்கள் அமைக்கப்பட்டன. அவற்றுட் சிலவற்றிற்கு வானளாவிய இராஜகோபுரங்களும் அமைக்கப் பட்டன. புதிய கோவில்கள் சிலவும் கட்டப்பட்டன. ஆகமம் சாராத வழி பாட்டு முறைகள் பின்பற்றப்பட்ட சில கோவில்களுக்கு ஆகமச்சார்பான கிரியைகளும், வழிபாட்டு முறைகளும் அறிமுகம் செய்யப்பட்டன. சில கோவில்களிலே பழைய வழிபாட்டு முறைகள் தொடர்ந்தன. இடப் பெயர்வின் போது சுமார் 15 கோவில் களிலே மஹோற்சவங்கள் நடை பெற்றன. கோவில்களிலே மஹோற் சவங்கள் பொதுவாக மிகப் பிரபல்யமாக நடைபெற்றன. யாழ்ப்பாணத்திலே பிரபலமான நாதஸ்வர, தவில்கலைஞர் களின் கச்சேரிகள், சதிர் நடனம், கதாப் பிரசங்கங்கள், சப்பரங்கள் முதலியன இவற்றில் இடம்பெற்றன. மஹோற்சவ காலங்களில் குறிப்பிட்ட கோயில் பிரதேசம் விழா மயமாக விளங்கிற்று. இவ்வாறு கோவில் வளர்ச்சி பெற்றமைக்கு இவ்வூர் வர்த்தகப் பெருமக்களின் பங்களிப்புக்கள் மகத்தா னவை. இவர்களிற் பலர் தென்னிலங் கையிலே குறிப்பாக கொழும்பிலுள்ள பெரிய வர்த்தகர்கள்.

கோவில்களிலே வேதாகம ரீதியிலான கிரியைகள், பூசைகள், மஹோற்சவங்களைச் செய்யத்தக்க சிவாச்சாரியர்களும், இங்கு வாழ்ந்தனர். வாழுகின்றனர். இவர்களிலே சிவஸ்ரீ சோமசுந்தரக் குருக்கள், பொ.சொர்ண லிங்கக்குருக்கள், ஐ.கைலாசநாதக் குருக் கள், தி.சதாசிவக்குருக்கள், ஸ்ரீநிவாஸக் குருக்கள் போன்றோரைக் குறிப்பிட லாம். இவர்கள் தமிழிலும் சிறந்த பாண்டித்தியம் பெற்றிருந்தனர். இவர் களின் பிள்ளைகளும், உறவினர் சிலரும் இப்போது தொடர்ந்து செயற்படுகின்ற னர்.

அந்தணர் அல்லாத சைவசமய விற்பன்னர்களிலே திரு.ச.வினாசித்தம்பி ஆசிரியர், திரு.வ.பசுபதிப்பிள்ளை, வைத்தியர் க.கணபதிப்பிள்ளை அவரின் சகோதரர் ஆசிரியர் திரு.க.சதாசிவம் பிள்ளை ஆசிரியர்கள் சேதுபதி, ஆறுமுகம் நா.தில்லையம்பலம், கை.நாக மணி, சி.குருமூர்த்தி சாஸ்திரியார், வித்துவான் சி.ஆறுமுகம், வித்துவான் அ.கனகசபை, ஆசிரியர்கள் தி.சதாசிவம், சி.க.நாகலிங்கம், க.சிவராமலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியோரைக் குறிப்பிடலாம். இவர்களிலே வைத்தியர் க.கணபதிப் பிள்ளை மிகப்பிரபல்யமானவர்.

இவர்களுட் பலர் சிறந்த புராண குறிப்பாகக் கந்தபுராண வித்தகர்கள். நாவலர் போற்றிய கந்தபுராண கலா சாரம் இங்கும் நன்கு போற்றப்பட்டது. இங்குள்ள சில கோவில்களிலே கந்த புராண படனமும் பயன் சொல்லுதலும் ஆண்டுதோறும் பல்லாண்டுகளாக நடைபெற்றன. நாவலரின் சிஷ்யபரம் பரையினர் சிலர் இங்கு வாழ்ந்தனர். திரு.கந்தப்பிள்ளை வேலணையிலே வாழ்ந்தவராயினும் அவரின் முன்னோர் இவ்விடத்தைச் சேர்ந்தவர்கள். வேலணையைச் சேர்ந்த சைவ நாகலிங் கம் என்பவரிடம் மேற்குறிப்பிட்ட பலர் கற்றனர்.

புராணபடனம் சமயஅறிவை மட்டுமன்றித் தமிழறிவையும் மக்களி டத்தே வளர்க்க நன்கு உதவிற்று. கந்த புராணத்தைச் செவிவழியாகக் கேட்டு மனனம் செய்த ஆண்கள் மட்டுமன்றிப் பெண்களும் இருந்தனர். கந்த புராணத்தைவிடப் பெரியபுராணம், திருவாதவூரர் புராணம் முதலியனவும் சைவத்திருமுறைகளும் நன்கு பாரா யணம் செய்யப்பட்டன. சமய அனுஷ்டானம், விருந்தோம்பல் நன்கு போற்றப்பட்டன.

சைவசமயம், சைவசித்தாந்தம் பற்றிய சில நூல்களை மேற்குறிப்பிட்ட சிலர் இயற்றியுள்ளனர். திரு.க.சதாசிவம் பிள்ளை ஆசிரியர் திருக்கேதீச்சரத்தி லுள்ள அம்பாள் பற்றி 'கௌரியம்மை பிள்ளைத் தமிழ்" எனும் நூலையும் வேறு சிலவற்றையும் எழுதியுள்ளார். வித்துவான் அ.கனகசபை சைவசித்தாந்த நூல்கள் சிலவற்றிற்கு உரை எழுதியுள் ளார். இவர்களிருவரும் கவிஞர்களாக கோவில்கள் பற்றிய பாடல்களும் இயற்றியுள்ளனர். சி.குருமூர்த்தி சாஸ்திரியார் அறிவானந்த ஞானகுருதீபம் எனும் நூலினை 1940லே மலேசியாவிலே வெளியிட்டுள்ளார். இவரும் புங்குடுதீவிலுள்ள சில ஆலயங்கள் பற்றிப் பாடல்களையும், செல்வச் சந்நிதி முருகன் பற்றிய "நான்மணிமாலை"யும் இயற்றியுள்ளார். 19ஆம் நூற்றாண்டிலே வாழ்ந்த இராமலிங்கம் சட்டம்பியார் கேரநகர் (கேரதீவு) அரிகரபுத்திரனார் (ஐயனார்) பற்றிப் பதிகம் பாடியுள்ளார்.

இங்கு வாழ்ந்த சைவப் பெரியார் களிலே வ.பசுபதிப்பிள்ளை நன்கு குறிப்பிடற்பாலர். இவர் ஆங்கிலம், தமிழ், சைவசமயம், சைவசித்தாந்தம் முதலியனவற்றிலே சிறந்த புலமை பெற்றிருந்தார். விதானையாராகப் பல ஆண்டுகள் பணிபுரிந்த பின் சுமார் 25 ஆண்டுகளாகக் கிராமசபைத் தலைவ ராக விளங்கிப் பல சமய, சமூக சேவை களைச் செய்துள்ளார். இவர் ஸ்ரீ கணேச வித்தியாசாலை முதலிய சில சைவப் பாடசாலைகளை இங்கு நிறுவியவர்; சைவ வித்தியா விருத்திச் சங்கச் செயலாளர் திரு.ராஜரத்தினத்து டன் சேர்ந்து பல பாடசாலைகளை வெளியேயும் நிறுவினார். சேர்.பொன். இராமநாதனுடனும், முன்னாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கசபை முதல்வர் சேர்.வை துரைசுவாமி முதலிய சமகால தமிழப் பிரமுகர்களுடன் தொடர்புகொண்டிருந்தார். அந்தணச்சிறுவர்களுக்கு வேதாகமப் பயிற்சி அளிக்குமுகமாக ஒரு வேதாகம பாடசாலையினைக் கிராஞ்சியம் பதியிலே நிறுவி நன்கு சில காலம் நடத்தி வந்துள்ளார். இன்று யாழ்ப்பாணத்திலுள்ள சில பிரபல சிவாச்சாரியார்கள் இதிலே கற்றவர்கள் என்பது குறிப்பிடற்பாலது. எடுத்துக் காட்டாக இவ்வூரைச் சேர்ந்தவரும், இந்துக்குருமார் ஒன்றியத் தலைவருமான சிவஸ்ரீ ஐ.மகேஸ்வரக்குருக்களைக் குறிப்பிடலாம். வ.பசுபதிப்பிள்ளை 1925 புங்குடுதீவு சைவகலாசங்கத்தினைத் தொடங்கிச் சைவப்பணிகள் செய்து வந்தார்.

திரு.க.சிவராமலிங்கம் அவரின் சகோதரர் ஈழத்துச் சிவானந்தன் முதலியோர் சிறந்த சைவசமயப் பேச்சாளர்கள். இந்துப் பண்பாட்டிலே இசை ஒரு முக்கிய அம்சமாகும். இங்கு பல இந்துப் பண்பாட்டிலே இசைக் கலைஞர்கள் வாழ்ந்தனர். இன்றும் வாழுகின்றனர். எடுத்துக் காட்டுகளாக முன்னர் குறிப்பிட்ட திரு.நா.தில்லையம்பலம் சென்ற நூற்றாண்டிலே வாழ்ந்தவர். இவர் பண்ணிசை, கர்நாடக இசையிலும் புலமை வாய்ந்தவர். இவற்றுடன் இவர் கந்தபுராணம், திருமுறைகள் முதலியனவற்றினைப் பாடி பொருள் கூறுவது யாவரையும் கவரும். அவரின் "கணீர்" என்ற குரல்வளம் குறிப்பிடற்பாலது. இவரைவிட சி.குருமூர்த்தி காஸ்திரியார், அவரின் சகோதரர் திரு.சி.நல்லதம்பி முதலியோரும் குறிப்பாகப் பண்ணிசை நாட்டாரிசையில் தேர்ச்சி பெற்றிருந்தனர். திரு.சி.அப்பாப்பிள்ளை, கு.விநாயகமூர்த்தி முதலியோரும் திருமுறைகளை இனிமையாகப் பாடினர். இவர்களைவிட பொன்.சுந்தரலிங்கம், அவரின் சகோதரர் பொன்.சுபாஸ்சந்திரன், இராசலிங்கம், தாமோதரம்பிள்ளை முதலிய பிரபல கர்நாடக இசை வாய்ப்பாட்டுக் கலைஞர்கள், வீணைக்கலைஞர் கனக சுந்தரம்பிள்ளை, வயலின் கலைஞர் நடராஜா முதலியார் குறிப்பிடற்பாலர்.

சிலகோயில்களிலே திருமுறைகள் முறைப்படி ஓதப்பட்டு வந்தன. நாதஸ்வரம், தவில் கலைஞர் சிலர் இங்கு வாழ்ந்து கோவில் சேவகம் செய்து வந்தனர்.

இவ்வாறு பல வழிகளிலே சிறப்புற்று விளங்கிய இந்து சமயப் பண்பாட்டிலே 1991ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரிய இடப்பெயர்வு ஒரு முக்கியமானதிருப்பு முனையாகும். இதனால் இங்கு நிலவிய உட்கட்டமைப்பு பெருமளவு நிலை குலைந்து விட்டது. இதை மீள அமைக்கக்கூடிய ஆற்றல் வாய்ந்தோர் கணிசமான தொகையிலே திரும்பி வந்தாலோ அல்லது இங்குள்ளவர்கள் தற்போது உள்ளவர்கள் முனைப்பாகச் செயற்பட்டாலோ தான் சமகால நிலை மேம்படும். 1991-1995 வரை மேற்குறிப்பிட்டவாறு நன்கு நிலவிய இந்து சமயப் பண்பாடு நன்கு பாதிப்புற்றது. கிராஞ்சியம்பதி சிவன் கோவிலைத் தவிர ஏனைய கோவில்களிலே நித்திய பூசைகள் கூட ஒழுங்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்கவில்லையெனக் கூறுப்படுகிறது. அந்த ஆலய சிவாச்சாரியர் குடும்பத்தினர் இன்னல்கள் மத்தியிலே தம்முடைய கோவிலில் இடம்பெற வேண்டிய பூசைகளையும் பிறவற்றையும் இயன்ற ளவு செய்து வந்தனர்.


1996 தொடக்கம் படிப்படியாக எல்லாக் கோயில்களிலும் நித்திய, நைமித்திய பூசைகள் இடம்பெற லாயின. சில ஆண்டுகளாக பூசை களின்றியிருந்த கோவில்கள் திருத்தப் பட்டோ, திருத்தி விசாலிக்கப்பட்டோ அவற்றிலே மகாகும்பாபிஷேகங்கள் நடைபெற்றுள்ளன. இன்னும் சில கோயில்களில் மகாகும்பாபிஷேகம் நடைபெற வேண்டியுள்ளது. 1980 இன் பின் இங்கிருந்து மக்கள் பல்வேறு காரணங்களுக்காக சிறிது சிறிதாக இடம் பெயரத் தொடங்கினர். இப்போக்கு 1991 இல் உச்ச நிலையடைந்தது. 1996 இன் பின் ஏற்கனவே தொடர்ந்து வாழ்ந்த சிலருடன் திரும்பிவந்தவர்களுமாக தற்போது சுமார் மூவாயிரம் மக்கள் வசிக்கின்றனர். ஆனால் இடப் பெயர்வுக்கு முன் சென்ற நூற்றாண்டின் எண்பதுகளில் ஏறக்குறைய 14000க்கு மேற்பட்ட மக்கள் வாழ்ந்தனர். 1996ஆம் ஆண்டுக்குப்பின் நடைபெற்றுவரும் கோயில் திருப்பணிகள் பெரும்பாலும் இங்கிருந்து வெளிநாடுகளுக்குக் குறிப்பாக மேற்கு உலகுக்குச் சென்றோ ராலும், இலங்கையிலுள்ள வர்த்தகர் களாலுமே நடத்தப்படுகின்றன. திருப் பணிகள் தொடர்கின்றன. மகாகும் பாபிஷேகங்களும் தொடர்கின்றன. ஆனால் ஊரிலிருந்து கோயிலிலே வழிபாடு செய்வதற்கும், பராமரிப்பதற் கும் ஊரிலுள்ள எத்தனை பேர் ஈடுபடு வர்? இது பெரிய கவலைக்குரிய விடயம். பெரும் தொகைப் பணத்தைச் செல வழித்து கோவில்களைப் பேணிவர ஊரிலே ஈடுபாடுள்ளோர் எத்தனை பேர் உள்ளனர். எனினும் இப்போது வசதியிருக்கும் போது கோவில்களைத் திருத்தி அமைத்தல் பாராட்டுதற்குரிய தாகும். வெளிநாடுகளில் உள்ளவர் களின் பிற்சந்ததியினர் எத்தனை பேர் மூதாதையரின் ஊரிலுள்ள கோவில் களில் ஈடுபட்டு உதவி செய்வார்கள். எனினும் இது பற்றி வெளியூரிலுள்ள ஒரு பிரபல ஆசிரியரின் கருத்துக் கவனித்தற்பாலது. அதாவது நம் ஊரிலே பிறந்து வளர்ந்த நாம் வசதிப்படி பணம் அனுப்பி எங்களுடைய கோவில்களை மீள உறுதியாக அமைத்து விட்டால் அவை தொடர்ந்து செயற்ப டும். எமக்கு அடுத்த சந்ததியினர் எம் மைப்போல் இக்கோவில்களை ஆதரிப் பார்களோ தெரியாது. அவர்கள் இங்கு பிறக்காவிட்டாலும் மூதாதையர் வழி பட்ட கோவில் எனக்கருதி அவர்களில் ஒருசிலராவது நிதி உதவி செய்வார்கள். வந்து தரிசித்தும் போவார்கள். ஆனால் பெரிய செலவுகள் செய்வார்களோ என்பது தெரியாது. எனவே நன்கு உறுதியாகக் கட்டிவிட்டால் இவர்கள் ஆதரவளித்தால் என்ன அளிக்காவிட் டால் என்ன ஊரிலுள்ள ஒரு சிலராவது வணங்குவார்கள். உடனடியாகப் பழையநிலை வராவிடினும் காலப் போக்கில் ஏற்படும் என்ற நல்லெண் ணத்துடன் அவர் உறுதியாகக் கூறினார். எனவே இந்த நன்னிலை ஏற்பட வேண் டும் என அனைவரும் இறைவனைப் பிரார்த்திப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிநீர் தேடும் தீவகம்

பிராந்திய முகாமையாளர்,
தேசியநீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை,
யாழ்ப்பாணம்.




எமது குடாநாடு மூன்று பக்கங்களும் கடலால் சூழப்பட்டது மாத்திரமன்றி எமது நிலப்பரப்புகள் கடல்நீரேரிகளால் ஊடறுக்கப்பட்டும் காணப்படுகின்றது. எமது குடாநாட்டு மக்கள் வெவ்வேறு தொழில் மதம் கலாச்சாரம் கொண்டிருந்த போதும் பேதமின்றி நம்பியிருப்பது எமது பாதங்களின் கீழ் உறங்கும் நிலத்தடி நீரையே!

எமது குடாநாட்டு மக்களின் எண்ணிக்கை அதிகரித்தும், கலாச்சார தொழில் ரீதியில் முன்னேறிய போதும் எமது நிலத்தின் அளவோ, எவ்வித மாற்றமின்றி காணப்படுவதனால் அது கொள்ளும் நீரின் அளவும், தரமும் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றது.

அதிகளவு நீர்ப் பாவனை, விவசாயம், தொழிற்சாலை கழிவுகள், கடல் நீர் உட்புகுதல் (Intrusion) மலசல, திண்மக் கழிவுகள் சுத்திகரித்து அகற்றப் படாமை என்பவற்றால் பெரிதும் எமது நிலத்தடி நீர் மாசடைகின்றது. அத்துடன் குடாநாட்டின் சனத்தொகை வளர்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கு ஏற்ப நீரின் அளவு (Demand) எமது நிலத்தடி நீரின் மூலம் பூர்த்தி செய்ய முடியாத ஒன்றாக இருக்கின்றது.

குடாநாடு இன்றைய நிலைமையிலேயே 40% பகுதியில் பெருமளவு குடிநீர் தட்டுப்பாடு இருந்து வருகின்றது இதில் பெரும்பாலான கரையோர பகுதிகளும் முழுமையாக தீவகங்களும் அடங்குகின்றன.

**தீவகம்**

தீவகம் எமது குடாநாட்டின் பொருளாதாரத்தில் பெரும்பங்கு வகிக்கும் பிரதேசங்களாகும். மீன்கள், கடலட்டைகள் என பெருவருமானம் ஈட்டித்தரும் கடற்றொழில் முதல் பனை, தென்னை வளமும் இப்பகுதியில் உள்ளது. இவ்வாறு பணம் ஈட்டி தரும் தொழில்கள் இருந்த போதும் இப்பிரதேசம் குடிநீர்ப் பற்றாக் குறையால் மிகவும் பாதிக்கப்பட்டுக் காணப்படுவதால் மக்கள் இப்பிரதேசத்தில் இருந்து வெளியேறி வேறு இடங்களை நாடிச்செல்கின்றனர்.





நீர்நிலை பற்றிய ஆய்வு அறிக்கைகளின்படி அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய இடங்களில் மட்டும் ஒரு நாளைக்கு 260m3 தரம் வாய்ந்த குடிநீரைப் பெறக்கூடியதாக இருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது. வரட்சியான காலங்களில் இந்த நீரையும் பெறுவது கடினமே! அத்துடன் இந்த நீரானது குடிநீருக்கு மட்டுமல்லாது மக்களின் அன்றாட தேவைகள் விவசாயம்போன்றவற்றிற்கு எவ்வித கட்டுப்பாடும் இன்றி பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்நிலமை அண்ணளவாக தீவகங்களில் காணப்படும் 204 கிராமங்களில் காணப்படுகின்றது. இந்நீரையே தீவக மக்கள் பங்கிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மிகவும் நீர் நெருக்கடியிலுள்ள தீவகத்திற்கு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் இரண்டு சிறு நீர் விநியோகத்திட்டங்களும் பிரதேச சபைகளின் இரண்டுசிறு நீர் விநியோகத்திட்டங்களும் நீர் வழங்கி வருகின்ற போதும் இது அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யப் போதுமானதாக இல்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தீவகத்தில் நிலத்தடி நீர் மாசடைதல்**

தீவகம் நம்பியிருக்கும் இந்த சிறிதளவு நீரும் ஒழுங்கற்ற முறையில் பாவிக்கப்படுவதால், திண்ம மலசலகூட கழிவுகள் முறையான சுத்திகரிப்பின்றி வெளியேற்றப்படுதல், கடல்நீரானது உட்புகுதல் என்பவற்றால் மாசாக்கப் பட்டு வருகின்றது.

தீவகத்தை பொறுத்தவரை நீரானது அதிகளவு பாவிக்கப்படுதல் (Over Extraction) மற்றும் கடல்நீர் உட்புகுதல் என்பன முக்கிய பிரச்சனை களாக காணப்படுகின்றது. உவர் நீர் தடுப்பு அணைகள் போரினால் பாதிக்கப் பட்டுள்ளமை, முறையற்ற மண் அகழ்வு கள் நன்னீர் குளங்கள் போதிய பரா மரிப்பு இன்றிதூர்ந்துபோயுள்ளமை, மக்கள் இடப்பெயர்வுகளால் கைவிடப் பட்ட விவசாயம் போன்றவற்றால் கடல் நீரானது இலகுவாக நன்னீர் படுக்கை களை மாசாக்குகின்றது.





சரவணை பிரதேச கிணறுகள், மற்றும் நாரந்தனை பிரதேச கிணறுகள் 1980களில் நன்னீராக குடிநீருக்கு பயன் படுத்தக்கூடியதாக இருந்தவை இன் றைய நிலையில் மக்களின் சாதாரண சமையல் தேவைகளுக்கும் கூடப்பயன் படுத்த முடியாத உவர்நீராக மாற்றம் அடைந்துள்ளமை இந்த பிரச்சனையை தெளிவுபடுத்தக் கூடியதாக இருக்கின் றது. இந்நிலை தொடரின் மற்றைய கிணறுகளும் இவ்வாறு மாசடையக் கூடிய சாத்தியங்கள் அதிகளவில் உள்ளது.

**இந்நீர் வளத்தை பாதுகாக்க மேற்கொள்ள வேண்டிய உடனடி நடவடிக்கைகள்.**

- சாத்தியமான வகையில் நிலத்தடி நீரைப் பாவித்து அரச நீர் விநியோக நிறுவனங்கள் மூலம் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுத்தல்.
- நிலத்தடி நீரின் பாவனையை இயலுமான வரை கட்டுப்படுத்தி விவசாயிகளுக்குப் புது யுக்திய களை (தூவல் முறை நீர்பாசனை முறை) அறிமுகப்படுத்தல்.
- முடிந்தவரையில் விரைந்தோடும் மழைநீரை நிலமேற்பரப்பில் சேகரித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கூரையில் இருந்து வெளியேறும் மழைநீரைச் சேகரித்து குடிநீர்த் தேவைக்குப் பயன்படுத்துதல்
- குளம், குட்டைகள், நீர்நிலைகள் என்பனவற்றைப் புனரமைத்தல்.
- வரையறுக்கப்பட்ட நியமங்களுடைய மலசல கூடக் கழிவுகளின் சுத்திகரிப்பு முறையை (Septic Tank Sockage pit) அறிமுகப்படுத்தல்.
- மலக்குழிகள் அமைக்கும் போது அதற்குரிய நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு (நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, சுகாதாரத் திணைக்களம்) தொழில்நுட்ப ஆலோசனையையும், அங்கீகாரத்தை பெறல்
- விவசாயிகள் அதிகளவு இரசாயன உரங்களைப் பாவிப்பதை நிறுத்தி கூடியளவு இயற்கைப் பசளைகளைப் பாவித்து பயன் பெறுவதற்கு சமுதாய விழிப் புணர்வு ஏற்படுத்தல்.
- மரங்களை வளர்த்தல் காடுகளை மீளவும் உருவாக்குதல். இவற்றிக்குச் சனசமூக நிலையங் கள் உட்பட சமூக நிலையங்கள் ஊடாக விழிப்புணர்வு ஏற்படுத்தல்.


**நீண்ட கால நடவடிக்கைகள்**

- கடலுக்கும் ஏரிக்குமிடையில் உள்ள தடுப்பணைகள் புனரமைத்தல்
- யாழ் குடாநாட்டில் நிலத்தடி நீர் சேமிப்பை அதிகரித்தல்.

**தீவக மக்களின் நீர்த்தேவையில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பங்களிப்பு**

தற்பொழுது சபையால் இரண்டு நீர் விநியோகத் திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டு அண்ணளவாக 10,000 பேருக்கான குடிநீர் தேவை நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றது.






ஊர்காவற்றுறையில் நீர் விநியோகத் திட்டம் நாரந்தனையிலுள்ள உவர்நீர் கிணறுகளில் இருந்து பெறப்படும் நீரை உவர்நீக்கம் (Desalination) செய்வதவன் - மூலம் விஸ்தரிக்கும் வேலை தொடங்கப் பட்டு உபகரணம் (RO Plant) பொருத்தும் வேலை நடைபெற்று வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தீவகப்பகுதியில் பரவலாக மழைநீர் சேகரிக்கும் தொட்டிகள் அமைக்கப்பட்டு குடிநீர் சேகரிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. பாதுகாப்பான மலசல, திண்மக் கழிவுகள் சுத்திகரித்து அகற்றல் சம்பந்தமான போதிய தொழில்நுட்ப ஆலோசனைகள் சம்பந்தப்பட்ட நபர்களுக்கும், மக்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றது. தீவகப் பகுதியில் பாதுகாப்பான மலசல, திண்மக் கழிவுகள் சுத்திகரித்து அற்றல் வசதிகள் அவசியம் பெறுகின்றது. காரணம் இங்கு நிலத்தடி நீர் மிகக் குறைந்தளவு ஆழத்தில் காணப்படுகின்றது. எனவே இலகுவாக நீர் கழிவுகளால் மாசாக சாத்தியம் உள்ளது.

குடிநீருக்கு மிகவும் தட்டுப்பாடு நிலவும் புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு, நெடுந்தீவு போன்ற பகுதிகளுக்கு உடனடியாக RO Plant மூலம் உவர் நீரை சுத்திகரித்து குடி நீர் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.



மற்றைய தீவகங்களுக்கு இரணைமடுவில் இருந்து பெறப்படும் நீரானது வழங்க எமது சபையால் துரித கதியில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணைச் சாட்டிக் கிராமத்தின் பூர்வீக மக்களும், பண்பாடும் – சில தொல்லியற் சான்றுகள்

கலாநிதி ப.புஷ்பரட்ணம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**அறிமுகம்**

அண்மைக்காலத்தில் வட இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ள முக்கிய தொல்லியல் மையங்களில் தீவகத்தில் உள்ள சாட்டியும் ஒன்றாகும். இது யாழ்ப்பாண நகரத்தில் இருந்து ஆறு மைல் தொலைவில் வேலணைப் பிரதேசத்தில் உள்ள ஓர் கடற்கரைக் கிராமமாகும். இலங்கையில் வரலாற்றுப் பழமை வாய்ந்த துறைமுகங்களைக் கொண்ட கிராமம் என்ற வகையில் சாட்டிக்குத் தனித்துவமான வரலாற்றுச் சிறப்புண்டு. இதன் புவிசார் அமைவிடம் தமிழகத்திற்கு மிகக்கிட்டிய தூரத்தில் அமைந்திருப்பதால் இவ்விடம் பண்டு தொட்டு தென்னிந்தியாவுடனும், தென்னிலங்கையுடனும் யாழ்ப்பாணக் குடாநாடு ஏற்படுத்திக் கொண்ட கடல் வழித் தொடர்பிற்கு குறுக்கு நிலமாகவும், தமிழகப் பண்பாட்டை முதலில் உள்வாங்கிய தொடக்க வாயிலாகவும் திகழ்ந்ததெனக் கூறலாம். இவற்றை உறுதிப்படுத்தும் வகையில் இவ்விடம் பற்றியும் பண்டைய இலக்கியங்களில், கல்வெட்டுக்களில், ஐரோப்பியர்கால ஆவணங்களில் பல சான்றுகள் காணப்படுகின்றன. அத்துடன் பல்வேறு சந்தர்ப்பங்களில் இக்கிராமத்தில் பிற தேவைக்காக மண் அகழப்பட்ட போது




சாட்டியின் அமைவிடம்

எதிர்பாராமல் கிடைத்த தொல்லியற் சான்றுகள் 1980களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற் றுத்துறையைப் பேராசிரியர் சிற்றம்பலம் மற்றும் பேராசிரியர் இரகுபதி ஆகியோர் இங்கு மேற்கொண்ட தொல்லியல் மேலாய்வில் சேகரித்த தொல்லியற் சின்னங்களும், தீவகம் பற்றி இலக்கியக் கலாநிதி வி.சிவசாமி எழுதிய நூலும் ஆய்வுக் கட்டுரைகளும் இவ்விடத்தின் பழமையை மேலும் உறுதிப்படுத்துகின்றன. இத்தகைய வரலாற்றுப் பின்புலம் தான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தொல்லியல் வரலாற்றுப் பாடங்களைக் கற்கும் மாணவர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்து சாட்டியில் தொல்லியல் அகழ்வாய்வை மேற்கொள்ளத் தூண்டின. இதற்கு முன்னர் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் செ.பத்மநாதன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலைப் பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச் சந்திரன் பல்கலைக்கழக ஊடாக ஏற்படுத்திக் கொடுத்த நிதி உதவிகள் மேலும் உந்து சக்தியாக அமைந்தன.

மணற்பாங்கான சாட்டிக் கிராமத்தில் தற்காலத்தில் அரிதான குடியிருப்புக்களே காணப்படுகின்றன. ஆனால் மழைகாலத்திலும், காற்றடிக்கும் காலத்திலும் பரவலாக மண்ணின் மேற்படையில் காணப்படும் தொல்லியற் சின்னங்கள் பண்டைய காலத்தில் செறிவான மக்கள் குடியிருப்புக்கள் இருந்ததை உறுதிப்படுத்துகின்றன. ஆயினும் கடந்த மூன்று சகாப்த காலமாக இங்கிருந்த மணல் மேடுகள் பல பிறதேவைக்காக அகழ்ந்தெடுக்கப் பட்டதால் அங்கிருந்த வரலாற்றுப் பெறுமதிமிக்க தொல்லியற் சின்னங்களும் சிதைந்துள்ளன. இதனால் மண்படை அடிப்படையில் தொல்லியற் சின்னங்களின் காலத்தையும், அதன் சிறப்பையும் கணிப்பதில் பல தடைகள் உண்டு. ஆயினும் தற்போது கிழக்கேயுள்ள இஸ்லாமியப் பள்ளிவாசலுக்கும், மேற்கேயுள்ள கிறிஸ்தவ ஆலயங்களுக்கும் இடைப்பட்ட பிரதான வீதிக்கு வடக்காக உள்ள இடம் ஒப்பீட்டளவில் சாட்டியின் ஏனைய இடங்களைவிட குறைந்த அளவில் மண் அகழ்வோரின் நடவடிக்கைக்கு உட்பட்டதால் அந்த இடம் அகழ்வாய்வுக்கு ஓரளவிற்குப் பொருத்தமாகக் காணப்பட்டன.

இங்கு ஏறத்தாழ முப்பது ஏக்கர் நிலப்பரப்பில் மண்ணின் மேற்பரப்பில் வேறுபட்ட காலகட்டத்தைச் சேர்ந்த பல வடிவங்களில் அமைந்த புராதன, மத்திய கால மட்பாண்டங்கள், புராதன கால ஓடுகள், அக்கால மக்களால் பயன்படுத்தப்பட்டவை எனக் கருதக் கூடிய சங்கு, சிற்பி, கல் மணிகள், செயற்கை வடிவில் வடிவமைக்கப்பட்ட கல் உருவங்கள், களிவிரும்புப் பொருட்கள் என்பவற்றை பரவலாகக் காணமுடிகிறது. அவற்றுள் பெரும்பாலானவை காற்றடிக்கும் காலத்தில் மணலோடு அள்ளுண்டு பனை மரங்களின் அடியில் குவிந்திருப்பதைக் காணமுடிகிறது. இச்சான்றுகள் புராதன காலத்தில் இக்கிராமத்தில் செறிவான மக்கள் குடியிருப்புக்கள் இருந்ததை எடுத்துக் காட்டுவதாக உள்ளன.

**சாட்டியும் பூர்வீக மக்களும்**

சாட்டிக் கிராமத்தில் பரவலாகக் காணப்படும் தொல்லியல் எச்சங்கள் இங்கு பண்டு தொட்ட மக்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றன. ஆயினும் இம்மக்கள் யார்? எங்கிருந்து வந்தார்கள்? எப்போது வந்தார்கள்? இவர்களுக்கு குடாநாட்டின் ஏனைய இடங்களில் வாழ்ந்த மக்களுக்கும் இடையிலான தொடர்பு என்ன? என்பன முக்கிய கேள்விகளாக உள்ளன. யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வில் இருந்து இப்பிரதேசத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்த தொடக்க கால மக்கள்பெருங் கற்காலப் பண்பாட்டுக்குரிய திராவிடர் என்பது உறுதியாகத் தெரியவந்துள்ளது. இலங்கையில் வாழ்ந்த இப்பண்பாட்டு மக்கள் பற்றிய கலாநிதிப் பட்டத்திற்காக விரிவாக ஆய்வு செய்த பேராசிரியர் சிற்றம்பலம் யாழ் மாவட்டத்தின் அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வு களும், ஆதிக்குடிகளும் என்ற கட்டுரை யில் தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டிற்கே தனித்துவமானதாகக் கருதப்படும் மெருகூட்டப்பட்ட கறுப்புச் - சிவப்பு நிற மட்பாண்ட ஓடுகள் காணப்படும் இடங்களில் ஒன்றாகச் சாட்டிக் கிராமத்தைக் குறிப்பிட்டுள் ளார். ஆனைக்கோட்டை, காரைநகர் ஆகிய இடங்களில் அகழ்வாய்வு மூலம் பெருங்கற்கால மக்களது எலும்புக்கூடு களைக் கண்டுபிடித்த பேராசிரியர் இரகுபதி தனது தொல்லியல் மேலாய் வின் போது சாட்டிக் கிராமத்தில் இருந்து பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய புராதன கறுப்புச் - சிவப்பு நிற மட்பாண் டங்களைச் சேகரித்ததாக சிவப்பு நிற மட்பாண்டங்களைச் சேகரித்ததாக யாழ்ப்பாணத்தின் புராதன குடியேற் றங்கள் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். இச்கூற்றை எமது அகழ்வாய்வின் போது கண்டு பிடித்த இப்பண்பாட்டிற்குரிய பலவகைப்பட்ட சான்றுகள் மேலும் உறுதிப்படுத்துகின்றன.

**சாட்டியும் பெருங்கற்கால ஈமச் சின்னங்களும்**

சாட்டி என்ற இடப் பெயர் எப் போதிருந்து வேலணைப் பிரதேசத்தில் பயன்பாட்டிற்கு வந்ததென்பதற்கு இது வரை உறுதியான சான்றுகள் கிடைக் கவில்லை. பேராசிரியர் வி.சிவசாமி மேற்காசியாவில் சாட்டி என்ற பெயர் அங்குள்ள நகரம் ஒன்றின் பெயராக இருந்து வருவதாலும், பண்டைய காலத்தில் மேற்காசியாவுடன் சாட்டிக் கிராமத்திற்கு நெருங்கிய வணிகத் தொடர்பு இருந்தற்கான சான்றுகள் எமது அகழ்வாய்வில் கிடைத்திருப் பதாலும் இப்பெயர் மேற்காசியத் தொடர்பால் ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதுகிறார். ஆனால் தமிழ்ப் பேரகராதி



ஈமச் சின்னத்தின் வெளித் தோற்றம்

யில் சாட்டி என்ற சொல்லுக்கு பயிரிடப் படாத நிலம் அல்லது பயிரிடுவதற்கு தயார்ப்படுத்தப்பட்ட நிலம் என்ற பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலப் பகுதியில் வேலணையின் ஏனைய கிராமங்களில் வசித்த மக்கள் சாட்டிக் கிராமத்தில் வந்து குடியேறி பயிற் செய்கையில் ஈடுபட முன்னர் இக் கிராமத்தில் நீண்டகாலமாக மக்கள் வாழவில்லை எனக் குறிப்பிடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் சாட்டி என்ற பெயர் நீண்ட காலம் மக்கள் வாழாத இடமாக அல்லது மக்கள் பரவலாக வாழந்திருந்தும் பண்டைய காலத்தில் இங்கு இறந்தவர் களை அடக்கம் செய்வதற்காக ஒதுக்கப் பட்ட இடம் ஆரம்பத்தில் சாட்டி என அழைக்கப்பட்டு அப்பெயரே காலப் போக்கில் கிராமத்தின் பெயராக மாறியிருக்கலாம்.

அகழ்வாய்வுக்கு உட்படுத்திய இடம் சாட்டிக் கிராமத்தின் மையப் பகுதியாகவும், வரலாற்றுப் பழமை வாய்ந்த துறைமுகம் அமைந்த இடமாகவும் காணப்படுகிறது. இங்கு 10 மீற்றர் இடைவெளியில் 30க்கு மேற்பட்ட ஈமச் சின்னங்கள் இருந்த தற்கான சான்றுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுள் 10 இடங்கள் அகழ்வாய்வுக்கு உட்படுத்தப் பட்டு அக்கால மக்களது பண்பாட்டு எச்சங்கள் பல கண்டு பிடிக்கப்பட்டுள் ளன. இவ்விமச் சின்னங்கள் காணப் பட்ட இடங்கள் மண்ணின் மேற்படை யில் கல்லும் மண்ணும் கலந்த நிலையில் மண்மேடுகளாகக் காணப்பட்டன.





குடைக்கல் ஈமச் சின்னம்?

ஆனால் அவ்விடங் களை அகழ்ந்த போது அவை ஏறத்தாள 1முதல் 2 அடி விட்டமும், ஏறத்தாழ 10 முதல் 12 அடி உயரமும் கொண்ட சிறிய கிணற்று வடிவில் அமைக்கப்பட்டு இருத்ததை அவதானிக்க முடிந்தது. இந்த அம்சம் பெருங்கற்காலப் பண்பாட்டில் பின்பற் றப்பட்ட குழியடக்க ஈமச் சின்னத்தை நினைவுபடுத்துகிறது. இதன் அத்தி வாரங்கள் சில இங்களில் கற்களைக் கொண்டு நட்சத்திரவடிவிலும், ஏனை யவை சுடுமண், மரம், கல் என்பவற்றைப் பயன்படுத்தி வட்டவடிவிலும் அமைக் கப்பட்டிருந்தன. ஒரு இடத்தில் குடை வடிவில் மிகப் பெரிய கல்லை வடிவமைத்து அதன் உட்பக்கம் வட்ட மாக குடையப்பட்டு அதற்குள் இறந்தவர் உடலின் பாகங்கள் அடக்கம் செய்யப்பட்டிருந்தது. பொதுவாக இந்த வடிவில் அமைந்த பெருங்கற்கால ஈமச் சின்னம் குடைக்கல் எனத் தொல்லியலா ளர்களால் அழைக்கப்படுகிறது.

இவ்விமச் சின்னங்களின் மேற்பகுதி பெரும்பாலும் மண் அகழ் வோரின் நடவடிக்கைகளால் சிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈமச் சின்னம் காணப்பட்ட மணிமேடு

வடைந்திருந்தாலும், கீழ்ப்பக்கம் மண் படையில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எலும்புகளும் அவற்றுடன் இணைந்திருந்த பிற பொருட்களும் இவ்விடங்களில் எல்லாம் இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முன்னர் பெருங்கற்கால மற்றும் வரலாற்றுத் தொடக்க கால ஈமச்சின்னங்கள் அமைக்கப்பட்டிருந்தன என்பதை உறுதிப்படுத்துகின்றன. ஆயினும் இவ்வீமச் சின்னங்கள் சிலவற்றின் மேலுள்ள கலாசார மண் படையில் -பற்பட்ட கால அரரேபிய, சீன, சோழ மட்பாண்டங்களும், ஒரு ஈமச் சின்னத்தில் கி.பி 13-14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த யாழ்ப்பாண அரசு கால சேது நாணயமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் கீழ்ப் பகுதியில் உள்ள பெருங்கற்கால ஈமச் சின்னத்திற்கும் அதன் மேல் பகுதியில் உள்ள கிணற்றுவடிவிலான கட்டிடப் பகுதிக்கும் உள்ள தொடர்பையிட்டு அறிஞர்களிடையே வேறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. பேராசிரியர் இரகுபதி இங்கு பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் அமைக்கப்பட்டிருந்த இடங்களுக்கு மேல் காலப்போக்கில் சிறிய கிணற்று வடிவிலான கட்டிடம் பிற தேவைக்காக அமைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதுகிறார். தமிழகக் தொல்லியல் அறிஞரான பேராசிரியர் சுப்பராயலு தமிழகத்தில் மேற் கொள்ளப்பட்ட சில அகழ்வாய்வுகளை உதாரணம் காட்டி சாட்டியில் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்கால ஈமச் சின்னங்கள் இப்பிராந்தியத்திற்கேயுரிய சின்னத்தை சாட்டியில் கண்டுபிடித்து முழுமையாக அகழ்வு செய்யும் வரை இறுதியான முடிவுக்கு வருவது பொருத்தமாகத் தெரியவில்லை. ஆயினும் இங்கு வாழ்ந்த தொடக்க கால மக்கள் பெருங்கற்கால திராவிட மக்கள் என்பதை இதுவரை சாட்டியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன என்பதில் சந்தேகமில்லை.



மனித எலும்புடன் காணப்பட்ட மட்பாண்டங்கள்






ஈமச் சின்னத்தை மூடியுள்ள கற்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாட்டியில் கண்டுபிடித்த மனித, மிருக எலும்புகள்



அம்புகளாகப் பயன்படுத்திய மான் கொம்புகள்



இவ்வீமச் சின்னங்கள் அனைத்தும் குறிப்பிட்ட ஒரு ஒழுங்கு விதி முறைப்படி அமைக்கப்பட்டவையாகும். அகழ்வுக்கு முன்னர் இவ்விடங்கள் ஒரு மண்மேடாகக் காட்சியளித்தாலும் அவற்றை அகழ்ந்து பார்த்த போது அவ்விடங்களில் எல்லாம் 10 முதல் 1 அடி உயரமான சிறந்த தொழில் நுட்பத்துடன் கூடிய வட்டமான கட்டிடங்கள் அமைக்கப்பட்டு இருந்ததை காணமுடிந்தது.

ஈமச் சின்னத்தை மூடி அமைக்கப்பட்டிருந்த கற்களுக்கு மேல் உள்ள கலாசாரப்படைகளில் பிற்பட்ட காலச் சின்னங்கள் சில காணப்பட்டாலும் மூடப்பட்டிருந்த கலாசாரப்படைகளில் காணப்பட்ட சின்னங்கள் பெரும்பாலும் பெருங்கற்கால அல்லது வரலாற்றுத் தொடக்க காலப் பண்பாட்டுக்குரியனவாக உள்ளன. அதில் மூடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட கற்கள் கூட இறந்தவருக்காக அமைக்கப்பட்ட ஈமச் சின்னத்தின் முக்கியத்துவத்தைப் புலப்படுத்துவதாக உள்ளது. இவை ஒவ்வொன்றும் 2 அல்லது 1 அடி நீள அகலத்தில் நன்கு வடிவமைக்கப்பட்ட முருக கற்களாகும். வட்டமான கட்டிடப்பகுதி பெரும்பாலும் கடலில் இருந்து எடுக்கப்பட்ட கற்களை செயற்கையாக வடிவமைத்து கட்டியிருந்தாலும் ஈமச்சின்னத்தை மூடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட முருகக் கற்கள் சாட்டிப் பிரதேசத்தின் சுற்றாடலில் காணப்படாத ஒன்றாகும். இவ்வாறான கற்கள் தீவத்தில் நெடுந்தீவுப் பிரதேசத்தில் அதிகமாக இருப்பதால் அங்கிருந்தே இவை கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும் என அவ்வூர் மக்கள் கூறுகின்றனர். இவ்வீமச் ஈமச் சின்னங்களுக்குள் காணப்பட்ட பல வகைப்பட்ட எலும்புகளை ஆய்வு செய்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட உடற்பயிற்சியியல் ஆய்வாளர் இராசேந்திரப்பிசராத் மற்றும் தமிழ்நாடு அண்ணா பல்கலைக்கழக ஆய்வாளரும் அதில் பல்வேறு வயது சார்ந்த மனித எலும்புகளுடன் குதிரையுட்பட சில வகை மிருங்கள், பறவைகள், கடல் உயிரினங்கள் என்பவற்றின் எலும்புகளும் இருப்பதாக அடையாளப்படுத்தியுள்ளனர். இறந்த மனித எலும்புகள் அடக்கம் செய்யப்பட்ட போது கூடவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மனிதன் வாழ்நாளில் பயன்படுத்திய பலவகைப்பட்ட பொருட்களும் சேர்த்து படையற் பொருட்களாக அடக்கம் செய்யப்பட்டிருந்தன. அப்பொருட்கள் பெரும்பாலும் மனித எலும்பைச் சுற்றி பல அளவிலும், பல வடிவங்களிலும் வைக்கப்பட்ட மட்பாட்டங்களில் வைக் கப்பட்டிருந்தன. அவ்வாறு படைக்கப் பட்ட பொருட்களில் பலவகைப்பட்ட மிருக எலும்புகளுடன் ஒரு சில இரும்புக் கருவிகள், பெருமளவிலான களிவிரும்புகள் அலங்காரப் பொருட் களான கல்மணிகள், கைவளையல்கள், தானியவகை, சங்கு, சிற்பி, வேட்டைக் கருவிகள், மருத்துவ உபகரணங்கள் நாளாந்தம் பயன்படுத்திய கறுப்புச் சிவப்பு நிற மட்பாண்டங்கள் உட்பட பலவகைப்பட்ட மட்பாண்டங்கள் என்பவை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. அவற்றுள் மனித எலும்புகளுடன் பெருமளவில் காணப்பட்ட சங்கும், சிற்பியும் இங்கு சிறப்பாகக் குறிப்பிட தக்கன. இவை ஈமச் சின்னம் அமைக்கப் பட்டதன் முக்கியத் துவத்தையும், அக்கால மக்களின் சமய நம்பிக்கையை யும் புலப்படுத்துவதாக கருத இடமுண்டு. ஏனெனில் மனித எலும்புகளுடன் காணப்பட்ட சங்குகள் சிலவற்றில் சிறிய துவாரமிடப்பட்டிருப்பதுடன், அவற் றின் மீது சிலவகை அலங்காரக் கோடு களும் காணப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றை பண்டைய காலத்தில் புழக்கத்தில் இருந்த பிராமி எழுத்தாகக் கருத இடமுண்டு. இயற்கையாகக் கிடைத்த சங்கில் செயற்கையான வடி வங்கள் இடப்பட்டு அவற்றை மனித எலும்புகளுடனும், பண்டைய காலப் பொருட்களுடனும் சேர்த்து அடக்கம் செய்யப்பட்டிருப்பது அக்கால மக்களி டத்திலும் இப் பொருளையிட்டு ஒரு விதமான சமூக, சமய நம்பிக்கைகள் இருந்ததை எடுத்துக் காட்டுகிறது எனக் கருதலாம்.

சாட்டியில் வாழ்ந்த அக்கால மக்கள் வேட்டையாடல், மட்பாண்டம் வனைதல், வர்த்தகம் மற்றும் மீன் பிடித்தல் என்பவற்றை முதன்மைத் தொழிலாகக் கொண்டிருந்திருக்கலாம் என்பதை இறந்தவர்களுடன் சேர்த்து அடக்கம் செய்யப்பட்டுள்ள தொல்லியற் சின்னங்கள் உறுதிப்படுத்துகின்றன. அவற்றுள் வேட்டையாடல் தொடர் பாகக் கிடைத்த சான்றுகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. ஈமச் சின்னம் எனப் பெயரிட்டு அகழ்வாய்வு செய்த குழியில் இருந்து பெருமளவான மான் கொம்பு கழும், மிரு எலும்புகளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அதில் மான் கொம்புகள் ஒவ்வொன்றின் நுனிப் பாகமும் மிகக் கூராகத் தீட்டப்பட்ட அதன் பிற்பாகம் நேர்த்தியாகச் செதுக் கப்பட்டிருந்தன. இவை அக்காலத்தில் சாட்டியில் வாழ்ந்த மக்கள் மிருகங்களை வேட்டையாட அம்புகளாகப் பயன் படுத்தியிருக்கலாம். ஆயினும் இம்மான் கொம்புகள் ஈமச்சின்னத்தில் இருந்து எடுக்கப்பட்டு ஒரு சில மணி நேரத் துக்குள் அவை சிதைவடைந்து விட்ட தால் அவற்றை ஆய்வுக்குழியில் இருந்து எடுத்த நிலையில் தற்போது பாதுகாக்க முடியவில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுடுமண் வளையற் கிணறு**

சாட்டியில் கண்டுபிடித்த தொல்லியற் சின்னங்களுள் சுடுமண் வளையற் கிணறு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. கி.மு 4ஆம் நூற்றாண்டளவில் வட இந்தியாவில் பயன்பாட்டிற்கு வந்த இச்சுடமண் கிணற்றைத் தொல்லியலாளர் பண்டைய நகரமயமாக்கத்தின் குறியீடு என அழைத்தனர். தமிழகத்தில் இவை கி.மு.2ஆம் நூற்றாண்டில் பயன்பாட்டிற்கு வந்ததை அரிக்கமேட்டில் மேற்கொண்ட அகழ்வாய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. ஆயினும் மணற் பாங்கான இடங்களில் நிரை எடுப்பதற்கு இவ்வகையான சுடுமண் கிணறுகள் தற்காலத்திலும் பயன்படுத்தப்படுவதால் இவை காணப் படும் இடங்கள் எல்லாம் பண்டைய வரலாறு கொண்ட இடங்கள் எனக் கூறமுடியாது. ஆனால் சாட்டியில் கண்டுபிடிக்கப் பட்ட சுடுமண் மிகத் தொன்மையான தென்பதற்கு உறுதியான சான்றுகள் காணப்படுகின்றன. இச்சுடுமண் கிணறு காணப்பட்ட இடத்தின் மேற்படையில் சாட்டியின் ஏனைய இடங்களில் காணப் பட்டது போன்று வட்டமாக அமைக்கப் பட்ட ஈமச் சின்னம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. அவ்வீமச் சின்னத்திற்குள் பெருங்கற்கால அல்லது வரலாற்றுத் தொடக்க காலப் பண்பாட்டுடன் தொடர்புடைய பல சான்றுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவ்வீமச் சின்னத்தின் அத்திவாரமாக இச்சுடுமண் கிணறு காணப்பட்டதுடன் அதற்குள்ளும் ஈமச்சின்னத்துடன் தொடர்புடைய சில சான்றுகள் கிடைத்துள்ளன. பெருங்கற்காலப் பண்பாட்டிலோ அல்லது வரலாற்றுத் தொடக்க காலப் பண்பாட்டில் சுடு மண் கிணறுகளை ஈமச் சின்னமாகப் பயன்படுத்தியதற்கு உறுதியான சான்றுகள் கிடைக்கவில்லை. ஆயினும் அண்மையில்



சுடுமண் கிணற்றின் மேற்பாகம்



சுடமண் கிணற்றின் பாகங்கள்

தமிழகத்தில் விழுப்புர மாவட்டத்தில் உள்ள பெருங்கற்கால மையங்களில் சுடுமண் கிணற்றையே ஈமச் சின்னமாகப் பயன்படுத்தியதற்கு சான்றுகள் கிடைத்துள்ளன. இதற்கு தொல்லியலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராதன காலத்தில் கிணறுகள், கழிவு நீர்த் தொட்டி அல்லது சாயத் தொட்டி களாகப் பயன்படுத்திய சுடுமண் கிண றைப் பயன்படுத்த முடியாத நிலையில் அவற்றை அக்கால மக்கள் இறந்தவர் களை அடக்கம் செய்யும் ஈமச் சின்னங் களாகப் பயன்படுத்தியிருக் கலாம் என விளக்கம் கூறியுள்ளனர். இந்த விளக்கம் சாட்டியயில் கண்டு பிடித்த சுடுமண் வளையற் கிணற்றிற்கும் பொருத்தமாக உள்ளது. இச்சுடுமண் கிணறு சாட்டியயில் வாழ்ந்த பூர்வீக மக்களின் நாகரீகச் சிறப்பிற்கும், அக்காலத் தொழில் நுட்பத் திறனுக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது.


**சாட்டியும் உரோம நாடும்**

சாட்டியின் அமைவிடம் பண்டு தொட்டு இங்கு வாழ்ந்த மக்கள் அண்மை யிலுள்ள தென்னிந்தியா மற்றும் மேற் றாசிய, தென்கிழக்காசியா, கிழக்காசிய நாடுகளுடன் நெருங்கிய கடல்சார் வணிகத் தொடர்புகளை ஏற்படுத்தியி ருக்கலாம் என்பதை இங்கு மேற் கொண்ட தொல்லியல் அகழ்வாய்வு, தொல்லியல் மேலாய்வின் போது கண்டு பிடித்த சான்றுகள் உறுதிப்படுத்து கின்றன. அவற்றுள் உரோம நாட்டுடன் கொண்ட வணிகத் தொடர்பு பற்றிய சான்றுகள் இங்கு சிறப்பாகக் குறிப் பிடத்தக்கன. இலங்கையிலும், தென்னிந் தியாவிலும் உள்ள முக்கிய தொல்லியல் மையங்கள் பலவற்றில் இருந்து ரௌலட்டட் எனப்படும் மிகவும் மிரு வான களி மண்ணால் செய்யப்பட்ட மட் பாண்டங்கள் கண்டுபிடிக்கப்பட் டுள்ளன. இவற்றை வடிவமைப் பதற்குப் பயன்படுத்தப்பட்ட களிமண் இலங்கையிலோ அல்லது இந்தியா விலோ காணப்படாததினால் இவ்வகை மட்பாண்டங்கள் கிறிஸ்தவ சகாப்தத் திற்கு முன்னரே உரோம நாட்டிலிருந்து இவை இந்நாடுகளுக்கு இறக்குமதி செய்யப்பட்டன என்பது தொல்லியலா ளர்களின் முடிவாகும். இவ்கை மட்பாண்டங்களை பார்த்து இந்நாடு களில் மட்பாண்டங்களை வடிவமைக் கும் மரபு காணப்பட்டாலும் அவை காலத்தால் சற்றுப் பிந்தியவைகளாக உள்ளன. சாட்டியைப் பொறுத்தவரை இருவகை மட்பாண்டங்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. ஆயினும் உரோம நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மட்பாண்டங்கள் இங்கு கண்டுபிடிக் கப்பட்டிருப்பதைக் கொண்டு இற் றைக்கு 2000 வருடங்களுக்கு முன்னரே சாட்டிக்கும், உரோம நாட்டுக்கும் இடை யில் வர்த்தகத் தொடர்பு ஏற்பட்டி ருந்தமை உறுதியாகத் தெரிகிறது. இங்கு உரோம நாட்டு மட்பாண்டங்கள் மட்டு மன்றி பிற்பட்ட கால அரேபிய, சீன மட்பாண்டங்களும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இச்சான்றுகள் பண்டைய காலத்தில் கடல்சார் வெளிநாட்டு வர்த்தகத்தில் சாட்டிப் பிரதேசம் பெற்ற முக்கியத்துவத்தையும், அக்கால கட் டத்தில் இது நகரமயமாக்கத்திற்கு உட்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலை இருந் திருக்கலாம் என்பதையும் உறுதிப்படுத்து கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மேற்கூறப்பட்ட தொல்லியல் ஆதாரங்களின் அடிப்படையில் சாட்டிக் கிராமத்தில் வாழ்ந்த தொடக்க கால மக்கள் பெருங்கற்காலப் பண்பாட்டிற் குரிய திராவிடர் எனக் கூறலாம். இக்குடி யேற்றம் சாட்டியில் மட்டுமன்றி தீவகத் தின் ஏனைய இடங்களிலும் ஏற்பட்டி ருக்கலாம். இதையே காரைநகரில் கண்டுபிடித்த பெருங்கற்கால மனித எலும்புக் கூடுகள் உறுதிப்படுத்துகின் றன. ஆயினும் இம்மக்கள் எக்காலத்தில் இங்கு வந்து குடியேறினார்கள் என்ப தற்கு மேலும் உறுதியான ஆதாரங்கள் வேண்டும். சாட்டியைப் பொறுத்தவரை பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய தொன்மையான கறுப்புச்-சிவப்பு நிற மட்பாண்டங்கள் தொல்லியல் மேலாய் வின் போது கண்டுபிடிக்கப்பட்டிருப் பது இக்குடியேற்ற காலம் தொன்மை யானதென்பதை எடுத்துக் காட்டுகிறது. ஆயினும் இவ்வாறான மட்பாண்டங்கள் அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஈமச் சின்னங்களிடையே காணப்படவில் லை. கிடைத்த ஒரு சில மட்பாண்டங்கள் கூட மெருகூட்டப்படாத கறுப்புச் சிவப் பு நிற மட்பாண்டங்களாக உள்ளன. இதனால் இதுவரை கண்டுபிடித்த ஈமச் சின்னங்கள் காலத்தால் சற்றுப்பிற் பட்டதாக இருக்கலாம். சிவப்பு எனப் பெயரிடப்பட்ட ஈமச் சின்னத்தில் இருந்து நீள்சதுரவடிவிலான சிறிய செப்புத் தகடு ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இதைப் பேராசிரியர் இரகுபதி கி.மு3ஆம் நூற்றாண்டிலிருந்து தென்னாசியாவில் பயன்படுத்தப்பட்ட தொடக்க கால முத்திரை நாணயம் எனக் கூறுகிறார். இதன் படி ......... எனப் பெயரி டப்பட்ட ஈமச் சின்னங்களில் இருந்து குறியீடுகளும், ஓரிரு பிராமி எழுத்துக் கள் கொண்ட மட்பாண்ட ஓடுகளும் மங்கிய நிலையில் கண்டுபிடிக்கப்பட் டுள்ளன. கி.மு 3ஆம் நூற்றாண்டளவில் பிராமி எழுத்து தோன்ற முன்னர் குறியீடுகள் அக்கால மக்களின் தொடர்பு ஊடகமாக இருந்துள்ளது. ஆயினும் இதன் பயன்பாடு பிற்காலத்திலும்



முத்திரை நாணயம்?



உரோம மட்பாண்டம்



பிராமி எழுத்து?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்த தற்குச் சான்றுகள் உண்டு. அதேபோல் பிராமி எழுத்தின் பயன் பாடும் கி.பி.3ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்து பயன்படுத்தப்பட்டதற்குச் சான்றுகள் உண்டு. ஆயினும் இங்கு கிடைத்த உரோம நாட்டு மட்பாண்ட ஓடுகள் கிமு.2ஆம் நூற்றாண்டளவில் சாட்டிக்கிராமத்தில் மக்கள் வாழ்ந்த தையும் அம்மக்கள் அக்காலத்திலேயே உரோம நாட்டுடன் வணிகத் தொடர்பு களை ஏற்படுத்தி இருந்தனர் என்பதை உறுதிப்படுத்துகின்றன. ஆகவே இச்சான்றாதாரங்களின் பின்னணியில் சாட்டிப் பிரதேசத்தில் இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முன்னர் மக்கள் வாழத் தொடங்கிவிட்டனர் என உறுதியாகக் கூறமுடியும். பெருநிலப்பரப்பில் பூநகரி, மாதோட்டம் போன்ற இடங்கள் தமிழகப் பண்பாட்டை முதலில் உள்வாங்கும் இடங்களாக இருந்தது போல் யாழ்ப்பாணக் குடாநாட்டில் தீவகங்கள் விளங்கியதால் யாழ்ப்பாணத் தின் புராதன குடியேற்றங்கள் பல தீவகங்கள் ஊடாகவும் ஏற்பட்டிருக் கலாம் எனக் கருத இட்முண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்கொடு தீவின் நீர் வளம் மேம்பட.....

*செல்வி. தி.கணேஸ்வரி,*
*காணிப் பயன்பாட்டு திட்டமிடல் உதவியாளர்,*
*பிரதேச செயலகம், வேலணை.*

இலங்கையின் வடபால் அமைந்தது யாழ்ப்பாணம். இது ஏழு சிறுசிறு தீவுகளை தன்னகத்தே கொண்டுள்ளது. இத்தீவுகளிலே "புங்குடுதீவு" இடப்பரப் பளவில் இரண்டாவது பெரிய தீவாகவும், பெருமளவு மக்கள் தொகையைக் கொண்டதாகவும் இது விளங்குகின்றது. இத்தீவின் பிரதான வாயிலாக மூன்று கடல் மைல் தூரமான வேலணை - புங்குடுதீவுப் பாலம் காணப்படுகின்றது. இது கிழக்கே வேலணையையும், தெற்கே நெடுந்தீவையும், தென்மேற்கே நயினாதீவையும், மேற்கே அனலைதீவு, லேடன் தீவு ஆகியவற்றையும் எல்லைகளையுடைய 3380 ஹெக்ரெயர் பரப்பளவைக் கொண்ட பிரதேசமாகக் காணப்படுகின்றது. இப்பிரதேசமானது, புகழ்பூத்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கண்ணகை அம்மன் கோவில், புனித சவரியார் ஆலயம் எனப் பல தெய்வீக தலங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. பல்லுருவக் கடற்கரை அமைப்புடன் கூடிய பல சிறுசிறு இயற்கைத் துறைமுகங்கள் இங்கு காணப்படுவதால் மீன்பிடித் தொழில் செய்வதற்கு உவப்பான பிரதேசமாக இது விளங்குகின்றது.

இற்றைக்கு இரு தசாப்த காலங்களிற்கு முன்பு இப்பிரதேசமானது, பதினைந்திற்கும் அதிகமான நன்னீர்க் குளங்களையும், பல நூறு நன்னீர்க் கிணறுகளையும், சிறப்பாக அமைக்கப்பட்டதும், இயற்கையானதுமான பல உவர்நீர்த்தடுப்புக்களையும் கொண்டு விளங்கியது. அக்காலத்தில் பிரதான பணப்பயிர்களான புகையிலை, வெங்காயம், மிளகாய் என்பனவும், கால போகப் பயிர்ச்செய்கை, மானாவாரி நெற்செய்கை உபஉணவுப் பயிர்ச் செய்கை என்பனவும் மேற்கொள்ளப்பட்டன. இப்பிரதேச மக்கள் நிலத்தடி நீரையே தமது சகல தேவைகளுக்கும் நம்பியிருந்தனர். ஒவ்வொரு வருடமும் பெரும்போக காலமான ஐப்பசி முதல் தை வரை மழை கிடைக்கின்றது. ஏனைய காலங்களில் வரட்சியாகவே காணப்படுகின்றது. இப்பிரதேச நிலப்பரப்பு ஒப்பீட்டளவில் சமாந்தரமாக இருப்பதனால் கிடைக்கின்ற மழையில் 30 தொடக்கம் 35 வீத நீர் மண்ணின் மேற்பரப்பின் ஊடாக வழிந்தோடிக் கடலில் விழுகின்றது. பயன்தரு மரங்களும் நிழல் மரங்களும், பெருமளவில் குடிமனைகளை அண்டியும், இயற்கைத் தாவரப் போர் வையாகவும் காணப்படுவதனால் 40 தொடக்கம் 45 வீதமான நீர்த்தாவர வேர்களினால் அகத்துறிஞ்சப்பட்டு நீர்பற்று திறனை அதிகரிக்கச் செய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஞ்சிய மழைநீர் புவிமேற்பரப்பில் உள்ள பாறைகளின் துவாரங்களினூடாக இப்புவியீர்ப்பு விசையின் காரணமாக கீழ்நோக்கி ஊடுவழிந்த நிலத்தடி நீராக தேக்கி நன்னீர் வில்லைகளாக உவர்நீரில் மிதக்கின்றது. மழை பெய்யும் போது மயோசின் சுண்ணாம்பு கல்லினூடாக கீழிறங்கும் நீர், நன்னீர் வில்லையின் சேமிப்பினை அதிகரிக்க இடமுண்டு. இப்புங்குடுதீவுப் பிரதேசத்தில் சேகரிக்கப்பட்ட மழைநீர் செல்வனே அமையப்பெற்ற மூன்று நீர் வெளியேற்றுப் பாதைகளாக சோனக ஓடை, மினியன் வாய்க்கால், கள்ளியாறு ஆகியவற்றினூடாக கடலினுள் செல்கின்றது. அத்துடன் கடல் நீர் உட்புகுவதை தடுத்து நிறுத்தும் பாரிய உவர்நீர்த்தடுப்புக்கள் காணப்பட்டு பெருமளவு மழைநீர் சேகரிக்கப்பட்டது.

இத்தீவின் பெரிய உள்ளக நன்னீர் நிலைகளாக பெரிய கிராய்க்குளம், சின்னக்கிராய்க்குளம், இறுவிட்டியாக்குளம் ஆகியன சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டும், மேலதிகமான நீர் கால்வாய்களினூடாக வெளியேறி இம்மூன்று வெளியகற்று வழியினூடா கவே கடலினுள் கலந்தது. இப்பிரதேசத்தில் நன்னீர் கிடைக்கும் இடங்களாக கண்ணகை அம்மன் கோவிலடி, நாவலடி, சங்கத்தார்கேணி ஆகியவை காணப்பட்டதுடன், சிறந்த விவசாயப் பிரதேசங்களாகவும் விளங்கியது. அது மட்டுமன்றி, ஆங்காங்கே பரவிக் காணப்பட்ட சிறு குளங்கள் நன்னிலையில் பராமரிக்கப்பட்டு பிரதான மானாவாரிப் பயிர்செய்யும் நிலங்களாக பிட்டிவயல், மாவுதிடல், தெங்கந்திடல் ஆகியன காணப்பட்டன. சோனகஓடை, மினியன்வாய்க்கால் நீரோடு பாதைகளை அண்மித்த பகுதிகளில் மக்கள் செறிந்து வாழ்ந்ததுடன், உப உணவுப் பயிர்களான குரக்கன், உழுந்து, பயறு, எள்ளு என்பனவும், சிறுபோகப் பயிர்களும், வீட்டுத்தோட்டமும், மரக்கறி செய்கையும் கணிசமான அளவில் மேற்கொள்ளப்பட்டது.




இறுப்பிட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு.பொன்னையா கனகசபை, வயது 87 என்பவர் "அக்காலத்தில் வரகு, உழுந்து, பயறு, குரக்கன், நெல், உபஉணவு என்பன வர்த்தக நோக்கில் பயிரிடப்பட்டு அதன் மூலம் பெருமளவு வருமானத்தை ஈட்டியதாகவும், பயிர் செய்கைக்குத் தேவையான நீர் அக்காலத்தில் கிடைத்ததாகவும் கூறினார். ஆயினும் இரு தசாப்த காலங்களாக நடந்து வரும் யுத்தம் இப்பிரதேசத்தின் வாழ்க்கைத் தரத்தினை அழித்தும், மக்களைப் புலம்பெயரச் செய்தும், அபிவிருத்தியைக் குறைத்தும், பனை, கடல், உடற்தாக்கத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளாக்கியுள்ளது. அத்துடன் படையினரால் பாதுகாப்புக் கருதி வெட்டியளிக்கப்பட்ட பெருமளவு பயன்தரு மரங்களும், சீரற்ற, கவனிப்பாரற்ற நிலைப்பாட்டினாலும், இந்நீரோடும் பாதைகள் முற்று முழுதாக அழிவடைந்துள்ளன. குறிப்பாக இப்பிரதேசத்தின் கோதீவினை அண்மித்த இயற்கை வனப்போர்வை குடியேற்றத்திட்டத்திற்காக வெட்டிய கற்றப்பட்டு தொடர்ச்சியாக ஏற்பட்ட மண்ணரிப்பினாலும், நீரோடும் பாதைக ளினதும், நன்னீர் நிலைகளினதும் கொள்ளளவு குறைவடைந்து மழைநீர் கடலுடன் கலக்கும் சாத்தியப்பாடு அதிகரித்தது. அத்துடன், நீர் வெளியேற்றப்பட்ட வழிகளும், தடுப்பணைகளும் பாரிய சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டமையால் பெருக்குக் காலத்தில் கடல்நீர் நிலப்பரப்பினுள் ஊடுருவியது.



கள்ளியாறு வாய்க்கால்



சோனகனோடை வாய்க்கால்

இதனால் பெருமளவான நன்னீர் நிலைகள் உவர்நீராக மாறின. தற்பொழுது மக்கள் தமக்குத் தேவையான நீரினை பெருமளவு பணத்தினை செலவழித்து பெற்றுக் கொள்வதுடன், மிகவும் வரட்சியான காலப்பகுதியில் சமூகசேவைத் திணைக் களத்தின் உதவியுடன் பிரதேச செயலகத்தினால் வழங்கப்படும் இலவச குடிநீரைப் பெற்றுக் கொள்கின்றனர். அத்துடன் வடஇலங்கை சர்வோதயம், வேலணை பிரதேச சபை போன்றனவும் நியாய விலையில் நீரை வழங்கி வருகின்றன. அதுமட்டுமன்றி சில பாரம்பரிய முறைகளும் காணப்படு கின்றன.




ஊரைதீவைச் சேர்ந்தவரான திரு.வே.கனக சபை என்பவர் மாட்டு வண்டில் மூலம் மக்களிற்கு நியாய விலையில் நீரை விநியோ கித்து வருகி ்றார்.

ஆனால் ம கவும் ஏழ்மை நிலையில் காணப்படும் மக்கள் தமது அடிப்படை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்த்தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையிலேயே உள்ளனர். தற்போது வேலணை பிரதேச செயலகத்தின் முயற்சியினாலும், நியாப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் சோளகனோடை மினியன் வாய்க்கால் புனரமைக்கப்பட்டு கடந்த வருடம் பெருமளவான நீர் சேகரிக்கப்பட்டது.




இறுப்பிட்டி உவர்நீர்த்தடுப்பணை



புனரமைக்கப்பட்ட மினியன் வாய்க்கால் நீர்வெளிச்செல்லும் வழி

இதனால் பெரும்பாலான நன்னீர்க் கிணறுகளின் நீர்மட்டம் உயர்வடைந்ததும், உவரின் தன்மை குறைவடைந்ததும் அவதானிக்கப்பட்டுள்ளது. ஆயினும், இப்பிரதேசத்தை மீளக்கட்டியெழுப்பவும், நிலத்தடி நீர் வளத்தை பாதுகாக்கவும் வேண்டிய பொறுப்பு எமக்குண்டு. இதற்கு துறைசார் நிபுணர்களது ஆலோசனைகளுடன் கள்ளியாறு மினியன் வாய்க்கால் இணைப்பு வீதி கட்டுமானப் பணிகளை நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி உவர்நீர்த்தடுப்பணை, கள்ளியாற்று நீரை வெளியேற்றும் வழி அமைக்கப்படின் நன்னீர் மட்டத்தினை அதிகரித்து விவசாயத்தினையும், பயன்தரு மரங்களினதும் செய்கையை மீள விருத்தி செய்து இப்பிரதேசத்தினை செழிப்புறச் செய்து மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த முடியும். கோடி கோடியாய் கோயிலுக்குள் புதையும் பணத்தில் ஒரு பகுதியை இவ்வாறான திட்டத்திற்குள் செலவு செய்ய முடிந்தால்.....

# பண்டிதர் கா.பொ.இரத்தினம் அவர்கள் பற்றி.....

BA,BOL முன்னாள் பாராளுமன்ற அங்கத்தவர் (கிளிநொச்சி – ஊர்காவற்றுறை)

பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை,
புவியியற்துறை தலைவர்,
யாழ் பல்கலைக்கழகம்.

திரு. பண்டிதர் கா.பொ.இரத்தினம் யாழ் வேலணையில் புகழ்பூத்த விவசாய குடும்பத்தில் உதித்தவர். இவரது தந்தையார் விவசாயம் செய்வதிலும், விலங்கு வேளாண்மையிலும் சிறந்து விளங்கினார். 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்த இவர், சிறந்த கல்வி கிடைக்க தனது பிள்ளைகளுக்கு வழி செய்தார். பண்டிதர் அவர்கள் கோப்பாய் பயிற்சி கலாசாலையில் பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறி ஆசிரியராக கடமை ஆற்றிக்கொண்டு பண்டிதர் பரீட்சையிலும் சித்தி எய்தினார். இவர் தமிழில் புலமையுடன் இருந்த போதும், ஆங்கிலம் பயில வேண்டும் என்ற அவாவின் காரணமாக London பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாக BA பட்டம் பெற்றார். பின்னர் இவர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆசிரியராகவும் அரசாங்க திணைக்களங்களில் சேர்ந்து மொழி தொடர்பான விடயங்களிலும் கடமையாற்றினார். மேலும் மலேசியா சென்று விரிவுரையாளராக கடமையாற்றினார்.

திருக்குறளில் அதிகம் ஆர்வம் கொண்ட இவர், திருக்குறள் மகாநாடுகளை நடாத்தி வந்தார். இதனால் கொழும்பு, யாழ்ப்பாணம், மற்றும் வடகிழக்கு பகுதிகளில் இவரின் பேரும் புகழும் பெருகியது. இப்பின்புலத்தில் அரசியல் நாட்டம் கொண்டு - தமிழரசுக் கட்சியுடன் இணைத்து கொண்டு கிளிநொச்சி தொகுதி உறுப்பினராக பாராளுமன்றம் சென்றார்.

1965ஆம் ஆண்டு தேர்தலில் வென்று கிளிநொச்சி தொகுதி பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். தமிழ்மொழி அமுலாக்கல் தொடர்பாகவும் தமிழ் மொழிசார் விடயங்களில் கூடிய ஆர்வம் கொண்டு பாராளுமன்றில் காலத்திற்குக்காலம் கேள்விகளை எழுப்பி தனது தமிழ் பணியை சிறப்புற மேற்கொண்டார். இதனால், தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இவருக்கு தனிமதிப்பு ஏற்பட்டது.

1970ஆம் ஆண்டு கிளிநொச்சியிலிருந்து ஊர்காவற்றுறை தொகுதியில் போட்டியிட்டு பாராளுமன்றம் சென்றார். ஏனெனில் தீவுப் பகுதி மக்களுக்கு குறிப்பாக வேலணை மக்களுக்கு சேவைசெய்யும் விருப்பம் காரணமாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்காவற்றுறையில் போட்டியிட விரும்பினார். தனது பிறந்த ஊரான வேலணை பகுதி மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்பதே அவரது அவா ஆகும்.

இவரின் பாராளுமன்ற உழைப்பின் கடும் முயற்சியின் காரணமாக இன்றைய வேலணை தெற்கு பிரிவு உதவி அரசாங்க அதிபர் பிரிவாக அன்று மாற்றம் பெற்றது. அத்துடன் வேலணை பங்களாவடியில் அரச காரியங்களை அமைய வழிசெய்தார். இடப்பெயர்வுக்கு முதல் பங்களாவடி ஒரு சிறுநகர் நிலையை எய்தியது. பின்னர் இவர் 1977ஆம் ஆண்டு ஊர்காவற்றுறை தொகுதியில் மீண்டும் போட்டியிட்டு மிகப் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று பாராளுமன்ற உறுப்பினராக தெரியப்பட் டார். 1983ஆம் ஆண்டு வரை பாராளுமன்ற பிரதிநிதியாக இருந்தார். பின்னர் இந்தியாவின் தமிழ் நாடு சென்று சிலகாலம் அங்கு வாழ்ந்து, ஈழத்தமிழ் மக்களின் இன்னல்களை தமிழ்நாட்டிலும், உலகிற்கும் எடுத்து இயம்புவதில் முன்னின்று உழைத்த ஒருவர் ஆவார். அரசியல் யாப்பின் 6ஆவது திருத்தத்தின் மூலம் தமிழர் விடுதலை கூட்டணி ஒட்டுமொத்த பதவி இழந்தது அப்பொழுது இவரது பதவியும் இல்லாது போனது. தமிழ் ஆசிரியராகவும், அரசியல்வாதியாகவும் இருந்து தமிழ் தேசியத்தை முன்னெடுத்ததில் கடந்த அரை நூற்றாண்டு மேலாக பெரும் பணி ஆற்றியிருக்கின்றார்.

இன்று 90ஆவது வயதை கடந்த நிலையில் கொழும்பில் வாழ்ந்து வருகின்ற பொழுதிலும், கிராமப்பற்றுடனும், அம்மக்களின் நல்வாழ்வு தொடர்பாக ஈடுபாடு கொண்டவராக திகழ்கின்றார். அவரை தமிழ்மக்களாகிய தீவக மக்களால், குறிப்பாக வேலணை மக்களால் கௌரவிக்க வேண்டிய பெரியவர் ஆவார். அவர் மேலும் சில காலங்கள் வாழ்ந்து, தமிழ் பணியை தொடர வேண்டும் என்பதே எங்களின் அவா ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை விருது பெறுவோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் பொன்னுத்துரை பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்

(B.A Hons) Ph.D Durham) (All Island J.P)

இவர் வேலணை கிழக்கைச் சேர்ந்த ஆசிரியத்தம்பதிகளாகிய பண்டிதர் அ.பொன்னுத்துரை திருமதி நாகரத்தினம் பொன்னுத்துரை ஆகியோரின் புதல்வராவர். இவர் ஆரம்பக் கல்வியை கரம்பன் சண்முகநாதன் வித்தியாசாலை யிலும் ஆரம்ப இடைநிலைக் கல்வியை ஊர்காவற்றுறை அந்தோனியார் கல்லூரியிலும், உயர் நிலைக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலும் பயின்றார். பின் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பையும், இங்கிலாந்து பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டப்படிப்பையும் பெற்றார்.

1965இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புவியியல் துறையில் உதவி விரிவுரையாளராக நியமனம் பெற்று பின் விரிவுரையாளராகவும், சிரேஷ்ட விரிவுரையாளராகவும் பதவி உயர்வு பெற்றார். 1980 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் புவியியல் பேராசிரியராக நியமிக்கப்பட்டு, இன்று சிரேஷ்ட புவியியல் பேராசிரியராகக் கடமை புரிகின்றார். புவியியல் பேராசிரியராக 25 வருடங்கள் பணி புரிந்த பெருமை இவருக்குரியது. இவர் 40 வருடங்களுக்கு மேற்பட்ட கற்பித்தற் பணி மூலம் பெரும் எண்ணிக்கையான புவியியல் கற்கை நெறி மாணவர்களை உருவாக்கியுள்ளார். வடகிழக்கு மாகாண அபிவிருத்தி, வளர்ச்சி குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதி வெளியிட்டுள்ளார். இவர் புவியியல் பாடத்துடன், திட்டமிடல், சமூக இயல் நெறிகளிலும் புலமைத்துவம் பெற்று கற்பித்தலிலும், ஆய்வுகளிலும் ஈடுபட்டு வருகிறார்.

இவர் கல்விப் பணியுடன், கல்வி நிர்வாகத்திலும் ஈடுபட்டு வந்தார். 10 வருடங்கள் புவியியல் துறைத் தலைவராகவும் ஆறு வருடங்கள் கலைப்பீடாதிபதியாகவும், ஏழு வருடங்கள் பல்கலைக்கழகத் துணைவேந்தராகவும், 2000 ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் சம்மேளனத்தில் தலைவராகவும், அர்ப்பணிப்புடன் பணியாற்றினார். மற்றும்சமூக சேவை, சமூக அபிவிருத்தி மேம்பாட்டில் அக்கறை கொண்டு பணியாற்றி வருகிறார். RRAN இயக்குனர்களில் ஒருவராகப் பணியாற்றிய பேராசிரியர் கல்வி, ஆய்வு, கல்வி நிர்வாகம் சம்பந்தமாகப் பல வெளிநாடுகளுக்கு இங்கிலாந்து, கனடா, சுவீடன், நோர்வே, டென்மார்க், ஜேர்மனி, பிரான்ஸ், இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், சிங்கப்பூர், சைப்பிரஸ், கானா போன்ற நாடுகளுக்குச் சென்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது கல்வி, சமூக சேவைகளைக் கௌரவிக்கும் முகமாக, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தால் "ஒப்புரவாளர்" கலைப்பட்டம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

தீவுப்பகுதிகளுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருக்கும் இவர் வேலணையின் மைந்தனாகத் தன்னைக் கூறிக் கொள்வதில் மிகப் பெருமை கொள்வார். இவர் தீவுப் பகுதியின் குறிப்பாக வேலணைக் கிராமத்தின் வளர்ச்சியிலும், அபிவிருத்தியிலும் மிக்க ஈடுபாடு கொண்டு உழைத்து வருகிறார். இவரின் தந்தை பண்டிதர் அ.பொன்னுத் துரையின் வழியில் தீவக வளர்ச்சியில் பங்கு கொண்டு உழைத்து வருகிறார்.

துணைவேந்தர் பதவி வகித்து, பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து எங்கள் மண்ணுக்கும் சமூகத்திற்கும் புகழ் சேர்க்கும் பேராசானை வேலணை பிரதேச செயலக கலாசாரப் பேரவை "கலைஞானப்புரவலர்" எனும் பட்டம் அளித்து கௌரவிப்பதால் மகிழ்ச்சி அடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் இலக்கியக் கலாநிதி விநாயகமூர்த்தி சிவசாமி அவர்கள்

B.A(Lon),B.A,M.A.(cey)

இவர் 1933 இல் புங்குடுதீவிற் பிறந்தார். இவர் தமிழ், இலக்கியம், சித்த வைத்தியம், சோதிடம், சைவம், இசை முதலான பல துறைகளில் சிறந்து விளங்குகின்றார். இதற்கு அவருடைய பரம்பரையடிப்படையும் முக்கிய காரணமாக இருந்திருக்கின்றது. இவர் தனது ஆரம்ப இடைநிலைக் கல்வியினை புங்குடுதீவிலுள்ள பாடசாலைகளில் கற்றதோடு யாழ்ப்பாணக் கல்லூரியிலும் பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் தொடர்ந்து கற்றுப் பட்டதாரியானார்.

இவர் யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டதாரித் திணைக்களத்தில் நீண்டகாலம் தமிழ் விரிவுரையாளராக பணிபுரிந்துள்ளார். இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஒப்பந்த விரிவுரையாளராக இருந்த காலப்பகுதியில் லண்டன் பல்கலைக்கழக சமஸ்கிருத சிறப்புக் கலைமாணிப் பட்டத்தினையும் பெற்றுக் கொண்டார். சுயபாசையில் உயர்கல்வி வந்த போது சமஸ்கிருதம், வரலாறு ஆகிய பாடங்களை தமிழிலே கற்பித்தவர்களில் இவரும் ஒருவர். இவர் யாழ்ப்பாணக் கல்லூரியின் "கலைக்கொத்து" மாணவர் மன்றத்தின் போஷகராகவும், யாழ்ப்பாணத் தொல்லியற் கழகத்தின் நெறியாளராகவும் நீண்டகாலம் சிறப்பாகச் செயற்பட்டிருக்கிறார்.

6.10.1974இல் யாழ்ப்பாண வளாகம் தொடங்கிய போது முதலில் இவர் வரலாற்று விரிவுரையாளராகவும், ஓராண்டின் பின்னர் சமஸ்கிருத விரிவுரையாளராகவும், தொடர்ந்து சிரேஷ்ட விரிவுரையாளராகவும், இணைப் பேராசிரியராகவும், பணிபுரிந்து 1998இல் ஓய்வு பெற்றார். இதே காலகட்டத்திலே சமஸ்கிருதத்துறைப் பொறுப்பு விரிவுரையாளராகவும்(1976 -1978), துறைத் தலைவராகவும் (1979 -1998) விளங்கினார்.

இவர் சமஸ்கிருதம், வரலாறு, தமிழ், இந்துப் பண்பாடு, தொல்லியல் (குறிப்பாகச் சாசனவியல், நாணயவியல்) நுண்கலைகள் (குறிப்பாக நடனம், இசை, சிற்பம், ஓவியம்) முதலிய பல அறிவியல்களிலும் ஈடுபாடு கொண்டவர். இவை பற்றித் தமிழிலும், ஆங்கிலத்திலும் பல கட்டுரைகளும், நூல்களும் எழுதியுள்ளார். இவற்றுள்ளே **திராவிடர் - ஆதி வரலாறும் பண்பாடும்** (1973) எனும் நூல் இவரின் தொடக்ககால நூல்களில் ஒன்றாகும். இந்நூலுக்குத் தவத்திரு தனிநாயக அடிகளார் முன்னுரையளித்து ஊக்குவித்துள்ளார். இந்நூல் நூலாசிரியரின் வரலாற்றுப் பேராசிரியரான இலக்கிய கலாநிதி ஹேமச்சந்திரராய் என்பவருக்குச் சமர்ப்பணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டுள்ளது. இதன்பின் **ஆசிரியர் ஆதி வரலாறும் பண்பாடும்** எனும் நூலும் (1976), **Some aspects of south Asian Epigraphy 1985), பரதக்கலை** (1988, 2001, 2005) **தென்னாசியக் கலை மரபில் நாட்டிய சாஸ்திர மரபு (1992), Sans kri Tradition of the Sri_Lankan Tamil** (1992), சமஸ்கிருத இலக்கியச் சிந்தனைகள் (1989 இதனை இவர் தம்முடைய சமஸ்கிருதப் பேராசான் இலக்கிய கலாநிதி கா.கைலாசநாத குருக்களுக்குச் சமர்ப்பணம் செய்துள்ளார்) **தென்னாசிய சாஸ்திரீய நடனங்கள் - ஒரு வரலாற்று நோக்கு** (1998), **தமிழும் தமிழரும்** (1998) **இந்துப் பண்பாடு அன்றும் இன்றும்** (2005) முதலிய நூல்களை இவர் வெளியிட்டுள்ளார். ஓய்வு பெற்ற பின்னரும் கல்வி சார்பான சில செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார்.

இவர் தாம் பிறந்த பிராந்தியமான தீவகம், குறிப்பாகப் புங்குடுதீவு பற்றி வரலாற்று ரீதியிலான சில கட்டுரைகளை எழுதியுள்ளார். தீவகம் பற்றித் தமிழிலே வரலாற்று ரீதியில் எழுதப்பட்டுள்ள கட்டுரைகளில் இவை குறிப்பிடத்தக்கவை. தம்முடைய தாயாரின் நினைவாக **தீவகம்** எனும் சிறு நூலையும் (1991) வெளியிட்டுள்ளார்.

இவருடைய அறுபதாவது அகவையில் சேவைநலன் பாராட்டு முகமாக "அபிஜ்ஞானமாலா" எனும் சிறப்பு மலர் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் இவருடைய கல்விசார் செயற்பாடுகளுக்குச் சில விருதுகளும், பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன. இவருடைய **சமஸ்கிருத இலக்கியச் சிந்தனை** எனும் நூலுக்கு இலங்கை அரசாங்கத்தின் சாஹித்திய பரிசு வழங்கப்பட்டுள்ளது. **தென்னாசிய சாஸ்திரீய நடனங்கள்** எனும் நூலுக்கு வடக்கு கிழக்கு மாகாண கல்வி, கலாசார அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பரிசிலும் இவருக்குக் கிடைத்துள்ளது. பல்கலைக் கழகத்திற்கு இவர் ஆற்றியுள்ள பங்களிப்புகளுக்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெள்ளிவிழாப் பட்டமளிப்பின் போது இவருக்கு கௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார். மேலும் இவரின் கல்விசார் செயற்பாடுகளுக்காக வடக்கு கிழக்கு மாகாண இலக்கியப் பெருவிழாவின் போது இவருக்கு (2002) ஆளுநர் விருது வழங்கப்பட்டுள்ளது.

தாம் மிகவிரும்பிய ஆசிரியத் தொழிலைச் "செய்யும் தொழிலே தெய்வம்" என்ற குறிக்கோளுடன் ஏற்றுக் கொண்டு இன்றுவரை கற்றல், கற்பித்தல் ஆராய்தல், எழுதுதல் எனப் பலமுனைகளில் இவர் தொடர்ந்து செயற்பட்டு வருகிறார்.

இத்தகு சிறப்புக்கள் நிறைந்த பெருந்தகை[illegible]த வேலணைப் பிரதேச செயலக கலாசாரப் பேரவை "கலைஞானப்புரவலர்" எனும் [illegible]ட்டமளித்துக் கௌரவிப்பதில் பெருமகிழ்வடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி ஸ்ரீரங்கராணி இராமச்சந்திரன் அவர்கள்

இவர் 11.11.1946 இல் மண்டைதீவிற் பிறந்தார். இசைத்துறையில் சங்கீதரத்தினம் டிப்ளோமா பட்டத்தினை பெற்றுக் கொண்ட இவர் சங்கீத ஆசிரியர் நியமனம் பெற்று மண்டைதீவு மகாவித்தியாலயம், புங்குடுதீவு சுப்பிரமணிய வித்தியாலயம் என்பவற்றில் கடமையாற்றினார். இவர் 1990 தொடக்கம் 1995வரை சேவைக்கால ஆசிரிய ஆலோசகராகவும் 1999 இலிருந்து இன்று வரை தீவக வலய அழகியற் பாட உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி வருகின்றார்.

இவர் எமது பிரதேசத்தில் தொழில் நிமித்தம் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர் குழுவினருடன் இணைந்து தமிழ் மொழித்தினம், பண்ணிசைப் போட்டி எங்கள் பாடசாலை (யாழ். எப். எம்) முதலான பாடசாலையுடன் தொடர்புபட்ட நிகழ்ச்சிகளில் மிக நீண்டகாலம் சேவையாற்றியுள்ளார். இவர் தனது இசைக்கச்சேரிகளையும் பண்ணிசையினையும், ஈழத்தின் தலைசிறந்த ஆலயங்கள் பலவற்றிலும் வழங்கியிருக்கின்றார். அத்துடன் வட இலங்கை சங்கீதசபை, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, க.பொ.த. உயர்தரச் செய்முறைப் பரீட்சை முதலான சங்கீதப் பரீட்சைகளுக்கு பிரதம பரீட்சகராக கடமையாற்றி வருகின்றார்.

இவருடைய இத்தகைய சேவைகளைப் பாராட்டி வேலணைப் பிரதேச கலாசாரப் பேரவை "கலை வாருதி" எனும் பட்டத்தினை வழங்கிக் கௌரவிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு.சுப்பிரமணியம் வில்வரத்தினம் அவர்கள்

கவிஞர் வில்வரத்தினம் 07.08.1950 இல் புங்குடுதீவிற் பிறந்தார். இவர் நீண்ட காலம் தனது சொந்த ஊரான புங்குடுதீவில் வாழ்ந்தாலும் தவிர்க்க முடியாத யுத்தம் காரணமாக திருகோணமலையில் வாழ்ந்து வருகின்றார். பரந்துபட்ட வாசிப்புத் தேடலும், மொழியாற்றலும், குரல் வளமும் கைவரப்பெற்ற இவர்; கவிதை, விமர்சனம், நாடகம் முதலான துறைகளில் ஈடுபட்டு வருகின்ற போதிலும் கவிதையே இவருக்கு வாலாயமான துறையாக காணப்படுகின்றது.

இவர் இதுவரை, அகங்களும் முகங்களும், காலத்துயர், காற்று வழிக் கிராமம், நெற்றிமண், உயிர்த்தெழும் காலத்திற்காக வாசிகம் எனும் ஆறு கவிதைத் தொகுதியை வெளியிட்டுள்ளார். இவருடைய கவிதைகளும், பாடல்களும் ஒலிப்பேழை களாகவும் வெளியிடப்பட்டுள்ளன.

இவருடைய காற்றுவழிக் கிராமம் எனும் நூலுக்கு சுதந்திர இலக்கிய அமைப்பிற்கான "விபவி" சிறந்த கவிதைத் தொகுதிக்கான விருதையும், பரிசையும் வழங்கியுள்ளது. இவரது நாடகங்களான தோப்பிழந்த கதை, அலைவாய்க்கரையில், ஒளிவளர் காலம் என்பவற்றிற்கு அகில இலங்கைத் தமிழ்த் தினப் போட்டிகளில் தங்கப் பதக்கம் கிடைத்திருக்கின்றது. இவருடைய கலை இலக்கிய முயற்சிகளை பாராட்டி இலங்கை ஜனாதிபதியின் "கலாசூரி" விருதும் (2005) புங்குடுதீவு விழிப்புணர்வு ஒன்றிய விருது - 2000 (சுவிற்சலாந்தில் வைத்து) என்பதும் வழங்கப்பட்டுள்ளது.

இவருடைய கவிதைகள் சில ஆங்கிலம், சிங்களம், பிரெஞ்சு, கன்னடம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இவர் கலை இலக்கிய ஆர்வலர்களின் வேண்டுதலுக்கிணங்கி சுவிஸ், இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், நோர்வே, இந்தியா ஆகிய நாடுகளுக்கு "கலை உலா" சென்று திரும்பியிருக்கிறார்.

இவருடைய கவிதைகளும், நாடகங்களும் தனது சொந்த ஊரான புங்குடுதீவை குறிப்பாகவும் தீவுப் பகுதியை சிறப்பாகவும் பேசுகின்றன. அவர் தன் வேரையும் வேரடி மண்ணையும் விட்டுப் பிரிந்திருக்க நேர்ந்தாலும் அவருடைய இலக்கியப் பதிவுக்கும் உணர்வுப் பகிர்வுக்கும் பரிந்துரை செய்து "கலைவாருதி" எனும் பட்டம் வழங்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாநிதி செல்லையா திருநாவுக்கரசு அவர்கள்

இவர் 24.09.1950 இல் அல்லைப்பிட்டிக் கிராமத்திற் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியினை அவ்வூர்ப் பராசத்தி வித்தியாசாலையிலும் இடைநிலைக் கல்வியினை வேலணை சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்திலும் பயின்றார். இவருடைய கல்வி கலைமாணி, முதுகலைமாணி, முதுகல்விமாணி, கலாநிதி என பல்கலைக்கழகத்திற் தொடர்பப்பட்ட அதேவேளை பண்டிதர், சைவப்புலவர் என மரபுத் தடத்திலும் பின்பற்றப்பட்டு வந்திருப்பது சிறப்பான அம்சமாகும். இவர் இலங்கை ஆசிரிய சேவையிலும் அதிபர் சேவையிலும் கல்வி நிர்வாக சேவையிலும் பணியாற்றிய காலத்தில் கல்வி டிப்ளோமா முகாமைத்துவ டிப்ளோமா முதலான தொழித்தகைமை சார் பட்டங்களையும் பெற்றிருக்கின்றார். தற்பொழுது கோப்பாய் ஆசிரியை பயிற்சி கலாசாலை விரிவுரையாளர்.

இவருடைய கலை இலக்கிய செயற்பாடுகள் எடுத்து நோக்கினால், இரண்டு மேடை நாடகங்களை எழுதியதுடன் பல நாடகங்களில் நடித்திருக்கின்றார். கவிதைகள், கட்டுரைகள், இலக்கிய விமர்சனங்கள், நூலாய்வுகள் முதலான பல விடயங்களை பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள் முதலானவற்றில் எழுதியிருக்கின்றார். இவர் அல்லையூர்க் கவிஞர் க.வ. ஆறுமுகத்தினுடைய "அடைப்புக்குறிகள்" "பக்கவாத்தியமில்லாத பாட்டுக்கச்சேரி" எனும் இரண்டு கவிதை நூல்களை பதிப்பித்திருக்கின்றார். இவர் தமிழ் மொழி, சைவசமயம், கல்வியியல் , இலக்கியம், முதலான துறைகளில் கருத்தரங்குகள் சொற்பொழிவுகள் முதலானவற்றை நடத்தி வருகின்றார்.

இவர் தனது கலாநிதிப்பட்டத்திற்காக ஈழத்தெழுத்தாளர் கே. டானியலினுடைய படைப்புக்களை ஆய்வு செய்தார். அந்த ஆய்விற்கு பேராசிரியர் சு.வித்தியானந்தனின் நினைவு பரிசினையும், இதனை "டானியலின் எழுத்துக்கள்" எனும் நூலாக வெளியிட்டு வடக்கு கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினரின் இலக்கிய நூற்பரிசு - ஆய்வு நூலுக்கானது - 2004 என்பதனையும் பெற்றிருக்கின்றார்.

இவ்வாறாக இவர் எமது பிரதேசத்திற்கும் தமிழ்ச் சமூகத்திற்கும் ஆற்றிவருகின்ற சேவைகளை மனங்கொண்டு வேலணைப் பிரதேச செயலக கலாசாரப் பேரவை "கலை வாருதி" எனும் பட்டத்தினை வழங்கிக் கௌரவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு மருதன் கந்தையா அவர்கள்

இவர் 1946.10.01 இல் சரவணைக் கிராமத்திற் பிறந்தார் இவர் இசை நாடகக் கலைஞர், நெறியாள்கை செய்பவர். 1964 இல் இருந்து நாடகத்துறைக்குப் பங்காற்றி வருகின்ற இவர் நந்தனார், அரிச்சந்திர மயான காண்டம், சாம்ராட் அசோகன் ஆகியவற்றை இயக்கியும் நடித்தும் இருக்கின்றார். சிந்திய ரத்தங்கள் சீரழிந்ததில்லை, இதயக் குமுறல் ஆகிய நாடகங்களை எழுதியும் இருக்கின்றார்.

இவர் தனது கிராமத்தில் திருவள்ளுவர் நாடகமன்றம் எனும் ஒன்றை ஆரம்பித்து அதன் தலைவராகவும் நீண்டகாலம் இருந்து வருகிறார். 2002இல் இவர் தனது மன்றத்தினரால் நடிக்கப்பட்ட அரிச்சந்திர மயான காண்டம் எனும் நாடகத்தை வவுனியா மாத்தறை முதலான இடங்களுக்கு கொண்டு சென்று மேடை ஏற்றியிருக்கின்றார். நாடகத்துறையுடன் கும்மி கோலாட்டம் காவடி, கிராமிய நடனம் முதலானவற்றை பயிற்றுவித்தும் வருகிறார்.

இவருக்கு பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக்கழகம் தனது பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி நடத்திய இசை நாடகப் போட்டி - 2004 இல் சிறந்த நடிகருக்கான "மரபுக் கலைச் சுடர்" எனும் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

இவர் இப்பிரதேசத்திற்கும் கலைக்கும் ஆற்றிய பங்களிப்பை மனங்கொண்டு "கலை வாருதி" பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசிக்கவி சிவகுரு பரராசசிங்கம் அவர்கள்

இவர் 18.08.1937 அன்று நயினாதீவிற் பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியை நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை அவ்வூர் மகாவித்தியாலயத்திலும் பயின்றார். இவர் கொழும்பு, வத்தளை, உணுப்பிட்டி எனுமிடத்திலிருந்த நல்லம்மா பாடசாலையில் இரண்டு ஆண்டுகள் தற்காலிக ஆசிரியராக பணிபுரிந்தார். ஆயினும் 1960 இல் எழுதுவினைஞர் சேவையில் இணைந்து இவரது மும்மொழி ஆற்றல் காரணமாக முப்பது ஆண்டு காலம் அரசாங்க அச்சகத்தில் தொடர்ந்து பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

இவருடைய கலை இலக்கிய முயற்சிகள் அவர் பாடசாலைக் கல்வியை மேற்கொண்ட காலத்திலே ஆரம்பித்திருக்கின்றது. இவர் தனது கவிதைகளை மாணவர் மன்றங்களில் வாசித்ததையும், அவற்றின் சிறப்பினையும் இனங்கண்ட பண்டிதை.திருமதி புனிதவதி அவர்கள் அந்த மாணவர் மன்றத்தில் "பரராசசிங்கக் கவிஞன்" என்பதன் சுருக்கமான "பசிக்கவி" எனும் பட்டத்தினை வழங்கிக் கௌரவித்தார். இவர் அரசாங்க சேவையில் இருந்த காலத்திலும், ஓய்வு பெற்ற பின்னரும் பாரம்பரியக் கலைகளான கரகம், காவடி, கிராமிய நடனம் மற்றும் வில்லுப்பாட்டு முதலானவற்றை பயிற்றுவிப்பதில் சிறப்பான பங்காற்றியுள்ளார். கவி அரங்குகளிலும், வில்லுப்பாட்டு முதலான நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றியுள்ளதுடன் கவியரங்குகளை தலைமை தாங்கி நடாத்தியும் உள்ளார்.

இவருடைய கவிதைகள் நூலுருவாக்கம் பெறாத போதிலும் இவர் எழுதிய பக்திப் பாடல்களான "பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா திருவூஞ்சற்பா" நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் பஜனைப் பாடல்கள் என்பன நூலுருப் பெற்றுள்ளன. இவரது கவிதைகளும், பாடல்களும் சிறுசஞ்சிகைகளிலும், தினசரிகளிலும் வெளி வந்துள்ளன.

இவர் இந்து சன்மார்க்க சங்கம், விவேகானந்த சபை, திவ்விய ஜீவன சங்கம், நயினாதீவு கலாசாரப் பேரவை முதலான நிறுவனங்களிலும் நயினாதீவிலுள்ள பல ஆலயங்களிலும் முக்கிய பதவிகளை வகித்து வந்துள்ளார்.

இவர் இவ்வாறாக தனது ஊருக்கும் மக்களுக்கும் ஆற்றிய சமய சமூக கலை இலக்கிய சேவைகளைப் பாராட்டி வேலணைப் பிரதேசசெயலக கலாசாரப் பேரவை கலைவாருதி எனும் பட்டத்தினை வழங்கி கௌரவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதிடக் கலையுடன் "சைவமும் தமிழையும்" வளர்த்தவர்

# திரு.சிவப்பிரகாசம் இரத்தினசபாபதி அவர்கள்

யாழ்ப்பாணத்தின் தென்பகுதியில் சப்ததீவுகளில் ஒன்றாக மிளிரும் புங்குடுதீவு என்னும் புகழ்பூத்த பொன்னகரில் இறப்பிட்டி எனும் பதியில் சோதிட விற்பன்னர் குருமூர்த்தி சாஸ்திரியார் பரம்பரையில் உயர்திரு.சிவப்பிரகாசம் இரத்தின சபாபதி (இளைப்பாறிய அதிபர்) பிறந்தார். இவர் தன்னுடைய ஆரம்பக்கல்வியை புங்குடுதீவு ஸ்ரீ சித்தி விநாயகர் வித்தியாலயம், சுப்பிரமணிய வித்தியாலயம் என்பவற்றில் கற்றார்.

இவர் சமயப்பழக்க வழக்கத் திலும் பண்ணிசையிலும் சோதிடக்கலையிலும் ஈடுபாடு கொண்ட வராக திகழ்ந்தார். இவர் ஆசிரியர் தொழில் புரிந்து அதன் மூலம் உயர்வு கண்டு அதிபராகக் கடமை புரிந்தார். எமது கிராமத்தின் ஆலயங்களில் நடைபெற்ற திருவிழாக்கள் கும்பாபி ஷேகம் முதலானவற்றில் தானே முன்னின்று ஓதுவார் மூர்த்தியாகத் தொழிற்படுவார். இதனால் "ஓதுவார்" என எல்லோராலும் அழைக்கப்பட்டார். அத்துடன் தன்னிடம் கல்வி கற்கின்ற மாணவர்களிற்கு பண்ணுடன் பஞ்சபுராணம் ஓதும் முறைமையை கற்றுக் கொடுத்தார்.

சமுதாயத்திற்கு அளப்பரிய சேவைகள் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் புங்குடுதீவில் உள்ள மூத்தவிநாயகர் புலம் ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயம், தல்லையம்பற்று சங்கர மூர்த்தி முருகமூர்த்தி ஆலயம் மடத்துவெளி ஸ்ரீ பாலசுப்பிரமணியர் ஆலயம், ஊரைதீவு பாணாவிடை சிவன் ஆலயம், (ஈழத்து இராமேஸ்வரம்) முதலான ஆலயங்களில் பல்வேறு பதவிகள் வகித்து சேவைகள் பல புரிந்தார்.

இவரது சேவையை உணர்ந்த புங்குடுதீவு மக்கள் இவருக்கு ஓர் பட்டமளிப்பு விழா எடுக்க வேண்டும் என்று அவாக்கொண்டிருந்தனர். இதற்கமைய நல்லூர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமி அவர்களை நாடி புங்குடுதீவு ஸ்ரீ முருகமூர்த்தி ஆலய நிர்வாகச் சபையின ரூடாக "தமிழ் வேத பண்ணிசைச் செல்வர்" எனும் சிறப்புப் பட்டத்தை வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இவர் தனது கிராம மக்களிற்கு செய்த சேவையாலும் தெய்வத்தின் மீது கொண்ட நம்பிக்கையாலும் பண்ணிசை மூலம் அளவுகடந்த ஞானத்தைப் பெற்றமையாலும் இன்று தனது எண்பதாவது அகவையில் கூட சுகதேகியாக வாழ்ந்து வருகிறார். அவரது பண்ணிசையின் கலீர்! என்ற ஒலியும் எல்லோர் உள்ளத்திலும் கலந்திருக் கின்றது. இவ்வாறான சிறப்புகள் மிகுந்த ஒருவரை வேலணை பிரதேச செயலக கலாசாரப் பேரவை "ஞானவாருதி" எனும் பட்டமளித்து கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளமார்ந்த நன்றிகள்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

நன்றி மறப்பது நன்றன்று. இது ஆன்றோர் அருளிய அருள்வாக்கு. இதற்கு அமைவாக எமது பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்படும் கலை இலக்கியப் பெருவிழா. தொடர்பாக உருவாகி உங்கள் கைகளிற் தவழ்ந்து கொண்டிருக்கும், இச்சிறப்பு மலரின் ஆக்கத்திற்கு உதவிய அனைத்துள்ளங்களையும் உளமார நினைவிருத்திக் கொள்கின்றோம்.

அந்த வகையில் இச்சிறப்பு மலரினை மிகக் குறுகிய காலத்தில் வெளிக்கொணர ஆத்ம பலத்தை அளித்த இறைவனுக்கு முதலில் நன்றியுடன் கரம் கூப்பி வணக்கம் செலுத்துகின்றோம். அத்தோடு இம்மலரின் கைங்கரியத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த எமது பிரதேச செயலர் மு. நந்தகோபாலன் அவர்களுக்கு உளமார்ந்த நன்றிகளை தெரிவித்து நிற்கின்றோம்.

இச்சிறப்பு மலருக்கு அணிகலன்களாக வாழ்த்துரைகளை வழங்கி கௌரவித்த யாழ் மாவட்ட அரச அதிபர் திரு. க.கணேஷ், மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஆ.சிவசுவாமி மற்றும் வடக்கு கிழக்குமாகாண பிரதம செயலர் சி.ரங்கராஜா, பிரதி பிரதமசெயலர்(நிதி) திரு.கே.மகாலிங்கம் எமது பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் அவர்களுக்கும் எமது உளம் நிறைந்த நன்றிகள் உரித்தாகுக.

மிகுந்த சிரமத்தின் மத்தியிலும் இச் சிறப்புமலரினை பயனுள்ளதாகிடும் பொருட்டு சிறப்பான கட்டுரைகளையும் ஆக்கங்களையும் குறுகிய காலத்துள் தந்துதவிய கல்விபெருந்தகைகளான பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் வி.சிவசாமி, கலாநிதி ப.புஸ்பரட்ணம் மற்றும் பிராந்திய முகாமையாளர் தேசிய நீர் வடிகாலமைப்புச்சபை, பொறியியலாளர் திரு.தி.பாரதிதாசன் அவர்களுக்கும் காணி பயன்பாட்டு திட்டமிடல் அபிவிருத்தி உதவியாளர் செல்வி.தி.கணேஸ்வரி அவர்களுக்கும் எமது சிறப்பான நன்றிகளை தெரிவித்து நிற்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இம்மலரினை உருவாக்கி வெளியிடுவதற்கு தம்மாலான சிறப்பான காத்திரமான நிதிசார் அன்பளிப்புக்களை வாரி வழங்கிய எமது தீவக வர்த்தகப் பெருமக்களுக்கும், ஏனையவர்க்கும் எமது பிரதேச செயலர் சார்பிலும் விழா மற்றும் மலர்க்குழு சார்பிலும் இதயம் நிறைந்த நன்றிகள்.

இம்மலர் சிறப்புற வெளிவருவதற்கு எம்மோடு தோள்நின்றுழைத்த சக உத்தியோகத்தவர்கள் அனைவர்களுக்கும் மக்கள் பெருந்தகைகளுக்கும், கலைஞர்களுக்கும் எமது அகம் மகிழ்ந்த நன்றிகள்.

இறுதியாக இவ்விதழ் மலர பெரிதும் துணைநின்ற மலர்க்குழுவினருக்கும், ஏனைய அனைத்து நெஞ்சங்களுக்கும் மற்றும் இதனை சிறந்த முறையில் குறுகிய காலத்தில் அச்சிட்டு இதழாக எமக்களித்த கரிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தாருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

**விழாக்குழு சார்பில்,**
**கு. அற்புதராஜா,**
**கலாசார நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமி
## புடைவையகம்

நவநாகரிக ஆடவர், நங்கையர்க்கேற்ற
சகலவிதமான
ஆடைத்தெரிவுகளுக்கும் நீங்கள்
நாட வேண்டிய ஸ்தாபனம்


**இல 155, 156, நவீன சந்தை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.**



# SAIRAM
## CONTRACTORS

We are specialist in ........

*Buildings*
*Roads & Highways*
*Wates Supply & Drainage*


Vankalavady Junction,
Velanai west,
Velanai.

Hotline : 0777 696856



# குமரன் சில்க்ஸ்

முகூர்த்தப் பட்டுப்
புடவைகளுக்கு
மகாராசியான
ஸ்தாபனம்






சல்வார் கிற்
இந்தியன்
சாரி வகைகள்
பேபி சூட் சிறுவர்
சிறுமியருக்கு ஏற்ற
றெடிமேட்
ஆடைகள்





**No.291, Main Street,
Colombo - 11**


# T.M.B
## Enterprise

General Merchants &
Commission Agents
Wholesale Dealers in Rice &
Ceylon Produce

T.P: 2338239

**No.18,4th Cross Street,
Colombo-11**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# Vijeya Enterprise

*Imports & Exports, General Merchant*
*& Commission Agents*

*Freight Forwarding & Clearing Agents*

**Officer :**
**183, Dr. E. A -- Mawatha,**
**Colombo - 06.**

**37, 4th Cross Street,**
**Colombo - 11,**
**Sri Lanka.**



**அமரர்**

# S.K.செல்லையா

# ஞாபகார்த்தமாக

K.K.S றோட், வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேணி களஞ்சியம்

கோமாதா எங்கள் குல மாதா

**VENE STORES**

பசுவதை ஒழிப்போம்

Importers &
Transporters Wholesale &
Retail Dealers



**165, K.K.S Road,**
**Jaffna.**

**Tel:021 222 2661**
**021 222 2046**

# பூபாலசிங்கம் புத்தகசாலை

**Importers, Exporters, Sellers & Publishers of Books, Stationers and News Agents**

Head office:
No.340,202 Sea Street,
Colombo - 11 Sri Lanka.
Tel:2422321
Fax:2337313
E-mail:pbdho@sltnet.lk


No.4A,Hospital Road,
Bus Stand, Jaffna.

Branches:
No.309 A - 2/3,Galle Road,
Colombo - 06, Sri Lanka.
Tel:4-515775 - 2504266



# லிங்கன்
## கிறீம் ஹவுஸ்

*Lingan Cream House*



இல. 119,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



T.P:021-2227327

# நாதன்ஸ்
## பாட்டா

சகல விதமான காலணிகளை
நியாயவிலையில் பெற்றுக் கொள்ள
நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்




இல. 17, நவீன சந்தை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்


# மா. புனிதவதி



## ஞாபகார்த்தமாக

புங்குடு தீவு,
10ஆம் வட்டாரம்.

# திரு. த. சிவராசா



புங்குடுதீவு,
10ஆம் வட்டாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

K.Yogeswaran

# Sun Printers

**Special of quality printing**

Dealer Indian & Logal
Wedding Cards,
Visiting Cards & Etc.

**44 A, Kathiresan Street,**
**Colombo - 13,**
**Sri Lanka.**

---

# இருதுமதி விடுதி

No.201, Gall Road,
Colombo - 3

---

# இராமநாதன் வைத்திலிங்கம்

(முன்னாள் கிராம அலுவலர்)

**புங்குடு தீவு,**
**11ஆம் வட்டாரம்.**

---

Distributors **dash**

# Mayoora
## Gift Centre

Dealers in fancy Goods,
Gift Items, Electronic
Electrical & House
Hold Goods

**MULTICHEMI**
**INTERNATIONAL LTD.**

*No.14, New Market*
*(Out Side)*
*Power House Road,*
*Jaffna.*

T.P:021- 2222084

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BOC

* விடத்துக்களை அடுத்து வைத்திய காப்புறுதியாக உச்சவரமபு ரூ. 75.000 வழங்கப்படும். பிள்ளை திடீர விபத்துக்குட்பட்டால் அல்லது காப்புறுதிக் காப்பில் சேர்க்கப்பட்டிருக்கும் 10 நோய்களில் ஏதாவது ஒன்றினால் பாதிக்கப்பட்டிருந்தால் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட பின்னர் பின்வரும் தகைமைகளைப் பெற முடியும். பிள்ளை அரசாங்க ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுவதாயின் நாள் ஒன்றுக்கு ரூ 300 அடிப்படையில் ஆகக் கூடியது. 30 நாட்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படும். (விபத்து ஏற்பட்ட தினத்திற்கு 6 மாதங்களுக்கு முன்னர் இருந்து தொடர்ந்தும் வைப்பில் ஆகக் குறைந்தது ரூ 5.000 அல்லது அதற்கு கூடுதலான தொகை இருக்க வேண்டும்.)
காப்புறுதி கொடுப்பனவை பெறுவதற்காக செய்யப்படும் சகல விண்ணப்பங்களையும் குறைந்த பட்சம் 6 மாதங்களுக்குள் சம்பந்தப்பட்ட கிளைகளுக்கு அறிவிக்க வேண்டும். இந்த வைப்பு தொடர்பான தகைமைகள் விதிமுறைகள் ஆகியவற்றில் மாற்றம் செய்தல் புதிய விதிமுறைகளை சேர்ப்பது அல்லது அவற்றில் திருத்தங்களை செய்யும் அதிகாரம் இலங்கை வங்கிக்கு இருக்கிறது.

*கூடுதல் வட்டி. சாதாரண சேமிப்பு வைப்புக்களை விட 1 % கூடுதல் வட்டி.

* ரூ .500.000 உச்ச வரம்புக்கு காப்புறுதிக் காப்புபிள்ளையின் சார்பில் வைப்பை ஆரம்பித்தவர் முற்றாக ஊனமடைந்தால் அல்லது மரணமடைந்துவிட்டால் வைப்பில் உள்ள ஆகக் குறைந்த தொகையின் 10 மடங்கு காப்புறுதி கொடுப்பனவாக வழங்கப்படும். (ஒரு பிள்ளைக்கு ரூ.500.000 மற்றும் ஒருவர் ஆரம்பித்த சகல வைப்புகளுக்கு ரூ 1.000.000 உச்சவரம்பு காப்புறுதி காப்பு அவர் 70 வயதாகும் வரை கொடுக்கப்படும்) அவர் முற்றாக ஊனமடைந்தால் வைப்பில் உள்ள ஆகக் குறைந்த தொகையில் 5 மடங்கு காப்புறுதி கொடுப்பனவாக வழங்கப்படும்.

* 18 வயதுக்கு குறைந்த ஒரு பிள்ளையின் சார்பில் வ்யது வந்த ஒருவர் இந்த வைப்பை ஆரம்பிக்கலாம்.

* தேசத்தின் மலர்களைப் போன்ற தங்கமான சிறுவர்களின் எதிர்காலத்திற்காக தாய் / தந்தை அல்லது அவர்கள் மீது அன்பு செலுத்துபவர்கள் ஆரம்பிக்கக் கூடிய சிறுவர் வைப்பு இதுவாகும்.

* ரூ.10.000க்கு புலமைப்பரிசில் வருடம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் ரண்கெகுளு வைப்பை கொண்டிருக்கும் பிள்ளைகளுக்கு இந்த வாய்ப்பு (பரீட்சைக்கு தோற்றும் தினத்தில் பிள்ளையின் வைப்பில் ஆகக் குறைந்தது ரூ.2.500 இருத்தல் அவசியம்)

*நாடெங்கிலும் நடைபெறும் வருடம் 5 ஹப்பனா புலமைப்பரிசில் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்வதற்காக வாய்ப்பு

*18 வயதாகும் போது பிள்ளைக்கு விசேட தகமைகளுடன் 18 + இளைஞர் சேமிப்பு வைப்பில் இணைய முடியும்.

*** ரண் கெகுளு வைப்பை ஆரம்பிப்பது எப்படி?**

* ஆகக் குறைந்த வைப்பு ரூ. 200 உங்களுக்கு கிடைக்கும். ரண்கெகுளு அன்பளிப்பு வவுச்சர் மூலமும் வைப்பை ஆரம்பிக்கலாம்.

* இன்றே அருகிலுள்ள இலங்கை வங்கிக்கு போங்கள் உங்கள் பிள்ளையின் சார்பில் ரண்கெகுளு சிறுவர் சேமிப்பொன்றை ஆரம்பியுங்கள்.

V.ராமநாதன்

# பாலமுருகன்


## அரிசி ஆலை

தரமான பலசரக்குப் பொருட்களின் சங்கமம்

தானியவகை, அரிசி, மிளகாய்,

சிறந்த முறையில்

அரைத்துக் கொடுக்கப்படும்



**D5 உருத்திரபுரம்,**


**கிளிநொச்சி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org